STAR PUPIL ACADEMY

கீழ்காணும் வகுப்புகளுக்கு மட்டும் மாசி "28" வரை அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆண்டு: 3, 4, 5, 6, 7
1989 G. C. E. (O/L)
A/L புவியியல்
S. ஜேசுதாஸ் B.A. (Hons)

வார முரசொலி
VARAMURASOLI

ஸ்ரார் பியூப்பில் அக்கடமி
(கல்வியங்காடு)

G. C. E. (O/L)
ஆசிரியர் குழு

கணிதம்: S K. ஜீவமோகன்
விஞ்ஞானம்: J. R சுரி
சமூகக்கல்வி: S ஜேசுதாஸ்
தமிழ்: காந்திதாஸ்
ஆங்கிலம்: N. ஜேம்ஸ்

முரசு 3 ஒலி ஞாயிற்றுக்கிழமை 26-02-1989 (மாசி 15) றஜப் 19 விலை ரூபா நான்கு

● மாத்தளையில் வீதியில் சென்ற மூன்று பொலிஸார் நேற்று சுட்டுக்கொலை

# ஜே.வி.பியின் அதிரடி தாக்குதல்

# தெற்கில் மீண்டும் அதிகரிப்பு

## பாராளுமன்ற கூட்ட ஆரம்பத்தை குழப்ப திட்டம் மேற்கொள்ளப்படுவதாக தகவல்

ஜே. வி பி இயக்கத்தினரின் திட்டமிட்ட அதிரடித்தாக்குதல்கள் தென் பகுதியில் மேலும் விஸ்தரித்து வருவதாகவும், அடுத்த சில வாரங்களில் இது மேலும் அதிகரிக்கலாமென்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களுக்குக் கிடைத்த ரகஸிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய பாராளுமன்றத்தின் முதற் கூட்டம் மார்ச் ஒன்பதாம் திகதி நடைபெறவிருப்பதையொட்டி நாட்டில் பல குழப்பங்களை இவர்கள் ஏற்படுத்தலாமென்று பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

புதிதாக தெரிவான எம். பிக்கள், அவர்கள் குடும்ப உறவினர்கள், கட்சியின் முக்கிய பிரதானிகளுக்கும் மிகக் கடுமையான பாதுகாப்பு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் தலைமைப்பீடம் பொலிஸாருக்கும், இணைப்பு அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்று நண்பகல் மாத்தளையில் மூன்று ஸ்ரீலங்கா பொலிஸார் ஜே. வி. பியினரின் திடீர் தாக்குதலுக்கு பலியாகினர். ரோந்து

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீமாவோ எதிர்க்கட்சி தலைவர் பல கட்சிகளும் வரவேற்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவியாக தெரிவு செய்யப்படுவதற்கு பல எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது தலைவியை எதிர்க்கட்சித் தலைவராக்க ஏகமனதாக எடுத்த முடிவை பல கட்சிகள் பாராட்டியுள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஸ்ரீமாவோவின் தெரிவை ஆதரித்ததுடன் "1950, 1960 களில் நடை

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை தவணை நாட்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

க. பொ. த. சாதாரண தரப்பரீட்சை மற்றும் அப்பரீட்சை விடைத்தாள் திருத்தல் வேலை என்பவற்றுக்காக அரசாங்க பாடசாலைகள் இத்தவணை சில தினங்கள் மூடப்படுவதினால் இவ்வருடத்திற்கான பாடசாலை தவணை நாட்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காகமூடப்படும் பாடசாலைகள் மேமாதம் இரண்டாம் திகதி இரண்டாம் தவணைக்காக மீண்டும் திறக்கப்படும். ஜூலை மாதம் இருபத்தியொராம் திகதி இரண்டாம் தவணை விடுமுறைக்காக

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## தேடுதல், சோதனை வேலைகள் வவுனியாவில் இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியா நகரில் இந்திய இராணுவத்தினரின் சோதனைகளும், தேடுதல் நடவடிக்கைகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள வீதிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த வேகத் தடைகளும் அகற்றபட்டுள்ளன.

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் அமைந்திருந்த இந்தியப் பொலிஸாரின் முகாமும் அங்கிருந்து விலக்கப்பட்டுள்ளது மேலிடத்து உத்தரவையடுத்தே இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை வவுனியா கச்சேரி வளவில் இந்தியப்படையின் காவல் நிலையம் ஒன்றும் புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

தடைமுகாம் தளர்வினையடுத்து இங்குள்ள தமிழ்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வெலிகடை சிறையிலுள்ள தமிழ் இளைஞர் வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்பட வேண்டும்

வெலிகடை சிறைச்சாலையில் இருக்கும் நூற்றுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் மீதான வழக்குகளை உடனடியாக நடத்தி அவர்களின் விடுதலையை துரிதமாக்கும்படி ஈரோஸ் அமைப்பின் தலைவர் திரு. பாலகுமார் இலங்கை இந்திய அரசுகளைக் கேட்டுள்ளார்.

இவர்களை விடுவிப்பதன் மூலம் தமிழ் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த வழி

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி பிரேமதாஸ வேண்டுகோள் வறுமை ஒழிப்புத்திட்டத்துக்கு அனைவரது உதவியும் தேவை

வறுமையினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தையும் நாம்கருத்திற்கொள்ள வேண்டும். தேயிலை, றப்பர், தெங்குப் பொருள் சம்பந்தமாக ஆராய்ச்சி மேற்கொள்ள பல நிலையங்கள் உண்டு. ஆனால் வறிய மக்களின் நிலைமைகளை ஆராய ஒரு நிலையமாவது ஏற்படுத்தப்படவில்லையே.

இவ்வாறுபண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஜனசவிய வறுமை ஒழிப்பு மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ஆர்.

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கப்பல் மூலம் ஹஜ் யாத்திரை

இலங்கையிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு கப்பல் மூலம் செல்வதற்கு வசதிசெய்து கொடுப்ப

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா பகுதி கிராமங்களில் மூன்று இளைஞர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவுக்கு அருகில் உள்ள மூன்று கிராமங்களில் நேற்று அதிகாலை மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் இக்கிராமங்களில் பீதி ஏற்பட்டுள்ளது

அண்மையில் பூஸா முகாமிலிருந்து விடுதலையான தவராசா (கோவில்குளம்), நாகேஸ்வரன் என்ற பாடசாலை மாணவன் (கல்வீரன்குளம்), வையமலை சந்திரசேகரன் (சிதம்பரபுரம்) ஆகிய மூவருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

இதேவேளை வவுனியா, யாழ்ப்பாணம் வீதியில் ஒயந்தைக்கு அருகில் செல்லத்துரை (42) என்ற நபரின் சடலம் சூட்டுக்காயங்களுடன் மின்கம்பத்துடன் கட்டப்பட்டுக் காணப்பட்டது.

## 'கைஸ்' அமைப்பின் உதவித்திட்டம்

கொக்குவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டு இராணுவ திட்டத்தை இந்தியா மீண்டும் கேட்கிறது

(புதுடில்லி)

சார்க் உறுப்பு நாடுகளிடையே அமைதியைப் பராமரிப்பதற்கான ஆறு நாடுகளினதும் கூட்டு இராணுவம் அமைக்கும் திட்டத்தை சார்க் நாடுகள் நிராகரித்து விடக்கூடாது என இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, மாலைதீவு போன்ற உறுப்பு நாடுகளிடையே தோன்றிய அமைதியின்மை போன்று ஏனைய நாடுகளிடையேயும் குழப்பம் தோன்றும் சாத்தியக் கூறுகளை தவிர்ப்பதற்கு இப்படியான கூட்டுப் படை அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இத்துடன் இந்து சமுத்திர பிராந்தியத்தை பாதுகாக்கவும், உறுப்பு நாடுகளிடையே உள்ள சந்தேகத்தை தீர்க்கவும் கூட்டு இராணுவம் அவசியம் எனக் குறிப்பிட்டார்.

சார்க் நாடுகளிடையே இந்தியாவே பெரிய இராணுவத்தைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். திறந்த பல்கலைக்கழக சட்டமாணிக் கல்விநெறிக்கு தெரிவான பதினேழு பேர்

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்தோரில் பதினேழு பேர் மட்டுமே பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த பயிற்சி நெறியை கற்பதற்கு சுமார் இருநூறுபேர் விண்ணப்பித்திருந்தனர் இவர்களுக்கான தெரிவுப்பரீட்சை கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆறும்திகதி கொழும்பில் நடைபெற்றிருந்தது. திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள

→ 16 ஆம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**நாடு: புறாணே, ஓமான்**

வேலை: கூலியாட்கள் முதல் சிவில் மெக்கா னிக்கல் தொழில்நுட்பவியலாளர் வரை

எந்த வேலையானாலும் உங்கள் தகுதிக்கேற்ற வேலைகளைத் தெரிவு செய்வதற்கு!

**சம்பளம்: 300 - 700 U. S. D. வரை**

விரும்பியவர்கள் கீழ்க்காணும் ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும்

கடவுச்சீட்டு (Bond)
மார்பளவு புகைப்படம் 7
முழு அளவு கலர்ப்படம் 1
வைத்திய அத்தாட்சி
அனுபவ சான்றிதழ் 2

உணவு வதிவிடம் இலவசம்

3 வருட காப்புறுதியுடன் சென்று நாம் இழந்த செல்வங்களை மீண்டும் ஒன்று சேர்ப்போம். எந்தக் காரணங்களை முன்னிட்டும் கொழும்பு செல்லத் தேவையும் இல்லை. பணவிரயமும் இல்லை. காலம் வீணாவதும் இல்லை. விரும்பியவர்கள் என்னைச் சந்திக்கவும்.

**இடம்: ஓமான்**

**Juki** மெஷின் ஒப்பரேற்றர்ஸ் 100 பேர் தேவை
8 மணித்தியால வேலை சம்பளம்: 125 U. S. D

மேலதிக வேலையுமுண்டு
சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு
அனுபவச் சான்றிதழுடன் வரவும்

## ட்ரவல்ஸ் மகேந்திரா

யாழ். முகவரி:
155 (5), குருசோ வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

கொழும்பு முகவரி:
112, ஶ்ரீ கதிரேசன் வீதி
கொழும்பு-13

02365

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

**B. A. - 90**

ஆரம்பம்: 26. 2. 89

**B. A. - 89**

(ஏப்பிரலில் நடைபெற இருக்கும் பரீட்சைக்கான)

வினா-விடை மெய்யியல்

வேல் சிவானந்தன்

ஆரம்பம்: 26. 2. 89 (9 மணி)

02426

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 • 01 • 1928



மறைவு: 18 • 02 • 1979

## அமரர் சு. கார்த்திகேய ஐயர்

(நடராச ஐயர்)

திதி: 26. 02. 1989

புகழ் கார்த்தி கேயப் புனிதசிவாச் சார்ய
திகழ் தெய்வப் பாதமலர் சேர்ந்து – தகவுற்றுய்
நன்று புரிந்துவந்த நாயகனே! நின்முகத்தை
என்று நாம் காண்போம் இனி.

கல்லூரியடி
கந்தரோடை
சுன்னுகம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

02404

## வருடாந்த மாநாடு

நல்லூர் வட்டார பாடசாலைகளின் சைவநெறி தொண்டர் கழக வருடாந்த மாநாடு மார்ச்மாதம் ஐந்தாம் திகதி காலை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் வட்டாரப்பாடசாலைகள் ஒவ்வொன்றும் கழக உறுப்பினர் ஒன்பது பேர் வீதம் இந்த மாநாட்டுக்கு அனுப்புதல் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

# ECALOM (மனோகரா சந்தி)

★ **March 25 - Oral Exam**

(வாய்மொழிப் பரீட்சை)

ஆரம்பம்: 26-2-89 2 மணி (சனி ஞாயிறு வகுப்புகள்)

அரசாங்க ஊழியர்களுக்கு

★ **சிங்கள வகுப்புகள்**

ஆரம்பம்: 26-2-89 3-00 மணி

ஆசிரியர் திரு. மரியதாஸ்

02428

# அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்புக் காட்டுக்கள், புதுமனைப் புகுவிழா அழைப்புக் காட்டுக்கள், விருந்துபசாரக் காட்டுக்கள், அறிமுக அட்டைகள் அடிக்கும் காட்டுக்கள், பிறந்ததின அழைப்புக்காட்டுகள், காகிதாதிகள், எழுதுகருவிகள், மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.

02423

# பிறந்தநாள் வாழ்த்து



## குகன். அனோ சுஜிதன்

ஊர்காவற்றுறை,தாரந்தனை தெற்கைச் சேர்ந்த குகநாதன்-ரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அனோ சுஜிதன் தனது நான்காவது பிறந்த தினத்தை இன்று (26-2-89) தனதில்லத்தில் கொண்டாடுகிறார். சுஜி பல்கலையும் பெற்று சிறப்புற்று வாழ டடி, மம்மி, அப்பா, அம்மா, அம்மம்மா, ஜேர்மனியிலுள்ள அத்தை, மாமா, மச்சாள்மார். மயூரி-கஸ்தூரி, கரம்பன் சிந்து மச்சாள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் வாழ்த்துகின்றனர்.

02394

# சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள டெலிக்கா வான் (இலக்கம் 34 ஶ்ரீ 7028) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சுரேன் வீடியோ சென்ரர், 147, நாவலர் வீதி,யாழ்ப்பாணம். 02416

### விற்பனைக்கு

5 பரப்புடன் கூடிய வீடு அளவெட்டி கிராமியவங்கிக்கு அருகாமையில். தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: K.செல்லத்தம்பி, நீதிமன்ற வீதி, மல்லாகம். 02430

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் பொது, தனிப்பட்ட, சிறு குழுக்கள், வீட்டு விஜயம் (House Visit) ஆகியவற்றிற்கான வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: I.E.T கல்வி ஸ்தாபனம் (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி) 11 B. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 02203

## திருமணம்

### மணமகன் தேவை

28 வயது நிரம்பிய Science Trained ஆசிரியைக்கு யாழ் இந்து வேளாள குல மணமகன் தேவை பட்டதாரிகள்.Technical Assistants,Accountnats விரும்பத்தக்கது. சீதனம் வீடும் கொடுக்கப்படும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 246, முரசொலி யாழ்ப்பாணம். 02218

## புத்தகம்

ஆனந்தன் எழுதும் "காலங்கள் மாறும்" சமூக நாவலை சுவைத்து படிக்கும் வாசகர்களே; இந் நாவலாசிரியரின் "ராதையின் நெஞ்சம்" உயிரோட்டமான சமூக நாவல் 200 பக்கங்கள். 30/- ரூபா. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 02130

### சமூகக் கல்வி

வெளிவந்து விட்டது விற்பனையாகின்றது சமூகக் கல்வி ஆண்டு10,ஆண்டு11 (புதிய பாடத்திட்டம்). ஆக்கியோன்: ந. தர்மபாலன். சகலபுத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். 02208

# ஒவ்செற் பிளேற் மேக்கர் உடன் தேவை

**(Offset Plate Maker)**

அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ரூபா 4000/= மாதாந்தம் வழங்கப்படும். ஒவியத்தில் ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி பெற விரும்பினால், 3 மாத பயிற்சிப் பணம் ரூபா 500/= கொடுத்துப் பயிற்சி பெறலாம். பயிற்சியில் சித்தி எய்தினால் மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும். பயிற்சிக்கு 4 பேர் மட்டும் தேர்வாகும். இருபாலாரும் 5-3-1989-க்கு முன் விண்ணப்பிக்கலாம்.

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்

02384

வார முரசொலி

# ஜேர்மனிக்கு படையெடுக்கும் அகதிகளின் தொகையில் பத்து வீதத்தினர் சிறுவர்கள்

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் அடைக்கலம் கோருவோருக்கு அதிகளவிலான வசதிகளையும் சலுகைகளையும் வழங்கி வந்த மேற்கு ஜேர்மனியில் அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்காக விரைவில் புதிய சட்டமூலமொன்று அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ஹெல்மட் ஹோல் தலைமையிலான கூட்ட ரசாங்கத்திற்கு நீண்டகாலமாகவே நெருக்குதல்கள் வந்த போதிலும் இதுவரை காலமும் அரசாங்கம் இவ்விடயத்தில் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. எனினும் அண்மையில் மேற்கு பெர்லினில் நடைபெற்ற தேர்தலொன்றில் ஆளும் கூட்டணி தோல்வியடைந்ததையடுத்து இவ்விடயத்தில் அரசாங்கத்திற்கு நெருக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இதையடுத்தே அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதென மேற்கு ஜேர்மனி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அகதிகளுக்கென பெருமளவு பணம் செலவிடப்படுவதால் உள்நாட்டு வளர்ச்சிக்குப் போதிய பணம் செலவிடப்பட முடியாதுள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வந்துள்ளன.

## சிறுவர்களுக்கும் கட்டாய 'விசா'

மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம்கோருவோரில் சிறுவர்களின் தொகையும் அண்மைக் காலங்களில் மிகவும் அதிகரித்திருப்பதாக சமீபத்திய புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இங்கு அரசியல் அடைக்கலம் கோரி வருவோரில் பத்திலொரு பகுதியினர் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களே என அகதிகள் விவகாரங்களுக்குப்

'ஆர்பி'

பொறுப்பான அதிகாரி ஒருவர் அண்மையில் தெரிவித்தார்.

போர்களாலும், உள்நாட்டு அரசியல் பிரச்சனைகளாலும் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ளவர் தமது பிள்ளைகளைப் பாதுகாப்புக் கருதி மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கிறார்கள் ஒரு சில பயணப் பொதிகளுடன் மட்டும் வரும் இவர்கள் ஜேர்மனியின் முக்கிய விமான நிலையமான பிராங்போட் விமான நிலையத்தில் இறங்குவதைத் தினசரி காணக் கூடியதாகவுள்ளது.

எவ்வித துணையுமின்றி தனியாகவே வரும் இச்சிறுவர்கள் மேற்கு ஜேர்மனியில் அரசியல் அடைக்கலம் கோருகின்றார்கள். மேற்கு ஜேர்மனியின் சட்டப்படி இல்லாது வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக வரும் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 'விசா' வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மேற்கு ஜேர்மனியில் மட்டும் இச்சலுகை இருப்பதால் தான் பெருந்தொகையான சிறுவர்கள் இங்கு அரசியல் அடைக்கலம் கோரி வருகின்றார்கள்.

எனினும் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலப்படி பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும்மேற்கு ஜேர்மனிக்குள் நுழைவதற்குக் கட்டாயமாக 'விசா' பெற்றிருக்கவேண்டும். இதன் மூலம் சிறுவர்கள் ஜேர்மனிக்குள் அகதிகளாகச் செல்வது முற்றாகக் கட்டுப்படுத்தப்படவுள்ளது.

### செய்தி

மேற்கு ஜேர்மனிக்குள் செல்லும் அகதிகளில் பத்து வீதமானோர் சிறுவர்களாவர். இவர்களில் இலங்கைச் சிறுவர்களும் கணிசமான தொகையினர். இவ்வாறு அங்கு செல்லும் பதினாறுவயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டமூலம் அங்கு கொண்டு வரப்படவுள்ளது.

## முன்பு ஈரானியர்கள் இப்போது இலங்கையர்

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 360 சிறுவர்கள் இங்கு அகதிகளாக வந்திருக்கிறார்கள். இதில் 304 பேர் ஈரானியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 300 சிறுவர்கள் இங்கு அகதிகளாக வந்துள்ளார்கள்.

கடந்த ஆண்டுகளில் ஈரானைச் சேர்ந்த சிறுவர்களே பெருமளவில் அகதிளாகச் சென்றமைக்கு வளைகுடா யுத்தமே முக்கிய காரணமாக அமைந்தது. கட்டாய ராணுவ சேவைக்காக ஈரானிய சிறுவர்கள் அழைக்கப்பட்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அண்மையில் வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளதையடுத்து இத்தொகை வெகுவாகக் குறைந்துள்ளது.

இலங்கையிலிருந்து அகதிகளாகச் செல்வோரின் தொகையே இங்கு இப்போது அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் இலங்கையிலிருந்து இவ்வாறு 42 சிறுவர்கள் அகதிகளாகச் சென்றுள்ளார்கள். கடந்த வருடத்தில் எல்லாமாக 247 இலங்கைத் தமிழ்ச் சிறுவர்கள் இங்கு அகதிகளாக வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

1983 ஜூலையில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரத்தையடுத்தே தமிழர்கள் வெளிநாடு செல்ல நேரிட்டது இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்களுக்கு முதலில் இடங்கொடுத்த நாடுகளில் ஒன்று மேற்குஜேர்மனி

கடந்த ஐந்தாண்டு காலத்தில் இலங்கையிலிருந்து அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் பல லட்சக்கணக்கான தமிழர்கள் சென்றுள்ளனர்.

முதலில் இளைஞர்களும், இளம் குடும்பஸ்தர்களுமே இங்கிருந்து சென்றனர் அப்போதிருந்த சூழ்நிலை அவர்களால் இங்கு உயிருடன் வாழ முடியாதிருந்தது அதுமட்டுமின்றி, ஆபத்தான நிலையில், உயிரைக் கையில்பிடித்துக் கொண்டு விமானம் ஏறும் போது குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு அவர்காளால் எவ்வாறு செல்ல முடியும்?

கடந்த ஐந்தாண்டினில் தமது சிறு சேமிப்பின் உதவி கொண்டே இவர்கள் தங்கள் குழந்தைகளை தம்முடன் அழைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான ஒரு கட்டத்தில், பதினாறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும் "விஸா வேண்டும்" என்று மேற்கு ஜேர்மனி புதிதாக அறிமுகம் செய்யும் சட்டம் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களையே மேலும் பாதிப்புக்குள்ளாக்கும்.

ஏற்கனவே விமான டிக்கட்டுகளைப் பெற்று மேற்கு ஜேர்மனி செல்ல ஆயத்தமாகியிருக்கும் பல நூற்றுக்கணக்கான இலங்கைச் சிறுவர்கள் நிலைமையே மிகவும் பரிதாபத்திற்குரியதாகும்.

## தரிசனம்

அண்மையில் பொது நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்தபோது, பலதும் பத்தும் தெரிந்த பலரையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பண்டிதர்களும், பட்டதாரிகளும், பாடசாலை மாணவர்களும்பங்கு பற்றிய கூட்டமாதலால், பல்துறை தொடர்பான பல விடயங்களையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

கூட்டத்தில் பங்கு பற்றி உரையாற்றிய வர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் ஒருபுறமிருக்க, விஷயம் தெரிந்தவர்கள் காதோடு காதாக சில விஷயங்களைப் போட்டு வைத்தனர்.

இதிலொன்று, பண்டிதமணி ஐயா அவர்களுடன் சம்பந்தப்பட்டது.

பண்டிதமணி ஐயா அவர்களின் மறைவுக்குப் பின்னர், அவரது பெயரில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மோசடி பற்றிய விடயமாதலால், அனைவருமே இதனைத் தெரிந்திருப்பது அவசியமாகும்.

தற்போது அச்சாகிக் கொண்டிருக்கும் சிலருடைய நூல்களில், பண்டிதமணி ஐயா அவர்கள் வழங்கியதாகக் கூறப்படும் ஆசியுரை, வாழ்த்துரை என்றவாறான 'உரை'கள் சேர்க்கப்பட்டுள்ளனவாம்.

ஆனால் இந்த 'உரை' களை அவர்கள் பண்டிதமணி ஐயா அவர்களிடம் பெறவில்லை என்றும் தாமாகவே எழுதி, அவைகளை நூல்களில் சேர்த்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நூல்ஏற்கனவேயே வெளிவந்துவிட்டதாகவும்இப்போது தெரிய வந்துள்ளது.

இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டிய விஷயமென்னவெனில், பண்டிதமணி ஐயா, அவர்கள் வாழ்ந்த காலத்தில், அவர் கூறிவந்த கருத்துக்கு எதிரான கருத்தை இந்த 'உரை' தெரிவித்திருப்பதுதான்.

இவைகளை இப்போதே 'கிள்ளி' எறியத் தவறினால், இதுவே ஒருவியாதியாகி விடலாம்.

இந்த விடயத்தில் பண்டிதமணி வெளியீட்டுச் சபையினரும், பண்டிதமணியின் உரித்துக்காரரும் உடனடியாகக் கவனமெடுக்க வேண்டும்.

பண்டிதமணிஐயா பெயரில் மோசடி இடம் பெற அனுமதிக்கக்கூடாது.

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

## செயற்கரிய செய்தோர்

### ஒளவையார்

அதியமான் நெடுமானஞ்சி கொடையினாற் புகழ் பெற்றவன். அவன் புகழ் எங்கும் பரவி இருந்தது. அவனைப் பாடிப் பரிசில் பெற ஒளவையாரும் வேறு பல பரிசிலரும் சென்றனர். ஒளவையார் சிலகாலம் தனதுநாட்டில் தங்கவேண்டும் என்று விரும்பிய அவன் ஏனைய பரிசிலர்க்கும் பரிசில் கொடுத்துவிட்டு ஒளவையாருக்குமட்டும் கொடாதிருந்தான்.

அதியமான் கருத்தறியாத ஒளவையார் அதியமான் பரிசில் கொடுப்பத்தாமதிப்பது குறித்துக் கவலையுற்றார். வாயில்காப்பவனைப் பார்த்தார். "வாயில்காப்பவனே, நின் அரசனான அதியமான் ஒன்று தன்தகவுடைமையை அறியாதவனாக வேண்டும். அன்றி என் தரத்தை அறியாதவனாகவேண்டும் அறிவும், புகழும் உடைய வேள் பாரி முதலிய நல்லோர் இறந்ததினால் இவ்வளமிக்க உலகம் வறிதாய்விடவில்லை.

மரம் தறிக்கும் ஒருவன் கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவனுக்கு மரத்துக்குத் தட்டுப்பாடு இல்லை. அதேபோலத்தான் நாமும் நமது அறிவினைக் கொண்டு சென்றால் எத்திசைக்குச் சென்றாலும் அத்திசையில் சோறுகிடைக்கும்" என்று கூறிப்புறப்பட்டார்.

அதியமானின் கருத்தறியாது இதனை ஒளவையார் கூறினாலும் கூட புலவர்களின் தன்மான உணர்வு எத்தகையதென்பதையும் புலவர்களை வரவேற்க எந்த நாடும் எந்த அரசும் தயாராக இருந்தன என்பதையும் ஒளவையார் பாடல் தெளிவாகக் கூறுகின்றது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்புதான் அதியமான் ஒளவைக்கு நெல்லிக்கனி கொடுத்ததும், தொண்டமானிடம் தூது விடுத்ததும் நிகழ்ந்தன.

## வைத்திய கலசம்

# தலைமுடி கொட்டுகிறதா?

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B S. (Cey)

★ 'எனது தலைமுடி தினமும் அதிகமாக கொட்டுகிறது' என்பது ஆண்களினதும், பெண்களினதும், இளையவர்களினதும், முதியவர்களினதும் கவலை தோய்ந்த குரலாக தினமும் பல இடங்களிலும் ஒலிப்பதை நீங்கள் கேட்டிருக்கக் கூடும் சிலவேளை உங்கள் குரலும் கூட அதில் சேர்ந்திருக்கக் கூடும்

✶ ஒவ்வொரு மனிதனும் தலையில் 100, 000× முதல் 300, 000 வரை முடி இருக்கக் கூடும் என மதிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு முடியும் முளைத்து வளர்ந்து, உதிர்வதற்கு மூன்று ஆண்டுகள் வரை எடுக்கிறது. எனவே தினமும் சில முடிகள் தாமாகவே உதிர்வதும், வேறு சில அரும்புவதும் இயற்கையானதே. சாதாரணமாக ஒருவரது தலையிலிருந்து தினமும் 100 முதல் 300 வரை முடிகள் உதிர்கின்றன எனவே தலை வாரும்போது சீப்பில் சில முடிகள் உதிர்வதையோ, முழுகும் போதும், தலை துவட்டும்போதும் மேலும் சில முடிகள் உதிர்வதையோ இட்டு கவலையடையாதீர்கள். இது இயற்கையானதே.

✶ முடிகளின் வளர்ச்சி சிலவகை ஓமோன்களால் (Hormone) கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால்தான் பெண்கள் கற்பமுற்றிருக்கும் போது அவை அடர்த்தியாகவும், தடிப்பாகவும், கருமையாகவும் வளர்கின்றன. பின் குழந்தை பிறந்த சில நாட்களுக்குள் மோசமாக உதிர ஆரம்பிக்கின்றன ஆயினும் குழந்தை பிறந்த 2–3 மாதங்களில் சாதாரண நிலைக்கு வந்து விடுகின்றன.

✶ வேறு பல காரணங்களாலும் முடி உதிர்வது சாதாரணத்தை விட அதிகமாகக் கூடும். சில மனோவியல் தாக்கங்கள் (Stress) இரும்புச்சத்து குறைவதால் ஏற்படும் இரத்தசோகை, பெண்களில் மாதவிடாய் முற்றாக வராது மறைவது (Menopause), சிலவகை மருந்துகள், குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகள், தைரோயிட் சுரப்பி நோய்கள் போன்றவை முடி உதிர்தலை அதிகமாக்கலாம். நெருப்புக் காய்ச்சல் போன்றகடுமையானகாய்ச்சல்களின்பின்னரும்,பெரிய சத்திர சிகிச்சைகளுக்கும் பின்னரும் கூட உதிர்வது அதிகமாகிறது. ஆனால் இவை தற்காலிகமானவை முடி உதிர்வதற்குக் காரணமாயிருந்த நோயைக் குணப்படுத்தி விட்டால், அல்லது அதற்கான காரணமாயிருந்த நோயைக் குணப்படுத்தி விட்டால், அல்லது அதற்கான காரணத்தை நிவர்த்தி செய்து விட்டால், மூன்று நான்கு மாதங்களில் முடி முன் போலவே வளர்ந்து விடும். (மாதவிடாய் நிற்றல் இதில் அடங்காது.)

✶ சிபிலிஸ் (Syphilis) எனப்படும் மேகப்புண் நோயில் தலைமுடி படடை பட்டையாக உதிரக்கூடும் என்பதை. இந்நோய் பற்றிய வைத்திய கலசம் மூலம் முன்னரே நீங்கள் அறிந்திருக்கக் கூடும் இங்கும் நோய் குணமான பின் முடி மீண்டும் வளரும்.

✶ ஒரு சில இடங்களில் வட்டமான உருவில் முடி உதிர்வது தலைமுடியில் மாத்திரமின்றி, தாடி முடி வளரும் இடங்களிலும் உண்டாகலாம் இது பொதுவாகச் சிறுவர்களிலும், இளைஞர், யுவதிகளிலும் உண்டாகலாம். பெரும்பாலானவர்களில் இது தானாகவே குணமடையும், ஆனால் 3முதல் 6மாதம்வரை செல்லலாம் அதற்கிடையில் குணமடையாவிடில் உங்கள் வைத்தியர் அவ்விடத்தில் ஊசிமூலம் மருந்து ஏற்றிக் குணமடைய வைப்பார்.

✶ தலையில் பொடுகு அதிகம் உள்ளவர்களுக்கும் தலைமுடி அதிகம் உதிரக்கூடும். பொடுகு தலையில் சொறியை ஏற்படுத்துவதால், நகங்களால் சொறிய வேண்டி ஏற்படுகிறது இதனால் கிருமி தொற்றி மேலும் மோசமடைகிறது இதனைக்கட்டுப்படுத்தப்பல வகைஷாம்பூக்கள்பாவனையில் உள்ளன. இவற்றினால் பொடுகைக் கட்டுப்படுத்த முடியுமே ஒழிய முற்றாகக் குணமாக்க முடியாது. செப்டல்லோன்(Cetavlon) லொக்சீன் (Loxene), செல்சன் (Sesnn) லிகுயுட் பொலிடார் (Liquid Polytar) போன்றவை எமது நாட்டில் பொதுவாக உபயோகப் படுத்தப்படுகின்றன. இவற்றில் ஒன்றை ஆரம்பத்தில் வாரத்திற்கு இரண்டு முறையும், பின் வாரமொரு முறையும் உபயோகிக்க, பொடுகு கட்டுப்படும் பின் தேவை ஏற்படும் போது மீண்டும் உபயோகிக்கலாம். பொடுகுக்கு உணவுப் பத்தியங்கள் எந்தவிதத்திலும் உதவாது.

✶ ஆண்களில் ஏற்படும் முன்வழுக்கை, பின் வழுக்கை என்பன பொதுவாகப் பரம்பரை, பரம்பரையாகத் தொடரக் கூடியது இதற்கு இதுவரை வைத்தியம் கிடையாது ஆயினும பிடரிப் பகுதியில் உள்ள முடிகளை சத்திர சிகிச்சை மூலம் வழுக்கைப் பகுதியில் பதிக்கும் முறை கையாளப்பட்டது ஆயினும் இம்முறை மிகச் செலவானதும், பெருமளவில் செய்யக் கூடியதும் அல்ல இப்பொழுது ரீகெயின் (Regaine Minoxidil 2%) என்ற மருந்தை பாதிக்கப்பட்ட பகுதியில் பூசுவதன் மூலம் வழுக்கையை ஓரளவேனும் குணமாக்கலாம் என்று ஆராய்ச்சிகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. ஆயினும் இது இன்னமும் இலங்கையில் கிடைக்கவில்லை.

(அடுத்த வாரம் தலைமுடியைப் பேணல்)




# பாரதி பாட்டுக்குப் பண்டிதமணி விளக்கம்

பாரதிபாடலுக்குப் பலரும் பலவித விளக்கங்களைக் கூறி இலக்கியச் சுவையைக் காட்டி இருக்கிறார்கள். அந்த வகையில் யாருமே கூறாத தனித்துவமான விளக்கமொன்றைப் பண்டிதமணி கூறி இருக்கிறார்.

கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை என்ற தலையங்கத்தில் வரும் பாடலில் 'தின்னப்பழங் கொண்டு தருவான் பாதி தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்' என்ற அடிகள் வருகின்றன.

இதுவரை இந்த அடிகளுக்குக் 'கண்ணன், தின்பதற்குப் பழம் கொடுப்பான் என்றும் பாதி தின்னும்போது தட்டிப் பறிப்பான் என்றும்' பொருள் கூறப்பட்டு வந்தது.

பண்டிதமணி இந்த அடிகளுக்குச் சிறப்புப் பொருள் கூறியுள்ளார். 'தின்னப் பழம் கொண்டு தருவான்' என்பதற்குக் கிருஷ்ண பகவான் மக்கள் அனுபவிப்பதற்குச் செல்வத்தைக் கொடுப்பான் என்றும் 'பாதி தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்' என்பதற்குக் கிருஷ்ண பகவான் கொடுத்த செல்வத்தை தர்மத்துக்கு விரோதமாக– அதர்மததுக்காகப் பயன்படுத்தினால் — கிருஷ்ண பகவான் செல்வத்தைக் கொடுத்ததன் நோக்கத்துக்கு மாறாகப் பயன்படுத்தினால் அவன் செல்வத்தைப் பறித்து விடுவான் என்பதே

# கண்ணதாசன் கருத்துக்கள்:

✶ சாதாரண மனிதன் புகழ்பெறத் தொடங்கும் போது, அவன் செய்த தவறுகளும் புகழ் பெறத் தொடங்குகின்றன.

✶ மக்கள் ஒரேஒருஅயோக்கியனையும் சமாளிப்பதற்குப் பெயர் சர்வாதிகாரம்; ஒவ்வொரு அயோக்கியனைச் சமாளிப்பதற்குப் பெயர் ஜனநாயகம்!

✶ குடிகாரர்கள்மதுவிலக்கு கொள்கைக்கு எதிரானவர்கள் அல்லர் உலகிலுள்ள மதுவையெல்லாம் குடித்தே ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் குடிக்கிறார்கள்

✶ பணக்காரனுக்கு இருதய நோய் வந்ததென்று நான் ஆச்சரியப்படுகிறேன். ஏனெனில், அவனுக்கு இருதயம் இருந்ததா?

✶ நாத்திகன் வாழ்நாள் முழுவதும் மனிதனைத் தோற்கடிக்கிறான். கடைசியாக ஒரு நாள் கடவுள் நாத்திகனைத் தோற்கடிக்கிறார். அதன்பெயர் மரணம்.

# ஐம்பதில் வளையும்!

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பார்கள். சாதனை புரிவதற்கு நேரம் காலம் பார்க்கத் தேவை இல்லை. செயல் வீரர்கள் தாம் சாதனையாளர்களாகத்திகழ முடியும்.

ஐம்பது வயது வரையும் அரிஸ்டாட்டில் உருப்படியான ஒரு காரியத்தையும் செய்யவில்லை அதன் பிறகு அவர் வாழ்ந்த பன்னிரண்டு ஆண்டுகளில் செய்த செயல்கள் தாம் உலகம் உள்ளளவும் அவரது பெயரை நிலை பெறச் செய்துள்ளன.

ஊட்ரோ வில்பனுக்கு ஐம்பது வயது வரை அரசியல் ஈடுபாடே கிடையாது புகழ்பெற்ற கல்லூரிப் பேராசியராகத்தான் பணியாற்றிக்கொண்டிருந்தார். அதன் பிறகு தான் அவர் குடியரத் தலைவராகிப் புகழ் பெற்றார்.

உலகத்திலேயே மிகப் பெரும் செல்வரான ஜே. பி மார்கன் தமது ஐம்பது வயதுக்குப் பின்னர் தான் பெரும் செல்வம் தேடினார்.

# வித்தியாசம் இவ்வளவுதான்

வறியவனான புலவன் ஒருவன், ஒரு செல்வன் வீட்டுக்குப் போய் அவனுக்கும் தனக்கும் ஒரு சாண் தூரம் இருக்குப்படி அருகில் உட்கார்ந்தான்.

செல்வன் சினங் கொண்டு புலவனைப் பார்த்து "கழுதைக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்" என்றான் புலவன் "ஒரு சாண் தான் வித்தியாசம்" என்று அளந்து காட்டினான்.

(பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து)

# 'பியினேபினிக்ஸ்.'

உலகம் சுற்றும் தமிழரான திரு ஏ கே செட்டியார் வேறு நாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் 'நன்றி' வணக்கம் ஆகிய சொற்களுக்கெல்லாம் அந்த நாட்டு மொழியில் என்ன சொல்வது என்று கேட்டு வைத்துக் கொள்வது வழக்கம்

அம்மாதிரி அயல் நாடு ஒன்றில் நன்றி என்ற சொல்லை அயல் நாட்டு மொழியில் சொல்வது எப்படி என்று அவர் கேட்டதற்கு, குறும்புக்காரப் பெண்மணிஒருத்தி 'பியினே பினிக்ஸ்' என்று சொல்லுங்கள் என்றார்.

திரு. செட்டியார் அவர்கள் அன்றிரவு தமக்கு நடந்த விருந்தொன்றில் பரிமாறியவனைப் பார்த்து அன்புடன் 'பியினே பினிக்ஸ்' என்று கூறினார். உடனே அவன் முகம் மாறியது. சட்டென்று அவர் காதருகில் குனிந்து 'தயவு செய்து வேறு யாரைப் பார்த்தும் அந்த வார்த்தையைச் சொலலாதீர்கள்' என்றான் திரு செட்டியார் அதிர்ந்து போய் 'ஏன்' என்று கேட்டார். 'பியினே பினிக்ஸ்' என்றால் 'குளத்தில் விழு' என்று அர்த்தம் என்றான் அவன்.

அடுத்த முறை திரு செட்டியார் தமக்கு அந்த வார்த்தையைச் சொல்லிக் கொடுத்த பெண்ணைச் சந்தித்தார் அப்பொழுது அந்தப் பெண்ணுக்கு அவர் சொன்ன வார்த்தை 'பியினேபினிக்ஸ்',

# பொருள் அறிந்தவர்

பெங்களூரைச் சேர்ந்த விஸ்வேச்வரையா என்ற மேதை வாழ்ந்த காலத்தில் அவரைக் காண வெளியூரவர் ஒருவர் சென்றார். வெளியூரவர் அன்று இரவு விஸ்வேச்வரையாவுடன் தங்க நேர்ந்தது

அப்போது யுத்தகாலமாதலால் மின் வெட்டுச் சர்வ சாதாரணம். விஸ்வேச்வரையா முதலில் ஒரு மெழுகுவர்த்தியில் சில 'பைல்'களைப் பார்வையிட்டார். பின்னர் அந்த மெழுகுவர்த்தியை அணைத்தார். வேறு புதிய மெழுகுவர்த்தியைக் கொளுத்தினார். அதில் வேறு சில கடிதங்களை எழுதினார்.

'ஒரு மெழுகுவர்த்தி முடியு முன்னரே ஏன் அதை அணைத்துவிட்டுப் புதிதாக ஒன்றைக் கொளுத்தினீர்கள்' என்று புதியவர் கேட்டார்.

அதற்கு 'விஸ்வேச்வரையா' நான் பணிபுரியும் அலுவலக பைல்களைப் பார்ப்பதற்கு அரசாங்கம் கொடுத்த மெழுகுதிரியை உபயோகிக்கிறேன் எனது தனிப்பட்ட கடிதங்களை எழுதுவதற்கு எனது சொந்தப் பணத்தில் வாங்கிய மெழுகுவர்த்தியை உபயோகிக்கிறேன்' என்றார்.

பொருளுக்கும் தர்மத்துக்கும் பெரும் தொடர்புண்டு. பொருள் அறிந்தவர் தம் உழைப்பால் வராத பொருளைத் திண்ட அஞ்சுவர்.

## பக்தியின் மொழியாக தமிழைக் கண்டவர்

# தவத்திரு தனிநாயகம்

நிர்மலா இராசரத்தினம்

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நின்று இருவரையும் இணைப்பவர் குரு. நண்பனாக, ஆசிரியனாக, தந்தையாக, ஆலோசகராக மக்கள் மத்தியில் தொண்டாற்றி வருபவரும் இவரே. இறைபணிக்கென்று இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இவர்கள். இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட குருத்துவத்தைப் பங்கம் எதுவுமின்றிக் காத்து வாழவேண்டிய நிலையில் குருக்கள் உள்ளனர். இவ்வுலகில் இன்னல்கள், சோதனைகள் மத்தியில் எதிர்நீச்சல் போட வேண்டியவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள். கவலையும், வேதனையும், சோதனைகளும் இவ அடிகளாரையும் விட்டு வைக்கவில்லை. குருத்துவ அந்தஸ்தை அடைவது இலகுவானதல்ல என்பதை இவரது வாழ்வு காட்டுகிறது.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

எனும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப இறைவனின் பற்றைப் பற்றிக் கொண்டார். உலகப் பற்றைத் துறந்த இத்துறவி தமிழைத் துறக்கவில்லை. பக்தியின் மொழியாக நம் தமிழைக் கண்டார். இறைவனுடனும், தமிழுடனும் இரண்டறக் கலந்தார். இவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகளைப் பார்க்கும் போது இவர் இறைவன் மேல் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும், விசுவாசமும், புலனாகும். தமிழ் இலக்கியக் கருத்துக்களைச் சமய சொற்பொழிவுகளின் போது புகுத்தியும், ஒப்பிட்டும் உதாரணமாக மேற்கொண்டும் வந்தார். பரிசுத்த தேவதாயின் மேல் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த இவ்வடிகளார் தன் நூல்களில் அவவை மகிமைப் படுத்தக் கூடிய இடங்களில் மகிமைப்படுத்தியும் அவவின் புகழை எடுத்துக் கூறவும் பின் நிற்கவில்லை. இலங்கையில் விரிவுரையாளராகக் கடமை ஆற்றியபோது புதன்கிழமை மாலையில் பொரளையில் உள்ள (All Saints Church) சகல புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெறும் சகாய மாதாவின் ஆராதனைகளில் பிரசங்கம் செய்தார். இவை தேவதாயின் மேல இவர் கொண்டிருந்த அளவற்ற அன்பிற்கு சான்று பகர்கின்றன.

1913–ம் ஆண்டு ஆவணித் திங்கள் 2–ம் திகதி ஊர்காவற்றுறையில் உள்ள 'கரம்பொன்' எனும் இடத்தில் அடிகளார் பிறந்தார். நெடுந்தீவு உடையாராக விளங்கிய சின்னத்தம்பிநாகநாதர் அவர்களின் இளைய மகன் கணபதிப்பிள்ளை இஸ்ரனிஸ்லோஸ் இவரது தந்தையார். இவர் ஓர் ஆசிரியர். கரம்பொனைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரி சிசில் இராசம்மா இவரது தாயார் ஆவார். இவர்கள் தம் திருமணத்தின் பின் கரம்பொனில் உள்ள புனித 'சின்ன மடுமாதா' தேவாலயத்திற்குச் சென்று தம் முதற் குழந்தை ஆண் மகவாகப் பிறந்தால் குருவாக இறைவனுக்கு அர்ப்பணிப்பதென்று நேர்த்தி வைத்திருந்தனர். இவர்களின் விருப்பின்படி ஆண் குழந்தையும் பிறந்தது. 'சேவியர்' என்று பெயரிட்டனர். இவரது தலையில் உச்சியில் ஓர் சிலுவை அடையாளமும் இருந்தது.

பெற்றோர் இவரைக் குருவாக்க விரும்பியபோதும் சிறு வயதில் இவர் மறுத்து வந்தார். இது அவர்களுக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. ''பெற்றோர் வைத்த நேர்த்தியைப் பிள்ளை விருப்பா விடில் நிறைவேற்ற வேண்டியதில்லை. விருப்பமில்லாவிட்டால் குருவாகத் தேவையில்லை என்று பாவசங்கீர்த்தனத்தின்போது சுவாமி சொன்னார். ஆகவே நான் போக மாட்டேன்'' என்று பெற்றோர் கேட்கும் போதெல்லாம் மறுத்துவந்தார்.

ஆரம்பத்தில் இரு வருடங்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின் யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும்



ஆரம்பக் கல்வியையும், உயர் கல்வியையும் கற்றார். கல்வியில் மட்டுமின்றி விளையாட்டுத் துறையிலும் திறமைமிக்கவராக விளங்கினார். துடியாட்டமும், துடுக்குத்தனமும் இவரிடம் குடிகொண்டிருந்தன. 1930 ம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்தியடைந்தார். இதன் பின்பு இவரது மனம் குருத்துவத்தில் நாட்டம் கொண்டது. இவரது தாயின் மரணமும் இவரைக் குருத்துவத்தை நாடவைத்தது.

''இவ்வுலகில் நான் ஒரு முறைதான் வாழமுடியும் ஆகவே நான் செய்யவேண்டிய நல்லவற்றைச் செய்ய வேண்டும். என உடன்பிறப்பினர்க்கு அன்பு காட்ட வேண்டுமானால் உடனே அதைச் செய்யவேண்டும் இதனைக் காலம் தாழ்த்தவோ கவனயீனமாக விடவோ கூடாது ஏனெனில் நான் ஒருபோதும் மீண்டும் இவ்வழியால போக முடியாது!'' எனும் பொருள் பொதிந்த கட்டுரை ஒன்று அடிகளாரின் மனம்மாற்றக் குருத்துவத்தை நாட வழிகாட்டியது.

1931 ம் ஆண்டு கொழும்பில் உள்ள புனித பேணட் குருமடத்தில் சேர்ந்து குருத்துவப் பயிற்சி பெற்றார். இங்கு பெரும் பிரச்சனைகளை இவர் எதிர்நோக்க வேண்டி இருந்தது. இரு வருடங்கள் இங்கு பயின்ற பின் குருமடத்தை விட்டு, விலகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். குருத்துவ அந்தஸ்துக்கு அழைத்தல் இல்லை என்று கூறப்பட்டது. ஆனால் அடிகளார் மனந்தளரவில்லை. குருத்துவமே தனக்கு இறைவன் கொடுத்த அந்தஸ்து என்று அவர் உணர்ந்து கொண்டார். தன் தலைவணங்கணியாக தேவ அழுது, அழுது இறைவனிடம் தன் கவலையையும், பிரச்சனைகளையும் எடுத்துக் கூறாத இரவுகள் இல்லை'' என்று அடிகளாரே தன் நிலையை எடுத்துக் கூறியுள்ளார். இந்நிலையில் இவருக்கு ஆதரவு கொடுத்த குருமார்களுள் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபராக இருந்த வண பிதா. 'லோங்', வண பிதா மத்தியூ அடிகளார் முக்கியம் வாய்ந்தவர்கள். செய்வதறியாது இருந்த இந்நிலையில் இறைவன் இவரைக் கைவிடவில்லை.

இந்தியாவிலுள்ள திருவாங்கூர் மேற்றிராசன ஆயர் வண. மாய்வானஸ் ஆண்டவர் இலங்கைக்கு வந்திருந்தார். இவர் கத்தோலிக்க சமயத்தில் சிரிய முறையைச் சேர்ந்தவர். இலங்கையில் இருந்து தகுந்தவர்களைத் தன் சபையில் சேர்க்கும் பொருட்டு இங்கு வந்திருந்தார். போணட் செமினரிக்கு இம் மேற்றிராணியார் சென்றிருந்தபோது அடிகளாரின் திறமையும், அவரது நிலையையும் அறிந்து இந்தியாவுக்குத் தன்னுடன் வரும்படி அழைத்தார். நீர்கொழும்பு மரிஸ்ரெலாக் கல்லூரியில் ஆசிரியராக அப்போது கடமையாற்றிக் கொண்டு இருந்த அடிகளாரின் தந்தையையும் கண்டு இது பற்றிக் கூறினார். சிறிது காலத்தின் பின் அடிகளார் இந்தியா சென்று தன் நிலையை வண. மாய்வானஸ் ஆண்டவரிடம் எடுத்துக் கூறிவிட்டு இலங்கை வந்தார். 1934 – ம் ஆண்டு இவர் அடிகளாரை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்தார். 1934 – 1939 - ம் ஆண்டுவரை ரோமாபுரியில் உள்ள குருத்துவ மாணவர் பயிலும் சர்வகலாசாலையில் சமய சாஸ்திரங்களைப் பயின்று திருமறைக் கலாநிதியானார். இங்கு பலநாட்டு, பலமொழி பேசும் இனத்தினருடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு கிட்டியது. இதனால் தன் மொழியின் பற்றும் வளர்ந்தது. அவர்கள் தம் மொழிக்கு விழா எடுப்பதைக் கண்டு அடிகளாரும் தமிழ் மொழிக்கும் விழா எடுக்க ஆவல் கொண்டனர். இதனை 'ஒன்றே உலகம்' எனும் நூலில் காட்டி உள்ளார். 1939 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 19 ஆம் திகதி 'இலத்தீன் முறையின்படி குருப்பட்டம் பெற்றார். தன் முதற் திவ்விய பலிப்பூசையைத் தன் தாயின் நினைவாக அவவின் பெயர்கொண்ட பரி. சிசிலியா மாளின் கல்லறையில் வைத்தார். 1939 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கை வந்த அடிகளாருக்கு அவரது தாப்பனார் நெடுந்தீவில் பெரு விழாவினை நடாத்தினர். திவ்விய பலிபூசையும் ஒப்புக் கொடுத்தார்.

1910 ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த தூத்துக்குடி மேற்றிராணியார் வண ரோச் ஆண்டவர் அடிகளாரை இந்தியாவுக்குக் கூட்டிச் சென்றார். உதவிக்குருவாக இங்கு கடமை ஆற்றினர். வடக்குதியிலாவது பங்கு மக்கள் அமைதியின்றி குழப்ப நிலையில் இருந்தால் அவர்களைச் சமாதானப்படுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்கு இவ்வடிகளாரை அனுப்புவது வழக்கம். இவர் இப்பகுதி மக்களின் அன்புக்குப் பாத்திரமாகி இருந்தார். ரோச் ஆண்டவரின் தூண்டுதலினால் தமிழ் கண்டிக அடிகளாரை ஓர் தமிழ்ப்பெயரும் வைக்குமாறு பணித்தார். இதற்கு ஏற்ப தன் தந்தையின் விருப்பின்படி நெடுந்தீவைச்சேர்ந்த தம் வம்சப் பெயரான 'தனிநாயகம்' எனும் தனிநாயக முதலியின் பெயரை எடுத்துக் கொண்டார். இதன்படி 'சேவியர் தனிநாயகம்' எனப்பட்டார். இவ்வாறு தனிநாயகம் அடிகளார் தமிழில் பாண்டித்தியம் பெற வழிகாட்டியவர் இம்மேற்றிராணியார் ஆவர்

[14-ம் பக்கம் பார்க்க]

# அறிவுச்சுடரே! அண்ணா! உன் இதயத்தை தா!

● கலைஞர் மு. கருணாநிதி ●

ஈராயிரம் ஆண்டுகள் அன்னைத் தமிழகம் தவமிருந்து பெற்றெடுத்த தலைமகன் சிங்க நடையும் சிங்காரத் தென்றல் நடையும் பொங்கு கடல் நடையும் புரட்சிக் கவி நடையும் ஒருசேரத் தன் உரைநடையால் கண்ட பூமான் தம்பிமார் படைமீது விழியோட்டி வெற்றி கொள்ளும் கோமான்.

பூமிப் பந்தில் தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ — அங்கெல்லாம் அவர்களது இதயத்தில் தங்கச் சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும் மன்னன் — சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யும் வகையில் நம்மையெல்லாம் 'தம்பி' என்று அழைத்திட்ட அண்ணன் — பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து வங்கக் கடல் அருகில் நீங்காத துயிலில் ஆழ்ந்திருக்கிறார்.

தமிழில் மூன்றெழுத்துக்கு ஒரு சிறப்புண்டு மூவேந்தர்—முக்கொடி—முக்கனி என மும்முரசார்ந்தவர் தமிழர். அவர் வாழ்ந்த தமிழ் 'வாழ்வு'க்கு மூன்றெழுத்து அந்த வாழ்வுக்கு அடிப்படையான 'அன்பு' மூன்றெழுத்து அன்புக்குத் துணை நிற்கும் 'அறிவு' மூன்றெழுத்து அறிவார்ந்தோர் இடையிலெழும் 'காதல்'க்கு மூன்றெழுத்து காதலர்கள் போற்றி நின்ற கடும் 'வீரம்' மூன்றெழுத்து வீரம் விளைவிக்கின்ற 'களம்' மூன்றெழுத்து களம் சென்று காணுகின்ற 'வெற்றி' மூன்றெழுத்து. அந்த வெற்றிக்கு நமையெல்லாம் ஊக்குவிக்கும் 'அண்ணா' மூன்றெழுத்து.

இன்று அவர் நம்மிடையே இல்லை. இந்தச் சொல்லைக் கூறும் போது எழுகின்ற துக்கத்திற்கும் எல்லை இல்லை

அந்த எல்லை இல்லாத துக்கம் துயரம் பற்றி அண்ணன் கொடுத்த தமிழ் எடுத்துப் பாடுகிறேன — ஒரு கவிதை.

அண்ணா என்ற சொல்லால்<br>
அழைக்கட்டும் என்றே—அவர் அன்னை<br>
பெயரும் தந்தார்<br>
அந்த அன்னைக் குலம் போற்றுவதற்கு<br>
ஔவைக் கோர் சிலை<br>
அறம் வளர்த்த கண்ணகிக் கோர் சிலை<br>
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்<br>
வணங்கா முடிப் பாரதிதாசருக்கும் சிலை<br>
வீரமா முனிவருக்கும் சிலை<br>
கார்ல்டுவெல், போப்புக்கும் சிலை<br>
கம்பருக்கும் சிலை<br>
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை<br>
திக்கெட்டும் குறள் பரப்ப<br>
திருவள்ளுவர்க்கும் சிலை<br>
பத்துச் சிலை வைத்ததனால்—அண்ணன்<br>
தமிழின் பால் வைத்துள்ள பற்றுதலை உலகறிய<br>
அந்த—அண்ணனுக்கோர் சிலை<br>
சென்னையிலே வைத்த போது<br>
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்......<br>
ஆணையிடுகின்றார் எம்<br>
''அண்ணா'' என்றிருந்தோம்<br>
அய்யகோ? இன்னும்<br>
'ஓராண்டே வாழப் போகிறேன்' என்று அவர்<br>
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!<br>
எம் அண்ணா இதய மன்னா<br>
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று<br>
பகர்ந்தாயே!<br>
எம்மை விடுத்துப் பெரும் பயணத்தை<br>
ஏன் தொடர்ந்தாய்?<br>
உன் கண்ணொளியின் கதகதப்பில்<br>
வளர்ந்தேமே<br>
எம் கண்ணெல்லாம் குளமாக<br>
ஏன் மாற்றி விட்டாய்<br>
நிழல் நீதான் என்றிருந்தோம்!<br>
நீ கடல் நிலத்துக்குள்<br>
நிழல் தேடப் போய்விட்டாய்<br>
நியாயந்தானா?<br>
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்<br>
முத்தல்ல;<br>
நான்தானடா நல் முத்து எனச் சொல்லி<br>
கடற் கரையில் உறங்குகிறாயா?<br>
நாத இசை கொட்டுகின்ற<br>
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?<br>
விரல் அசைத்து எழுத்துலகில்<br>
வித்தைகளைச் செய்தாயே; அந்த<br>
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?<br>
கண் மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்<br>
பேரழகைப் பார்த்துள்ளேன் .........<br>
இன்று<br>
மண்மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்<br>
தடுப்பதென்ன கொடுமை!<br>
கொடுமைக்கு முடிவு கண்டாய்;<br>
எமைக் கொடுமைக்கு ஆளாக்கி<br>
ஏன் சென்றாய்?<br>
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்<br>
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?<br>
கடற்கரையில் காற்று வாங்கியது போதுமண்ணா;<br>
எழுந்துவா எம் அண்ணா<br>
வரமாட்டாய். வரமாட்டாய்;<br>
இயற்கையின் சதி எமக்குத் தெரியுமண்ணா .........<br>
நீ இருக்குமிடந் தேடியான் வரும் வரையில்<br>
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா .........<br>
நான் வரும் போது கையோடு கொணர்ந்து<br>
அதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!

(1969 இல் தமிழக முதலவர் அறிஞர் அண்ணா மரணமானபோது கலைஞர் கருணாநிதி எழுதியது இங்கு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## நினைவுகளை மறப்போமா?

எங்கே போனார்கள்
இந்த மனிதர்கள் ?

நேற்று வரை
எனது இனிய கீதமாய்
உறவின் நாதமாய்
இன்பத்தின் உறை
விடமாய்
இருந்த என்னவர்கள்
எங்கே போனார்கள்...?

பனைவளவுகளிலும்
வயல் வெளிகளிலும்
தாச்சி மறித்து
பந்துகள் உருட்டி
உயிருட்டிய
என் அன்பு நண்பர்கள்
எங்கே போனார்கள்...?

திருவிழாக்களிலும்
நூலகப் பணியிலும்
சிரமதான இயக்கத்திலும்
பம்பரமாய்ச் சுழன்று
தேனீக்களைப் போல
என்னுடன் கூடி
உழைத்த உடன் பிறப்புகள்
எங்கே போனார்கள்...?

தண்ணிலவிலும்
தகிக்கும் வெயிலிலும்
தோட்டவரப்புகளில்
விண்ணதிரப் பாடி
இன்பக்களிகூட்டி
ஆடிய ஆட்டங்கள்
பாடிய பாட்டுக்கள்
அத்தனையும் மறந்து
எங்கே போனார்கள்...?

கீரிமலைக் கடலிலும்
கசூரினா பீச்சிலும்
பொறுக்கிய சிப்பிகளுள்
தேடிய முத்துக்களை-
தேங்காய்ச் சொட்டுடன்
கிடுகு வேலிக்குள்
சின்னாச்சிக் கிழவிக்குத்
தெரியாமல்
ஒளித்து வைத்த
புழுக்கொடியல்களை-
புகையிலைக்கிடங்கினுள்
மறைத்துப் புகைத்த
சுருட்டுத் துண்டுகளை-
எல்லாம் மறந்து
எங்கே போனார்கள்...?

இனப்பகையின் வெம்மை
யுடன்
இரவுகளின் உலைச்சல்களை
யும்
உறவுகளின் இருப்பையும்
கருதி
பாரெங்கும் பறந்து
ஊர்விட்டு ஊர்மாறி
எல்லை மாறி எல்லை மீறி
இங்கிலாந்து, பிரான்ஸ்,
ஜேர்மனி, சுவிற்சர்லாந்து
டென்மார்க்,
ஆஸ்திரேலியா
மற்றும் பல நாடெங்கும்
'ஒப்பின் விசா'விலும்
அகதி முத்திரையிலும்
முகவரியிழந்து
முகமிழந்து
எங்கே போனார்கள்
என் அருமை மக்காள்...?

அவர்கள் இன்றி
எந்நாடும், என்னிதயமும்
வெறிச்சோடி
வெறுமையாய்ப்
போனதை யார்
அறிவார்...?

என்னுடைய கதையை
என்னுடைய வாழ்வை
யாருக்கு நான் சொல்ல!
யார் இருக்கிறார் கேட்க...?

தார் ரோட்டிலும்
குச்சு ஒழுங்கையிலும்
அடையாளம் காணப்
படாத
அநாதைப் பிண்டங்களாய்
தடைப்பட்ட வாழ்வின்
சோகக் கோலங்களை
காணும் அவலத்தில்
வாழ்வு ஓடிச் செல்ல
காலம் விளைத்த
கொடுமையைக் கேட்க
யார் இருக்கிறார் இங்கே...?

மோசம் மிகும் சூழலில்
நாதியற்றுப் பேசுவோ...?
பாசங்கள் அகன்றுவிட
பந்தங்கள் அறுந்து விட
பாலைவனத்துக்
கானல் நீர் தவிர
பற்றுவதற்கு
எதுவுமே இல்லையோ...?

வாடிய செடிகளும்
சிதறிய மரங்களும்
ஓலமிடும் பறவைகளும்
உருமாறிய மிருகங்களும்
சரிந்த கட்டிடங்களும்
எரிந்த கொட்டில்களும்
இன்னும் இங்குள!

இடிந்த இதயங்களுடன்
இடுகாடுகளாய் மாறிய
ஷெல் தொட்ட
கோயில்களும்
குண்டுபட்ட வீதிகளும்
உடைபட்ட வீடுகளும்
இன்னும் இங்குள!

முளைவிட்ட பயிர்களும்
முந்தாநாள் பிறந்த
மழலைக்குழவிகளும்
புதுக்குரலில் பாடும்
பலாக்கொட்டைக் குருவி
களும்
நிலவோடும், இருளோடும்
மழையோடும், வெயி
லோடும்
இசை பாடும் தென்றலும்
இன்னும் இங்குள!

இனி நமக்குரிய
உரிமை உறவுகளாக
தனிமை போக்கும்
அருமருந்துகளாக
அவை எம்முடன்
கதை பேசி உறவாடும்
இன்பத்திருநாள்
வெகு தூரத்தில் இல்லை

அப்போதெல்லாம்
உம்மைப் பற்றிய
மறக்கலாகா நினைவுகள்
காலச் சுழலில்
எமக்கு மறந்து போகும்
மறந்தே போகும்......!

**கந்தையா ஸ்ரீகணேசன்**

## நாம் வேண்டுவது

உலகில் உள்ள மதங்கள் யாவும்
ஒழுக்கம் உண்மை உயர்வு மூன்றும்
உலக கடவுள் என்றே சொல்லும்
உணர்ந்து கொள்வீர் ஒருமைப் படுவீர்

நாளெல்லாம் நல்லுணர்வு வேண்டும்
நன்மையினைச் செய்தே வாழ வேண்டும்
இல்லாமை துடைத் தொழிக்க வேண்டும் இதை
எல்லோரும் வரவேற்க வேண்டும்

அருகில் இருந்து ஏழையைக் கெடுக்கும்
அழிவை மனதில் பறித்திட வேண்டும்
இருளாய் மாறும் ஏழையின் நிலையும்
இனியோ மாறிட வேண்டும்.

★ அ. நிக்ஸன்

## இதயம் இழக்காதீர்

பூ என்பர் பொன் என்பர் பொன்னின் மணி என்பர்
அன்பென்பர் அழகென்பர் ஆருயிரும் நீ என்பர்
மான் என்பர் மயில் என்பர் மைபூத்த விழி என்பர்
நீயே நிதி என்பர் நினைவெல்லாம் நீ என்பர்

முன்னாலும் பின்னாலும் சொல்லாமலே அலைவர்
கண்ணாலும் கருத்தாலும் காதல் மொழி கூறிடுவர்
என்னாளும் என் மனைக்கு நீயே விளக்கென்பர்
சொன்னாலும் கேளாமல் தொடர்கதையாகிடுவர்

பேதையர் நாம் ஏமாந்தால் பெருத்ததொரு
சோதனை தான்
சாதனைபுரிந்திடுவர் சரித்திரத்தை மாற்றிடுவர்
சந்திரனைச் சாட்சிவைத்து சதிவேலை பார்த்திடுவர்
போதை முடிந்த பின்னால் பாதையை மாற்றிடுவர்

காதை முடிந்து விடும் காதல் கசந்து விடும்
பேதையர் நம்வாழ்வு சிதைச் சிறையாகி விடும்
பணி கொண்டலையாதீர் பாவிகளை நம்பாதீர்
இனியும் இவரை நம்பி இதயம் இழக்காதீர்

★ செவ்வந்தி மகாலிங்கம்

## இன்ப துன்பங்கள்

உலகவாழ்வினில் இன்பம் வருவதும்
ஒன்றுடன்பல துன்பம் நிகழ்வதும்
இயற்கையில்இது என்றும் நடப்பது
என்றுவாழ்வதே உள்ளவழி அதே

பிறர் உறும் துன்பம்
பேசி மகிழ் வதும்
இன்பம் உற்றி டில்
ஏசி நகைப் பதும்

அறிஞர் என் பவர்
அடையும் இன் பமும்
அமலவர் வாழ் வில்
அடையும் துன் பமும்

தாம் உறு வது
ஆம் என எண்ணுவர்
கலைஞர் வாழ் வினில்
கண்ட நிகழ் வுகள்

அனைத்து மக்களும் அடைய இன்பமே
ஆண்டவன்விதி அமைக்க மறந்தனன்
தினைத்துணைதுன்பம் மனதில் அடைதலும்
தெரிந்துகொண்டதும் வருந்தி வாடுவர்

வாழவேண்டிய வழிகள் கூறுவர்
பாழும்உலகினில் பழிகள் சொன்னவர்
ஏழைமக்களை எண்ணி டாதவர்
ஊழதென்றுமே உறுவர் ஆறுதல்

என்னஉலகடா இந்த வீட்டிலே
இறந்துபோனவர்க் எழும் ஒலியிது
துன்பம்என்றுடன் தொலைந்து போமடா
இந்தவாழ்வினி எதற்கு உனக்கடா

அந்தவீட்டினில் இன்ப ஒலியடா
அங்குஉள்ளவர் மகிழ்ந்து ஆடுகிறார்
கணப் பொழுதினில் காணும் இன்பமும்
துன்பமாகியே தொடர்ந்து வருமடா

கணவன்மனைவியாய் மக்கள் வருவதும்
காட்சிப்பொருளென அணிகள் அணிவதும்
கைம்மைநோன்பினால் கண்ணீர் விடுவதும்
கண்டபோதினில் கண்கள் பொங்குமே

இந்தஉலகமும் இந்த மனிதரும்
என்னபடைப்பிது இறைவன் பித்தனே
இன்பஉறுபவர் இன்பம் உணரட்டும்
எல்லாம்பொய்யென பின்பு உணருவர்.

★ வ. யோகானந்தசிவம்

## வழி மாறிப் போன வசந்தம்

குளிரும் நிலவும்
தணலாச் சுட்டது
ஓர்
மலரும் முள்ளாய்
மாறிப் போனது
காதல் இன்று
கானல் ஆனது
ஆம்
ஓர் வசந்தம்
இங்கு
வழி மாறிப்போனது
இது
போலிச் சிறகுகளை
கட்டிப் பறந்து
பொய்யாகிப் போனவனின்
புராணம்
அவன்
இளமை வாசலில்
காதலுக்காய்
காத்திருந்து
கவலைக் கனிகளை
பரிசாகப் பெற்றவன்
கண்களின் வழியே
சொர்க்கத்தைக் காணத்
துடித்து
நரகத்தின் நிரந்தர
பிரஜையானவன்
தன்
காதல் நெருப்பினால்
தானே சருகானான்
வாழ்க்கை
கோலம் அறியாமல்
வழியில் இரையானான்
அவள்
காதலுக்கும்
கொம்பியூட்டர்
கணக்குப்பார்த்தாள்
சமுதாய கணக்கேடு
நட்டத்தை காட்ட
அவளது சமத்துவ
தத்துவம் சாயமிழந்தது
காதல் பாடல்
கனவுப் பாடலாக
அன்பு என்பது
வேசம் என்றும்
காதல்புரட்சி என்பது
வெறும்கோசம் என்றும்
புதுப்பாடம் சொன்னாள்
பாடம்புரிந்தபோது அவன்
பலியாகிப் போயிருந்தான்
வசந்தம் விளைந்த வளமான
அவன் மனசு
சுகந்தம் இழந்து சருகு
மலராக
இருள் கவிழ்ந்து கிடக்
கிறது.

**வேலணையூர் தாஸ்**

## பிரசவம்

கவிஞனுக்கும்
கற்பனைக்கும்
நடக்கும் உடலுறவில்
பிறக்கின்றன
கவிதைக் குழந்தைகள்

## இதயம் இல்லாதவன்

அதிசயம்!
ஆனால் உண்மை.
இதயம் இல்லாமல்
வாழ முடியுமா...?
நான்
வாழ்கிறேன்!
அதை
அவளிடம்கொடுத்துவிட்டு.

## இது இந்தக் காலம்

உடலின் கூறுகளில்
ஒரு மாற்றம்!
குறித்துக்கொள்ளுங்கள்
இதயத் துடிப்பை
நிர்ணயிப்பது
இதய இயக்கி அல்ல
நாய்களின் குரைப்பு!

வல்வையூர்
எஸ் ஜி. வேலன்

## அத்தியாயம் நான்கு

பொழுது விடிந்து சில மணித்தியாலங்கள் கழிந்து விட்டனவாயினும் அருண்மொழி எழுந்திருக்கவில்லை இரவு வெகுநேரம் வரை படித்ததினால் அயர்ந்து தூங்கும் அவளை எழுப்பக் கூடாது என்று பேசாமல் தன்வேலைகளில் ஈடுபட்டிருந்தாள் சந்திரஞானம்.

அந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு செம்மையாக அதை நடத்திச் செல்லும் திறன் படைத்தவர்களாக விளங்கினார்கள் ஒரு குடும்பத்தலைவனின் ஒழுங்கான ஒரு வாழ்க்கைமுறை அங்கே பிரதிபலித்துக் கொண்டிருந்தது அவரவர் தம்தம் கடமைகளை செய்து கொண்டிருந்ததே அதற்கு சான்றாகும்.

உழவுயந்திரம் ஒன்று உறுமிக் கொண்டு சென்ற இரைச்சலில் கண்விழித்த அருள்மொழி சோம்பல் முறித்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்த்தாள் நேரம் ஏழுநாற்பதைக் கடந்து கொண்டிருந்தது. இவ்வளவு நேரமும் அயர்ந்து தூங்கிவிட்டோமே என்று எண்ணிய பொழுது இரவு பல மணிநேரம் படித்ததும், பின் தூங்கப் போனதும் அம்மாவுடைய வாழ்க்கைப் பாதையை மீனாட்சிப் பாட்டியிடம் கேட்டறிந்ததும் அதை நினைத்துக்கொண்டே பலமணி நேரம் தூக்கமின்றிப் புரண்டு கொண்டு கிடந்ததையும் நினைத்துக் கொண்டே எழுந்திருந்தாள்.

அவர்கள் எளிய வாழ்க்கை வாழ்ந்த போதும் எதிலும் ஓர் ஒழுங்கு முறையிருப்பதை உணர்ந்தாள் அருள்மொழி. அம்மா குசினிக்குள் காலைச் சிற்றுண்டி தயாரித்துக் கொண்டிருந்தாள் அப்பா வயற்காட்டிற்கு போய் விட்டார் தம்பி வீட்டுத்தோட்டத்தில் காய்கறி பறித்துக் கொண்டிருந்தான் தான்மட்டும் . அவளுக்கு மனதை என்னவோ செய்தது.

முகம் கழுவிக் கொண்டு வந்தவள் 'அம்மா தண்ணி போட்டுத் தாருங்கோ' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள். பூசையறையில் விபூதி தரித்து வணங்கி விட்டு வந்து படிப்பதற்காக மேசையில் உட்கார்ந்து கொண்டாள். அம்மா தேநீர் கோப்பையுடன் வந்தாள்

அம்மாவைப் பார்க்கும்போது அவளுக்கு வேதனையாக இருந்தது பணமில்லாத குடும்பத்தில் பிறப்பவர்களுக்கு தனிப்பட்ட ஆசைகளே இருக்கக் கூடாது போலும், இல்லையெனில் ஒருவன்மீது பிரியப்பட்டு அவனை அடைய முடியாது அவனுடன் யாருக்கும் தெரியாமல் ஓடிவந்து உலகின் ஒரு மூலையில் சிறப்பாக குடும்பம் நடத்தும் தாயை அவர்களின் இனத்தவர்கள் சேர்த்துக் கொள்வதில்லை என்றால் ? அம்மா என்ன செய்து விட்டாள்? சாதாரணமாக செய்யக்கூடாததுதான் அதற்காக பிரியமில்லாத ஒருவனுக்கு வாழ்க்கைப்படுவதைக் காட்டிலும் தன்மீது உயிரையே வைத்திருக்கும் ஒருவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாளே. சீரழிந்து போகாமல் சீர்சிறப்புடன் அம்மா வாழ்வது தான் அவர்களுக்கு பிடிக்கவில்லையா? என்ன உலகமப்பா இது?

அம்மா திடசித்தமுள்ளவள், துணிந்தவள், இல்லையென்றால் குடும்பம் கௌரவம், சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் மீறி தனக்குப் பிடித்தமானவனுடன் புறப்பட்டு தனக்கென ஒரு வாழ்வை அமைத்துக்கொண்டு புதிய மனிதர்கள் மத்தியில் வாழ்க்கை நடத்துகின்றாளே இதுவரை காலமும் தன் குடும்பத்தைப் பற்றியோ சொந்த பந்தங்கள் பற்றியோ யாருடனும் எதுவும் கதைத்திருப்பாளா? எவ்வளவு அழுத்தமான மனம்.

அப்பாவை நினைக்கும் பொழுது அவரிடம் எதுவும் நினைக்கத் தோன்றவில்லை. பணம் வாழ்க்கைக்கு முக்கியம்தான். அதற்காக பணம்தான் வாழ்க்கை என்று அலையாத மனப்பாங்கு. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்புடைய தாயிருக்கும் என்ற வள்ளுவர் வாக்குக் கொப்ப வாழும் தன்மை. ஓரளவுக்குப் படித்தவர் பக்திமான். இலக்கியரசனையுள்ளவர் தான் தன் குடும்பம் என்று எண்ணி வாழ்ந்தாலும் தான் சார்ந்து நிற்கும் சமுதாயத்தின நன்மை தீமைகளிலும் பங்கேற்று, மற்றவர்களும் நன்கு, வாழவேண்டும் என்று சேவை செய்பவர்.

ஊரிலுள்ள பொது நிலையங்கள், மக்கள் மன்றங்கள் தொழிலாளர் நிலையங்கள் உட்பட மாசிலாமணி அங்கத்தவராயிருந்து செயற்படுகின்

பாட்டி கூறுவது கேட்டு சிரித்தாள் அருள்மொழி.

''பாட்டி நான் படிச்சு பட்டம் பெற்று பெரியவளாய் வரவேண்டும் என்று என் தலையில் எழுதியிருந்தாலும் உங்களைப் போன்ற வயசானவர்கள் ஆசிர்வாதம்தான் பாட்டி நான் இப்படி வரக்காரணம்'' என்று கூறிக் கொண்டே குசினிக்குள் நுழைந்தாள் அருள்மொழி ''என்னவோ குழந்தை நீதாண்டி வயசான எங்களை மதிக்கிறாய். இந்தக்காலத்திலே எங்கடை பேச்சை யார் கேட்கிறார்கள். அங்கை பார் என்ரை மூத்தவன்ரை கழுதைகளிருக்கு என்னை செல்லாக்காசாக மதிக்கிறதில்லை'' என்று பாட்டி தன் சுயபுராணம் வாசிக்க ஆரம்பித்து விட்டாள்.

மீனாட்சிப்பாட்டி கதைக்க ஆரம்பித்து விட்டால் அவளாக நிறுத்தி கேள்வி கேட்டாலொழிய மற்றவர்கள் கதைக்க முடியாது.

ஞானம் பிட்டுக்கு மாபிசைந்து உலூர்த்திக் கொண்டிருந்தாள் உடைத்து வைத்திருந்த தேங்காய் பாதியை

நின்று வாதிக்கும்போது அம்மாவின் செயல்முறையை அவளால் ஏற்றுக்கொள்ளமுடியாதிருந்தது நடந்தவற்றை நினைத்து பலன் இல்லையாயினும் எதிர்காலம் எப்படி ஆகுமோ என்றுதான் அவள் வருந்தினாள்

''உன் சினேகிதியின் கடிதம் வந்ததா நங்கை'' ஞானம்தான் கேட்டாள்.

''ம் நேற்று வந்தது. அவளோடு இன்னொரு பிள்ளையும் அவள் தகப்பனும் வருகிறார்களாம்.''

''நீயும் அப்பாவைக் கூட்டிப்போறியா?'' குறுக்கிட்டாள் மீனாட்சிப்பாட்டி.

''தேவையில்லைப் பாட்டி அந்தப் பிள்ளையின்ரை தகப்பனே எங்களை கூட்டிக் கொண்டுபோய் விட்டிட்டு போவார்.''

''என்னவோ குழந்தை நீ மகராசியாய் இருக்கணும்டி உன்னைப் பெத்தவளின்ரை மனக்குறை உன்னாலதாண்டி தீரணும் என்று மீனாட்சிப்




றான். அவன் விட்டாலும் அவ்வூர் மக்கள் அவனை விடுவதாயில்லை படிப்புவாசனையில்லாத குடியேற்றவாசிகளும், படித்துவிட்டு குடியேறியவர்களுமாய் அந்தப் பிரதேசம் விளங்கிய காரணத்தால் ஓரளவு சமுதாய நலத்துடன் ஒன்றிப் போகும் சுபாவ குணமுள்ளவர்களே பொது நிலையங்களுக்கு தெரிவாகியிருந்தனர் மாசிலாமணிக்கு பலரிடமும் நல்ல செல்வாக்கு. ஆகவே தந்தையைப்பற்றி அவள் உயர்வாக மதித்தாள். அத்துடன் அவள் நினைவுகளை தடைசெய்ய வேண்டுமென்றே என்னவோ மீனாட்சிப் பாட்டி வந்து சேர்ந்தாள்.

'ஞானம்' குழந்தை சோதனைக்கு போறாளாமே'' என்று கேட்டுக் கொண்டே குசினிக்குள் நுழைந்தாள்.

அந்த வார்த்தையைக் கேட்டதுமே அருள்மொழிக்கு பரீட்சை நினைவு வந்து விட்டது. நாளை மறுநாள் புறப்படவேண்டும். பரீட்சைக்கு பத்து நாளைக்காவது முன்பு போனால் தான் நல்லதென்று தீர்மானித்திருந்தாள். வீட்டிலும் சொல்லிவிட்டாள்.

மகளுக்கு பரீட்சை வந்ததும் சந்திரஞானத்துக்கு சந்தோஷமாகவிருந்தது. தாயின் அந்திமேட்டிக்கு மகளையும் அழைத்துப் போக வேண்டுமென மாசிலாமணி கூறியிருந்தான் அவனுடைய பேச்சைத் தட்டிக் கழிக்க முடியாமல் ஞானமும் சம்மதித்திருந்தாள். காலம் அவளுக்கு துணை செய்வது போல அருள்மொழிக்கு அந்தச் சமயத்தில் பரீட்சை வந்து விட்டது

''என்னவோ ஞானம் நீ கடவுளைக் கும்பிட்ட பலன் உன்ரை குழந்தை இந்த ஊரிலே படிச்சு வாத்தியாகி விட்டாள். மேலே பரீட்சை எழுதி இன்னும் பெரியவளாகப் போறாள்'' என்று மீனாட்சிப்

எடுத்து துருவ ஆரம்பித்தாள் அருள்மொழி.

''என்னவோடியம்மா நீ உன் தாய் ஞானத்தைப் போலவேபெரியவங்களை மதிக்கிறதாலே தாண்டி கடவுள் உனக்கு கருணை காட்டியிருக்கிறான்'' என்று மீனாட்சிப் பாட்டி கூறி முடிக்க 'க்ளுக்' என்று சிரித்தாள் அருள்மொழி.

அவளுடைய சிரிப்பின் காரணம் அவளுக்கு மட்டுமே புரிந்த ஒன்றாக இருந்தது. பெரியவங்களை அம்மா மதித்தாளா? அதை அவளால் சீரணிக்க முடியவில்லை. அப்படி மதித்திருந்தால் தன்னை வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தை சகோதரங்களைவிட்டு ஓடிவந்திருப்பாளா? என்ன தான் அவர்கள் மறுத்திருந்

கே.எஸ்.ஆனந்தன்

தாலும் தான் விரும்பியவனைத் தான் கட்டிக்குவேன் என்று பிடிவாதம் பிடித்து முறைப்படி வாழ்க்கையை அமைத்திருப்பாளே. முறைதவறி வந்தபடியால் தானே யார் முகத்திலும் விழிக்காமல் உறவு சுற்றம் என்றில்லாமல் எங்கோ ஓர் மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டும்? நினைத்த போது அம்மா மீது பரிதாபம் கூட ஏற்பட்டது.

முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்கள் அவள் மனதில் தோன்றி அழிந்து போயின. அம்மாவின் கட்சியில் நியாயமிருப்பதாக வாதியாயிருந்து வாதித்தாலும் அடுத்தகணம் ஒரு பெண்ணுடைய நெறிமுறைகள், சமுதாயத்தில் அவளுக்கிருக்கும் வரம்புகள் இவற்றை அவள் மீறுவதால் ஏற்படும் விபரீதங்களை நினைத்து பிரதிவாதியாக

பாட்டி கூற, இடைமறித்தாள் ஞானம்.

''பாட்டி யார் யாருக்கு என்னென்ன எழுத்தோ அப்படித்தான் நடக்கும். பரீட்சைக்குப் படிக்கும் அவளுக்கு இதுகளை ஏன்? நீ போய் படியம்மா.''

''அம்மா அங்கே போனால் முழுகேலாது. நான் இன்றைக்கு ஒரு எண்ணெய் முழுக்கு போடணும் சீயாக்காய் இருக்கே'

'சீயாக்காய் வாங்கணும்'

''ஏண்டி குழந்தே! இந்த மயிருக்குக் கண்டதுகளை யெல்லாம் பூசி அநியாயப்படுத்தி விடாதே, சவரி வைக்காமல் முடியக்கூடிய மயிருக்கு அரப்பு வைச்சு முழுகு'' என்றாள் மீனாட்சி.

''அரப்பு இங்கே எங்கே கிடைக்குது பாட்டி.''

நான் கொண்டுவாறன் என்று எழுந்துகொண்டாள் மீனாட்சி.

அவள் எப்போ எழுந்து செல்வாள் என்று காத்திருந்தவள் போல ஞானம் மகளிடம் கூறினாள். ''இங்கே பாரம்மா! என்னதான் மீனாட்சிப்பாட்டி எங்களிடம் அன்பாயிருந்தாலும் சில சில விடயங்களை மீனாட்சிப்பாட்டியிடம் கூறக் கூடாது. அவ நாலுவீட்டுக்குப் போறவ. வேணுமென்றல்ல கதைப் போக்கில சிலசமயம் நம்ம உன் வீட்டு விடயங்களையும் கூறிவிடுவா இதனால எத்தனை வம்பு தும்புகள் வரும் தெரியுமா?'' ''அம்மா என்னை இன்னும் பாப்பா என்று நினைகின்றீர்கள் நான் யாரிடம் எப்படி பேசுவது? என்ன பேசுவது? என்று அளந்துதான் கதைப்பேன் என்ன இருந்தாலும் உங்கள் பெண்ணுக்கே

## சமூக நவீனம்

என்று அவள் கூறியபோது ஞானத்தின் இதயத்தில் முட்கள் குத்தியது போன்று வலிப்பே ஏற்பட்டது.

அவள் ஏன் அப்படிச் சொன்னாள்? என்ன கருத்துடன் கூறினாள்? என்று நினைத்துப்பார்க்க முடியாது தவித்தாள் ஞானம். என்ன இருந்தாலும் அவளுடைய பலவீனத்தில்தாக்கிவிட்டாள் அருள்மொழி.

''என்னவோ நங்கை சொல்லவேண்டியது என் கடமை. எனக்கு யாராலும் சுகமில்லை. உங்களையும், உன் அப்பாவையும் நம்பித்தான் இருக்கிறன். தப்பாகச் சொல்லியிருந்தால் மன்னிச்சுக்கடி'' என்றபோது அவள் விழிகளில் அருவிபாய்வது போன்று நீர் முத்துக்கள் உதிர்ந்தன.

அவளைப்பார்க்க பரிதாபமாகவிருந்தது, நங்கைக்கு ஒருநாளுமில்லாமல் ஏன் இப்படிக் கூறினேம் என்றாகிவிட்டது. அவள் சொல்வதிலும் உண்மையிருந்தது அவர்களை நம்பித்தான் அவள் வாழ்கின்றாள்.

''இப்பஎன்னம்மா சொல்லி விட்டன்? என் தாயோடு இப்படி எல்லாம் கதைக்கக் கூடவா எனக்கு உரிமை இல்லை'' என்றவள் தாயின் கண்ணீரைத் துடைத்துவிட்டாள்,

''நங்கை நான் எனக்கென்று வாழ்ந்துவிட்டன் இனி வாழ்வதே உங்கள் நன்மைக்காகத் தான். என் கஷ்டம் என்னுடனே முடிந்துபோகட்டும் நான் பெற்றவர்களென்றாலும் கஷ்டமில்லாமல் வாழட்டும் என்றுதான் சொன்னேன் அதனால் என்னடி இப்போ? இதை பெரிசாக எடுத்துக்காதே'' என்று மகளை மார்புடன் தழுவி அணைத்துக் கொண்டாள்.

அம்மாவைப் பார்க்கும் போது அவளுக்குப் பெருமை. சிவந்தமேனி அளவான உயரம். உயரத்துக்கு தக்க உடலமைப்பு இந்தவயதிலும் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கும். வட்டக்கரிய விழிகள் எதற்கும் அவசரப்படாத அழுத்தம் நிறைந்த மன உறுதி. இளநரை. ஓடிய கேசம் அதிலும் ஓர் கவர்ச்சி இந்த அழகு நிலத்தில் விளைந்ததால்தான் தன்னைப் பார்ப்பவர்கள் எல்லாம் பெருமைப் படுகின்றார்கள் என்பதில் அவளுக்கு ஓர் பெருமை தாயை ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்னடி அப்படி பார்க்கிறே?''

''இந்த வயதிலும் அழகாயிருக்கும் என் அம்மா இளம் வயதில் எப்படி அழகாயிருந்தாளோ?'' என்று கூறிச் சிரித்தாள்.

''போக்கிரிப் பெண்ணே உன்னைவிடவா நான் அழகாயிருந்திருப்பேன்'' என்று மகளுடைய கன்னத்தில் கைவைத்து நெட்டிமுறித்துத் திருஷ்டி கழித்தாள்.

மாலை நான்கு மணியிருக்கும் வெளியே போவதற்காக ரகுவரன் புறப்பட்டுக் கொண்டு வந்தவன் வெளிக்கதவைத் திறந்து கொண்டு இறங்கினான் வெளியே கேற்றடியில் ஆட்கள் கூட்டமாய் நிற்பதைப் பார்த்துவிட்டு என்னவோ ஏதோ என்று விரைந்து சென்றான்.

(வளரும்)

# தபால்தலை உலகம் பெரியது

## பல புதுமைகளும் நிறைந்தது

"தபால்தலை" உலகம் மிகப் பெரியது; புதுமைகள் நிறைந்தது. தபால் தலை சேகரிப்பு, அறிவியல் புதுமைகளைக் கண்ட எவரும் வியக்காமல் இருக்க முடியாது. அஞ்சல் தலைகள் ஏலம் போகும் விலையைக் கேட்டால் எவரும் மூக்கின்மேல் கைவைக்காமல் இருக்கமுடியாது. தபால்தலைகளின் அழகைக் கண்டால் அதைச் சேகரிக்காமல் இருப்பவர்க்கும் ஆவலைத் தூண்டும். தபால்தலையை அச்சடித்து வழக்கத்துக்குக் கொண்டு வந்தவர் ரோலன்கில்லி என்பவராவார்.

உலகில் முதலில் தபால் தலையை வெளியிட்டுப் பயன்படுத்திய நாடு பிரிட்டன். ஆகையால் இன்றுவரை நாட்டின் பெயரைக் குறிப்பிடாமல் தபால் தலை வெளியிடும் ஒரேநாடு பிரிட்டன். 1840ஆம் ஆண்டில் மே மாதம் 6 ஆம் திகதி பிரிட்டன் முதல் தபால் தலையை வெளியிட்டது தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட பென்னி பிளாக் என்ற தபால்தலை ஒன்று 1988 நவம்பரில் லண்டனில் 71 ஆயிரத்து 50 பவுணுக்கு ஏலம் போனது. அதாவது இருபது லட்சம் ரூபாவுக்கு விலை பாயிருக்கின்றது. ஒரு சிறிய கோகித வில்லைக்கு இவ்வளவு விலையா எனக் கேட்கலாம் ஆனால் உலகம் முழுவதும் அபூர்வ தபால் தலைகள் இப்படித்தான் விலை போகின்றன.

இந்தியா 1854 ஆம் ஆண்டு ஒரு தபால்தலை வெளியிட்டது. நான்கு அணு விலையுடன் வெளியிடப்பட்ட இத் தபால்தலைகளில் ஒரு சில தபால்தலைகளில் விக்ரோறியா ராணியாரின் உருவப்படம் தலைகீழாக இருந்தது இவ்வாறு தவறுகள உள்ள தபால் தலைகளின் விலைகளோ கிறுகிறுவென ஏறிவிடுகிறது. 130 ஆண்டுகளின் பின், 1924 ஆம் ஆண்டு இந்த தபால் தலை ஏலத்துக்கு வந்தது.

அதை ஏலத்திற்கு எடுத்தவர் தபால்தலையில் இருந்த ஆர்வத்திஞல் இருநூறு பவுணுக்கு விலைக்கு வாங்கிஞர். ஆஞல் அதே தபால்தலை 1988ஆம் ஆண்டில் லண்டனில் ஏலத்துககு விடப்பட்ட போது அதன் மதிப்பு பதினையாயிரம்ஸ்ரேலிங்பவுணுகிவிட்டது. அதாவது நான்கு லட்சம் ரூபா.

அமெரிக்காவில் தபால் தலை சேகரிப்போர் இதற்கும் ஒரு படி மேல் சென்று விட்டனர். 1856ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கயாஞவில் வெளியிடப்பட்ட தபால தலையை ஒரு பாடசாலை சிறுவன் கண்டுபிடித்து ஒன்றரை டொலருக்கு விற்ருன் இதே தபால் தலை லண்டனில் ஏலம் விடப்பட்டபோது மூவாயிரம் பவுணுக்கும் பின் எட்டாயிரம் பவுணுக்கும் விலை ஏற்றப்பட்டது. இது மீண்டும் அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டு ஏலம் விடப்பட்டபோது அதை ஒன்பது லட்சம் டொலருக்கு ஒருவர் விலைக்கு வாங்கிஞர் இது ஏறத்தாழஒரு கோடி ரூபாவுககுச் சமஞகும்.

தபால்தலை சேகரிக்கும் பழக்கம் ஒரு பொழுதுபோக்கு இப்போது தபால் தலையை சேகரிக்கும் கலை பிலாற்றலிச் என அழைக்கப்படுகிறது. தொடக்க காலத்தில் இது டிபரோமெனியா என அழைக்கப்பட்டது. 1865இல் பிரஞ்சுக்காரர் ஒருவர் பிலாற்றலி எனும் பதத்தை உருவாக்கிஞர் லண்டனில்ஸ்ராலி கிறிட்சன் எனும் அஞ்சல் தலை நிறுவனம் உள்ளது. இவர்கள் ஆண்டு தோறும் வெளியிடும் அஞ்சல் தலைகள் பற்றிய சஞ்சிகை உலகப் புகழ் மிக்கது. பழைய தபால் தலைகளின் இன்றைய மதிப்பு என்ன என்ற விபரத்திலிருந்து அந்தத் தபால்தலை எவ்வாறு வெளியிடப்பட்டது எப்படி, எங்கு, எந்தத் திகதியில் வெளியிடப்பட்டது. யாரால் வெளியிடப்பட்டது என்ற விபரம் அந்த நூலில் காணப்படுகிறது. தபால் தலைகளை வாங்குவது விற்பது, ஆண்டுதோறும் உலகநடுகள் வெளியிடும் தபால்தலைகளை பட்டியலிடுவது போன்றவை இந்நிறுவனத்தின் சிறப்பான பணி.

தபால் தலை சேகரிப்போர் என பிரிட்டனில் 40 லட்சம் பேரும், அமெரிக்காவில் 2 கோடி மக்களும் உள்ளனர். அரசர் முதல் ஆண்டிவரை எல்லோரும் ஈடுபடும்பொழுது போக்கு இது.

ஒருவர் பறவைகளை சேகரிக்கிருர். மற்றவர் விலங்கு சம்பந்தமானவற்றை சேகரிக்கிருர். இன்னெருவர் விமானத்தைப் பற்றி தகவல்களை சேகரிக்கிருர் இவ்வாறு அந்தந்தத் துறை சேகரிப்போருக்கு அவ்விடயத்தில் கூடிய அறிவு திறன் வளர்கிறது பிரிட்டனில் தபால்தலை சேகரிக்கும் சிறுவர்களை ஊக்குவிப்பதற்காக ஸ்ராம்பக்கினம் எனும் நிறுவனத்தை அஞ்சல் திணைக்களம் நடத்தி வருகிறது.

---

## சீதனம் கொடுப்பதா?

ஏ;பெண்ணே;
சீதனப் பேயை
விரட்டுவோம் எனும்
உன் தொண்டைக்குழாய்
வேட்டுகள் வெட்டிகளே!
ஓதிப் பயனில்லை.
சாதித்துக் காட்டு
உன் மூளைக்குத்
தீனி போடு
இன்று முளைப்பது-
நாளை விருட்சமாகலாம்.
எத்தனையோ அப்பாமார்
"எலும்புத் துண்டுகளைக்
கையில் வைத்துக் கொண்டு
குரைக்கும் சத்தம் தேடி
அலைகின்ருர்கள்
அவர்கள்-
அந்தஸ்த்தையே
பார்க்கின்ருர்கள்
ஏன்? எத்தனையோ
பெண்கள் கூட
"அரு விலை" கொடுத்தாகிலும்
"பெரிய" இடத்துத்
தாலிக்கு
கழுத்தை நீட்டி
மாப்பிள்ளையின் முதுகைப்
படிக்கல்லாக்கித்
தம் அந்தஸ்தை
உயர்த்திடவே
துடிக்கிருர்கள்
கல்யாணச் சந்தையில்
ஆண்களை
ஏலம் போடுகிருர்கள்
தங்கள் விலைக்குக்
கட்டுப்படியாஞல்
'பதிவிரதன்' என்கிருர்கள்
கட்டுப்படி யாகாவிடின்
'படு பாவி' என்கிருர்கள்
என்னே விந்தை!
கொடுப்பவர்இருக்கும்வரை
வாங்கிடக் கைகள் நீளும்
செருப்புக்கள்தேய்ந்தபின்பு
வெறுப்படைந்து
பயனில்லை
இன்றே இப்பொழுதே
உன் கைகளை உயர்த்து
சீ-தனம் கொடுத்திடவா?
இல்லையில்லை
வாங்குபவனை அடித்திட
கொடுப்பவனையும் கூட

மகா யசோதரன்

---

## வியர்க்குருவைத் தடுப்பதற்கு விட்டமின் 'சி'

கோடை வெய்யிலின் வெப்பத்தின் தொல்லை நமது நாட்டில் மிகுதி ஆகும். சாதாரணமாக கோடைகாலங்களில் இளையவர் தொடக்கம் முதியவர் வரை களைப்புறுகின்றனர். இதனை 'கோடை அயர்வு' எனக்குறிப்பது உண்டு இவ்வகை அயர்வினை போக்கிட அல்லது தவிர்த்திட ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குளிர்சாதன வசதி(ஏர் கொண்டிசன்) போன்றவை கூட இவற்றின் விளைவே எனலாம்.

பொதுவாக கோடைகாலத்தில் செய்யப்படும் வேலைகட்கு பிற பருவ காலங்களை விட கூடுதலாக சக்தி செலவிட வேண்டியுள்ளது கூடுதல் சக்தியின் தேவைக்கேற்ப வைட்டமின் தேவையும் கூடுகின்றது இந்தஅடிபபடையிலான ஆய்வுகள் மூலம், கோடை அயர்வு போக்கவைட்டமின் 'சி' துணை செய்வதாகஅறியப்பட்டுள்ளது. சற்றேகூடுதலான வைட்டமின் 'சி' தேவை வெப்ப நாட்களில் ஏற்படும் வியர்வையிஞல் அல்ல என்று கருதப்படுகின்றது. ஆஞல் உடல் இயக்கத்தில் நேரும் பலவித வளர்சிதை மாற்றத்திஞலேயே இத்தேவை அதிகமாகிறது.

புண்கள் ஆற உதவும் கோலஜன்எனும் பொருளுக்கு வைட்டமின் 'சி' தேவை. அவ்வாறேஅமிஞேஅமிலம் வளர்கின்ற மாற்றத்திற்தும் உதவுகின்றது. மேலும் வைட்டமின் 'சி' இரத்தக் குழாய்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் நார் எபிநெப்ரின் என்ற இரசாயனப் பொருள் சுரக்கவும், அடரினல் சுரப்பி ஸடிராய்டுகள் தயாரிக்கவும் துணைசெய்கிறது நாளமில்லா சுரப்பிகளை நல்ல நிலைப்படுத்தப் பயன்படுகின்றது

நாள்தோறும் 300 முதல் 500 மி கி. வைட்டமின் 'சி' உட்கொள்ளுவதானது வியர்ச்குரு வராமல் தடுப்பதுடன் வியர்க்குரு வந்துவிட்டபோதும் அதஞலேற்படும் அரிப்பு தடிப்பு போன்றவற்றினின்றும் நிவாரணமளிக்கின்றது இயல்பாகவே, இவர்கள் வைட்டமின் 'சி' பற்ருக்குறையாளர்கள் என்று கருதிவிட வேண்டியது இல்லை கோடை காலத்தில் 'சி'யின் தேவை சற்று கூடுதல் ஆகும் தக்காளி, எலுமிச்சை, நெல்லிக்காய், மற்றும் ஆரஞ்சு போன்ற பழங்களில் வைட்டமின் 'சி, மிகுந்து காணப்படுகின்றது.

தொகுப்பு க. கனகராசா
ஆக்கம்- 'கலைக்கதிர்'

---

தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

### 4

## கல்வியும் காதலும்

வானளாவி உயர்ந்த மலைகள்
வளந்தரும் புகழ் வாய்த்த நற்கண்டி
தேன ளாவும் மலர்வனம் சூழும்
தெய்வ கங்கை மகாவலி ஓடும்
மீன ளாவும் நதிக்கரை யெங்கும்
மின்னை யொத்த யுவதிகள் சேர்வர்
கான ளாவும் பறவை யினங்கள்
கானம் பாடிக் களித்து மகிழும்

பாம்பு போல நெளிந்தாறு ஓடும்
பந்தல் போல முகில் வானத் தூரும்
தூம்பு தோறும் குளிர்ந்த நீர்பாயும்
தோடை மாபலா காய்கனி ஈயும்
காம்பு தோறும் புதுமலர் சிந்தும்
கள்ளை யுண்டபொன் வண்டுகள் பாடும்
கூம்பு போலப் பலமலை சூழும்
கோடி பல்வளம் சூழ்ந்திடும் கண்டி

குன்றின் மீதில் குறிஞ்சிக் குமரன்
கோயில் காணத் தவஞ்செய வேண்டும்
அன்று வானவர் துன்பம் துடைக்க
அசுர ரைவதம் செய்த முருகன்
இன்றுங் கூடப் பகைமை முடிக்க
எந்த நாளும் துணைசெய ஏந்தும்
இவன்றி வேலொடு வீரம் ததும்ப
வீற்றிருந் தருள் பூத்திடும் கண்டி

வையத் துள்ள மரங்களின் கூட்டம்
வண்ணம் மிக்க மலர்களின் ஈட்டம்
ஐயமில்லை இவ்வாசிய நாட்டில்
அனைத்து மொன்ருய் இலங்கிடும் தோட்டம்
துய்ய மாவலி கங்கைக் கரையில்
தோன்றும் பேராதனைப் பூங்கா ஒன்றே
தையலர் இளங் காளையர் நாளும்
தரிசிக் கின்ற தனிப்பெருஞ் சோலை

சோடி சோடியாய்க் காதலர் கூட்டம்
தோழ ரோடிளம் காளையர் கூட்டம்
பாடி பாடியாய் மங்கையர் கூட்டம்
பத்தி பத்தியாய் மாணவர் கூட்டம்
வேடிக்கை பார்க்கும் வெள்ளையர் கூட்டம்
வியந்து நின்றிடும் ஏனையோர் கூட்டம்
ஆடு பாலத்தில் ஏறிடும் கூட்டம்
அந்த, வாறு சனநட மாட்டம்

கண்டி யின்மருங் காக விளங்கும்
கவின்ஞெழுகு நற்பேரா தனையில்
பெண்கள ஆணகள் பெரியவர் ஆஞேர்
பேணிப் பல்துறைக் கல்வி பயிலும்
கண்ணை யொத்த வோர்பல்கலைக் கூட்டம்
கலைவ ளர்த்திடும் மாபெரும் பீடம்
எண்ணி லாத பெருமை யுடையது
இங்குதான் கல்வி காவேரி பெற்ருள்.

மருத்துவத் துறை கூறும் நுணுக்கம்
மற்று முள்ள அறிவியல் நுட்பம்
கருத்து டன்பயில் கின்ற பொழுதே
கலைஇ லக்கிய மீதிலும் ஆர்வம்
விருப்ப முற்றவ ளாக விருந்தாள்
வியக்கும் வாறரும் சொற்பொழி வாற்றும்
சிறப்பு மிக்கவ ளாயும் திகழ்ந்தாள்
செயல்தி றனிலும் ஈடிணை யில்லாள்.

### வேறு

கன்னி ஓதும் மருத்துவம் கற்கையில்
துன்ன ரும்வலி கொண்ட அருணெனும்
இன்ன லொன்றறி யாதவன் நேசிக்க
மின்ன லும்விருப் புற்று மகிழ்ந்தனள்.

மருத்து வக்கலை ஓதிடு மாண்பினன்
தரித்தி ரமறி யாத பொருளினன்
கருத் தொடு கல்வி கற்று முடிந்தபின்
விருப்பொ டுமணப் பேன்எனக் கூறிஞன்.

ஓது கின்ற மருத்துவக் கல்வியை
தீதி லாதிவர் கற்று முடித்தபின்
மாதும் காதல் மனத்தினனும் வந்து
மோதும் நோய்பிணி தீர்க்கமு னைந்தனர்.

தூய காதல ரான இருவரும்
நேய மாகப் பழகிடு நாளினில்
தீய வன்செய லுற்றதி ஞல்பிரிந்
தேய கன்றனர் வெவ்வே றிடங்களே.

ஆன போதிலும் காத லிருவரும்
ஊன மற்ற மனத்தவ ராகவே
தேனி லாவரும் என்ற நினைப்புடன்
வானி லாவினை எண்ணி யிருந்தனர்'

(தொடரும்)

# பறவைகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்

இவ்வாரச் சிறப்புக் கட்டுரை

பறவைகளின் கட்டமைப்பு அடிப்படை அம்சங்களில் ஒரே மாதிரியானவை எனினும் வெவ்வேறு உறைவிடங்களுக்கும் வாழ்க்கை நிலைமைகளுக்கும் ஏற்ப மிகப் பல்வகைப்படுகிறது.

## ஆபிரிக்க நெருப்புக் கோழி

தற்காலப் பறவைகள் யாவற்றிலும் மிகப் பெரிது இது. இது 275 செ மீ உயரமும், 75 கிலோகிராம் வரை எடையும் கொண்டது. பாலை நில வாசியான நெருப்புக் கோழி பல நாள்கள் நீரின்றிச் சமாளிக்க வல்லது.

நெருப்புக் கோழிகள் பறப்பதே கிடையாது. அனல் மிக நன்ருக ஓடும் ஒருகுதிரையை ஓடி முந்திவிடவும், எதிர்ப்படும் தடங்கல்களை அனுயாசமாகத் தாண்டிக் கடக்கவும் அவற்ருல் முடியும் நெருப்புக் கோழிகளின் கால்கள் நீண்டவை. வலிய தசைகள் அமையப் பெற்றவை ஒவ்வொரு காலிலும் தடித்த அடித்தோல் கொண்ட இரண்டே விரல்கள் தாம் உண்டு. காயம்படாமலும் கொதிக்கும் பாலைவன மணலில் விரல்கள் அழன்றுபோகாமலும் அடித்தோல் காக்கிறது. ஒரே கால் உதையால் நெருப்புக் கோழி மனிதனைக் கொன்று விடமுடியும்.

நெருப்புக் கோழியின் சிறகுகள் பறப்பு உறுப்புக்கள் என்ற தன்மையை இழந்து விட்டன. விரைந்த ஓட்டத்தின் போது திடீர்த் திருப்பங்களில் சுக்கான் போலவும், வாய்ப்பான காற்றில் பாய்கள் போலவும் அவற்றை அது பயன்படுத்துகிறது.

நெருப்புக் கோழியின் கால்கள் வலிய வளர்ச்சி பெற்றிருப்பதற்குக் காரணம், எத்தனையோ தலைமுறைகளாக ஓட்டத்தின்போது நிகழ்ந்த இடைவிடாத பயிற்சியே ஆகும்.

நீடித்த காலப் போக்கில் நெருப்புக் கோழியின் கால்கள் எந்த அளவுக்கு நீண்டதோ அதே அளவுக்குக் கழுத்தும் நீண்டது.

இனப்பெருக்கக் காலத்தில் பெண் நெருப்புக் கோழி உறுதியான ஓடுகள் கொண்ட பருத்த முட்டைகளை (இவை கோழி முட்டைகளைக் காட்டிலும் 20 மடங்கு பெரியவை) சாதாரணமான பள்ளத்தில் இடுகிறது. இந்தப் பள்ளத்தைச் சுற்றிலும் கற்களை வைக்கிறது. ஆபிரிக்க நெருப்புக் கோழி. முட்டைகளைப் பகலில் பெண்ணும் இரவில் ஆணுமாசத் தாய் தந்தைக் கோழிகள் இரண்டும் அடைகாக்கின்றன. அவற்றின் வண்ண அமைப்பு இந்தச் செயலுடன் தொடர்பு கொண்டது, பெண் பறவைகள் பழுப்புச் சாம்பல் நிறம் உள்ளவை. பகலில் கூட்டின் மேல் உட்கார்ந்திருக்கையில் அவை எளிதில் கண்ணுக்குப் புலனுக மாட்டா. ஆண் பறவைகள் கரிய இறகுகள் கொண்டவை. சிறகுகளிலும் வாலிலும் அவற்றுக்கு வெண்இறகுகள் உண்டு.

நெருப்புக் கோழிகளின் வெவ்வெண் இறகுகள் அழகுப் பொருள்களாக உபயோகிக்கப்படுகின்றன இறகுகளுக்காக நெருப்புக் கோழிகள் வேட்டையாடவும், தனிப்பட்ட பண்ணைகளில் வளர்க்கவும் படுகின்றன. அவற்றின் இறைச்சியும் முட்டைகளும் உணவாகப் பயன்படுகின்றன.

## காட்டு வாத்து

ஓரங்களில் பூண்டுகள் அடர்ந்த ஏரிகளும், சிற்ருறுகளின் நீரோட்டம் குறைந்த கரையோரப் பகுதிகளும் காட்டு வாத்தின் உறைவிடங்களாகும்.

காட்டு வாத்தின் உடல் கட்டமைப்பு நீர் வாழ்க்கைக்கு ஏற்றவாறு உள்ளது. அதன் வடிவம் தட்டையான அடிப்பகுதியுள்ள அகன்ற படகை ஒத்திருக்கிறது. குட்டைக் கால்களின் மூன்று முள் விரல்களுக்கிடையே நீந்து மென்சவ்வு அமைந்துள்ளது. நீந்தும்போது கால்கள் பின்னேகிச் செல்கையில் சவ்வுகள் விரிந்து துடுப்புகள் அலகுகள் போலச் செயல்படுகின்றன கால்கள் மிகவும் பின்செல்வதால் சுக்கானுகப் பயன்படுகின்றன.

வாத்தினது உடலின் பின் நுனியில் வாலெலும்புச் சுரப்பி அமைந்திருக்கிறது. இதில் சுரக்கும் கொழுப்பை அலகால் எடுத்து, வாத்து தன் இறகுகள் மேல் தாராளமாகப் பூசுகிறது அதனுல் தான் இறகுகள் நீரில் நனைவதில்லை.

வெளிப்புற உருவ இறகுகளுக்கு அடியில் அடர்ந்த படிவாகத் தூவிகள் வளர்ந்துள்ளன. உடல் குளிர்ந்து விடாமல் இவை காக்கின்றன. நன்கு வளர்ச்சியுள்ள தோலடிக் கொழுப்புப் படிவம் இதே வகையில் பயன்படுகிறது.

பூண்டுகளும் பல்வகைச் சிற்றுயிர்களும் வாத்துக்கு உணவாகின்றன அதன் அகன்ற, தட்டையான அலகின் விளிம்புகளில் கொம்புப் பொருளாலானரம்பப் பற்கள் உள்ளன. உணவை நீரோடு சேர்த்து வாயில் இட்டுக்கொண்டபின், நீரை ரம்பப் பற்களின் சந்துகள் வழியே வடிகட்டி வெளியேற்றி விட்டு உணவை மட்டும் விழுங்குகிறது இவ்வாறு அதன் பற்கள் அரிதட்டு போல பயன் படுகின்றன.

அலகின் விளிம்புகளும் கொக்கி போன்ற நுனியும் கடினமானவை. ஆனல் அலகின் மேற்பகுதி மென்மையானது. உணர் நரம்புகளின் பெருந்தொகையான நுனிகள் அதில உள்ளன. ஆதலால் அலகு ஊற்றுறுப்பாகவும் பயன்படுகிறது நீரிலும் வண்டலிலும் உணவு தேட வாத்துக்கு உதவுகிறது.

காட்டு வாத்துக்கள் தரையில் பக்கத்துக்குப் பக்கம் அசைந்தாடியவாறு நடக்கின்றன. கால்கள் ஒன்றுக்கொன்று தூரத்தில் அகன்று அமைந்திருப்பதே இதற்குக் காரணம்.

குளிர் காலத்தில் காட்டு வாத்துக்கள் வடநாடுகளிலிருந்து பறந்து உறையா நீர் நிலைகள் உள்ள பிரதேசங்களுக்குச் சென்று விடுகின்றன. இளவேனிலில் வடநாடுகளுக்குத் திரும்புகின்றன. உறையா நீருள்ள ஆறுகளின் அருகே குளிர் காலத்திலும்கூட அவை தங்கிவிடுகின்றன

ஆண் வாத்து, பெண்வாத்தைக் காட்டிலும் கவர்ச்சியான நிறங்கள் கொண்டது. அதன் தலை வெல்வெட் பச்சை, சிறகுகள் மேல் வெள்ளைக் கூரையிட்ட நீலக் 'கண்கள்'' உண்டு. பெண்வாத்து கவர்ச்சியற்ற பழுப்பு நிறங்கொண்டது. அடைகாக்கும்போது வாத்து கண்ணுக்குப் புலப்படாதவாறு இதன் நிறம் உதவுகிறது.

காட்டு வாத்துக்கள் நீர் அருகே, புதர்கள் அடர்ந்த இடங்களில் தரையில் கூடு கட்டும், முட்டைகள் பொரிந்து வெளிவரும் குஞ்சுகள், உடனே தாய்வாத்தைத் தொடர்ந்து நீரில் இறங்கி நீந்தவும் சுயேச்சையாக இரை தேடிக்கொள்ளவும் தொடங்கிவிடும்.

## பல்வண்ண மரங்கொத்தி

காடுகளில் சாதாரணமாக வசிக்கும் பல்வண்ண மரங்கொத்தி மரங்களிலேயே வாழ்க்கையைக் கழிக்கிறது. மரப்பட்டைகளிலும் கட்டையிலும் வசிக்கும் பூச்சி லார்வாக்களும், வண்டுகளும் மரங்களின் மேல் ஊரும் வேறுபூச்சிகளும் இதன் உணவு ஆகும். கூம்புக்கனித் தாவரங்களின் விதைகளையும் மரங்கொத்தி உணவாகக் கொள்கிறது.

மரங்கள் மீது நடத்தும் வாழ்க்கைக் கேற்ப அதன் கால் விரல்கள் கூரிய ஊகிர்களைக் கொண்டவை. மரங்கொத்தியின் இரண்டு விரல்கள் முன்புறமும் இரண்டு பின்புறமும் நோக்கி இருக்கின்றன. மரங்கொத்தி அடிமரத்தின் மேல் ஏறுகையில் மரப்பட்டையை உறுதியாகப் பற்றிக்கொள்வதற்த இம் மாதிரி அமைப்பு உதவுகிறது. அடிமரத்தின் மேல்கால்களால் கெட்டியாப் பற்றிக்கொண்டு முரடான வால் இறகுகளை அதில் ஊன்றிக்கொள்கிறது. வால் இறகுகள் மீள்விசையுள்ள உறுதியான தண்டும் நுனியில் கூர்மையான விசிறிப் பகுதியும் கொண்டவை சாதாரண வால் இறகுகளுக்கும் மரங்கொத்தியின் வால் இறகுகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. இவ்வாறு மரங்கொத்தி மூன்று ஆதாரப் புள்ளிகள் கொண்டிருக்கிறது. தவிரவும், மரங்கொத்தியின் கால்கள் அகலமாக விலகிநிற்க வல்லவை. மரத்தில் உட்கார்ந்து அது தன் கால்களைப் பக்கவாட்டில் எடுத்து வைக்கிறது இது இன்னும் அதிக நிலையுறுதியைத் தருகிறது.

கால்கள், வால் இவற்றின் அமைப்பு காரணமாக மரங்கொத்தியால் மரத்தின் மீது மிக உறுதியாகப் பற்றி அமர முடிகிறது. ஆகையால் தன் அலகால் பட்டையைப் பெருவிரலுடன் கொத்திக்குடைய அதற்கு இயலும் மரத்தின் மீது மரங்கொத்தி அலகால் தாக்கும் ஒலி காட்டின் நிசப்தத்தில் நெடுந்தூரம் வரை கேட்கும் பைன்மரக் கூம்புக்கனிகளை மரங்கொத்தி அலகால் உடைத்து அவற்றின் விதைகளைத் தின்னும்.

பட்டைக்கு அடியிலும் கட்டையிலும் உள்ள பூச்சிலார்வாக்களை மரங்கொத்தி தனது மெல்லிய நாக்கினுல் வெளியில் எடுக்கிறது. அதன் நாக்கு பிசுபிசுப்பானது பின்னேக்கியமுனைகள்கொண்டசிறு முட்கள் நாக்கு நுனியில்உள்ளன. சிறு பூச்சிகள் நாக்கில் ஒட்டிக் கொள்ளும். பெரியவையோ அதன் நுனியில் கோத்துக்கொள்ளப்படும்.

கேடு விளைவிக்கும் பூச்சிகளைக் கொல்வதன் வாயிலாக மரங்கொத்தி காடுகளுக்குப் பெருத்த நன்மை செய்கிறது.

மரங்கொத்தி இயற்கையான மரப்பொந்திலோ, உலர்ந்தமரத்தைக் குடைந்து பொந்து செய்துகொண்டோ அதில் கூடுகட்டும் கூட்டினுள் உளுத்த மரத்தூள் பரப்பப்பட்டிருக்கும்.

## தகைவிலான் குருவி

தகைவிலான் குருவி, கொசுக்களையும், ஈக்களையும், பிறபூச்சிகளையும் பிடித்தவாறு நாள் முழுவதும் பறந்து கொண்டிருக்கும்.

இக் குருவி பறந்துகொண்டே நீரின் மேற்பரப்பை லேசாகத் தொட்டவாறு தண்ணீர் பருகவும், குளிக்கவுங் கூடச் செய்கிறது. அதன் பறப்பு, வியப்பூட்டும் லாவகமும், விரைவும் கொண்டது தகைவிலான் குருவி சில வேளைகளில் சிறகடித்துப் பறக்கும்; சில வேளைகளில் சிறகுகளை அசைவின்றிப் பரப்பியவாறு காற்றில் சஞ்சரிக்கும். 'சிவ்' வென்று மேலெழும்பும், படுவிரைவாகக் கீழ் நோக்கிப் பாயும். பாய்கையிலேயே செங்குத்தான திடீர்த் திருப்பங்கள் செய்யும்.

இக் குருவியின் குறுகிய சிறகுகள் வெகு நீளமானவை, ஆதலால் மடங்கியிருக்கும்போது உடலுக்கு வெகுதூரம் வரை பின்னே நீட்டிக்கொண்டிருக்கும். கால்கள் வலுவற்றவை.

சிறு அலகு கொண்ட, அகலத் திறக்கும் பெரிய வாய்- பறக்கையில் பூச்சிகளைப் பிடிப்

(14-ம் பக்கம் பார்க்க)

# பெண்கொடி பறக்குது!

'வெற்றிகரமாக வாழ்ந்து காட்டு. வஞ்சம் தீர்க்க அதைவிடச் சிறந்த வழியில்லை' என்று ஒரு பொன்மொழி உண்டு. பாகிஸ்தானில் இதைச் செய்து காட்டியிருக்கிறுர் பெனுஸிர் பூட்டோ.

பெனுஸிரின் தந்தை பூட்டோவை ஜியா அரசு தூக்கில் போட்டது பூட்டோவின் மனைவி நஸ்ரத்தையும் பெனுஸிரையும் வீட்டுச் சிறையில் தொடர்ந்து வைத்துத் தொல்லைப்படுத்தியது ராணுவ அரசு. ஆனல் பெனுஸிர் துவண்டு போகவில்லை. மக்களைத் திரட்டி, தேர்தல் நடத்த வேண்டும் என்று போராட்டம் நடத்தி, அதில் வெற்றி பெற்று இன்று ஒரு இஸ்லாமிய குடியரசின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமை பெற்றிருக்கிறுர் அவர். இதற்கு விதியும் உதவி செய்தது என்பது வேறு விஷயம்!

ஒவ்வொரு முறை ஜனநாயகம் அமுல்படுத்தப்பட்ட பிறகும் மக்களாட்சியில் பல குளறுபடிகள் ஏற்பட்டு ராணுவப் புரட்சி நடப்பது பாகிஸ்தானில் வழசகம். இந்த முறையும் அப்படி நடக்குமா என்ற கேள்விகள் எழலாம்!

சாதாரணமாக பெண்கள் தலைமைப் பொறுப்புக்கு வந்தால் அவர்களை அவ்வளவு சுலபத்தில் அகற்றிவிட முடியாது என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு. இந்திரா காந்தி இஸ்ரேல் நாட்டுப் பிரதமராக இருந்த கோல்டா மியர்; தற்போதைய பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர், பிலிப்பைன்ஸ் அதிபர் திருமதி அக்கினே- இப்படி அநேகமாக எல்லாப் பெண்தலைவர்களுமே உறுதி படைத்த நெஞ்சுரம் கொண்டவர்களாக இருந்தார்கள், இருக்கின்ருர்கள்!

இநதப் பட்டியலில் பெனுஸிர் பூட்டோவும் சேருவார் என்றே நம்புவோம்! (நன்றி: விகடன்)

# வள்ளுவர் கூறும் சுயநலம்

● பூ. நவரட்ணராஜா

ஒருவர் திருவள்ளுவரைத் தினந்தோறுஞ் சென்று வழிபட்டு வந்தார் ஒரு நாள் திருவள்ளுவர் அவரைப் பார்த்து ''என்ன வேண்டும்'' எனக் கேட்டார்.

அவர், சுவாமி நான் இவ்வுலகில் சகல பாக்கியங்களும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும் அதுவே எனது பேரவா'' என்று வேண்டினர்.

அதற்குத் திருவள்ளுவர் ''நீ சுயநலமுள்ளவனுயிரு, உனக்குச் சகல பாக்கியங்களும் சித்திக்கும்'' என்ருர்.

அந்த மனிதர் அதைக் கேட்டுத் திகைப்படைந்தார். வீட்டிற்குச் சென்று சிந்திக்கத் தொடங்கினர் அவருக்குத் திருவள்ளுவருடைய உபதேசம் என்ன வென்று விளங்கவில்லை. அதில் அவருக்குத் திருப்தியுமேற்படவில்லை.

பெரியோர்களெல்லாம் ''சுய நலம் அறவே கூடாது என்று போதிக்கின்ருர்களே'' இவன் ஒரு சுயநலக்காரனென்ருல் மகா கெட்டவன் என்று சனங்கள் பேசுகின்ருர்களே, இப்படியிருக்கத் திருவள்ளுவ நாயனரோ ''நீ சுயநலக் காரனுயிரு'' என்று கூறுகிருரே என மன வேதனைப் பட்டான்

மீண்டும் அவரிடம் சென்று, ''சுவாமி சுய நலத்தை உலகம் பழிக்கின்றது உங்கள் நூலை வானளாவப் புகழுகின்றது. தங்கள் நூலில் எங்கேயாவது சுய நலத்தைப் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்களா?, அதனை எனக்கு விளங்க வைக்க வேண்டு'' மெனக் கேட்டான்

''தன்னைத் தான் காதலன் ஆயின் எனைத் தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால் ''

ஒருவன் தன்னைத் தானே காதல் செய்பவனுக இருக்க வேண்டும்; தன்னிலே தான் பற்றுள்ளவனுக இருக்க வேண்டும். அஃதாவது சுயநலமுள்ளவனுய் இருக்க வேண்டும் எவன் தன்னுடைய கருமமேற் கண்ணுயிருக்கிருனே எவன் தன்னைத்தான் விரும்பி வாழ்கிருனே. அவன் தீய செயலாகிய பகுதியை எவ்வளவு சிறியதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும் பிறருக்குச் செய்யும் தீமை தனக்கே திரும்பி வரும் ஆதலால் சுயநலம் விரும்புவர் - தமது நன்மையை விரும்புபவர் பிறர்க்குத் தீமை செய்யார்.



# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

20

உபாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம் என்பது கொன்றைவேந்தன் வாக்கியம் போன்றதொரு உபதேசமொழி. அரசாங்கப் பாடசாலைகளின் வேறாய் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் உருவான பின், பாடசாலை முகாமையாளருக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஒருதொகை உதவி நன்கொடையாக முற்காலத்தில் வழங்கப் பெற்றது. அதுவும் ஆறுமுகநாவலர் அவர்கள் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் மூலம் ஒழுங்கு செய்த வரன் முறையாம் என்பர் இலங்கையில் 1869ஆம் ஆண்டிலே கல்வித் திணைக்களம் ஆரம்பித்த போது சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாகச் சட்டசபையிலே அங்கத்துவம் வகித்திருந்தார்.

முகாமையாளர் நீண்ட காலமாக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கிருன்ற் எனனும் உதவி நன்கொடை பெற்றபின், நாளடைவில் சிலர் ஆண்டு தோறும் பெற்றதும் உண்டு. அதுவும் பாடசாலைப் பரிசோதகர் பாடசாலைக்குச் சென்று கட்டட வசதி சுற்றுப்புறச் சூழல், வகுப்பறை ஒழுங்கு, பாடங்களின் பெறுபேறு முதலியவற்றைப் பார்வையிட்டும் பரீட்சித்தும் பார்த்து மேலதிகாரிக்குத் தகவுரை எழுதிய பின்னரே அவ்வுதவி கிடைத்தது. அது கிடைத்ததும் முகாமையாளர் அந்நிதியில் ஒரு பகுதியைப் பாடசாலை பழுதுபார்க்கவும் விசாலிக்கவும், தளபாடம் தயாரிக்கவும், அலுவலக இடாப்பு முதலியன வாங்கவும் உபயோகித்து, ஒருபகுதிப் பணத்தை ஆசிரியர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தல் வழக்கம். முகாமையாளர்க்குரியஉபகரிப்பு என்பதும் ஒன்றுஅக்காலத்தில் நிலவியது. ஆசிரியரின்சம்பளத்தில் மூன்று வீதம் முதல் பதினைந்து வீதம் வரை முகாமையாளருக்குக் கொடுக்கபட்டு வந்தது அது தன்னிட்டம் போலக் கொடுத்தனவும் தண்டல் வசூல் முறையில் திரட்டப் பட்டனவும் ஆகும்.

முகாமையாளர் இராசரத்தினம் அவர்கள் 1934ஆம் ஆண்டில் அரசாங்க சபைத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதிக்குப்போட்டியிட்டுத் தோற்றபின் சைவவித்தியா விருத்தச் சங்க அலுவல்களிலும், கல்விச் சீர்திருத்த வழிவகைகளிலும் அதிகமாக ஈடுபட்டு வந்த காலத்திலே அரசாங்கம் ஆசிரியர்க்கான சம்பளத்தை நேரடியாகக் கொடுத்தல் நன்றாகும் எனச் சுட்டிக் காட்டினார் அவர் அங்ஙனம் சுட்டிக் காட்டிய பெருந்தன்மையைப் பாராட்டி அக்காலத்து ஆங்கில வார ஏடான இந்துஒகன் பத்திரிகை 30-8-1934இல் நல்லதொரு தலையங்கம் எழுதியது. அத்தோடுஅரசாங்கத்திடமும் அதைச் செய்யுமாறு பரிந்துரை எழுதியது. அன்றைய தேர்தலில் வெற்றியீட்டிய அருணசலம் மகாதேவா தாமே ஒரு கல்விமானும் கல்லூரி அதிபராயிருந்தவரும் சைவவித்தியாவிருத்திச்சங்கத்துப் பெரும் தூண்களில் ஒருவருமாகவே அவரும் அரசாங்கத்திடம் இராசரத்தினம் கேட்டதைச் செய்யுமாறு வற்புறுத்தி வந்தார் அஃது அவருடைய கடமையுமாகும்

'டிறெக்ற் பேமென்ற்' என்னும் நேரடிச்சம்பளம் கொடுக்கும் முறை நேர்மையானது, உறுதியானது என்றெல்லாம் இராசரத்தினம் அவர்கள் முதன்முதல் 1931ஆம் ஆண்டில் கல்விப் பணிப்பாளருக்கு எடுத்துரைத்தார். அன்று கல்விப் பணிப்பாளர் மிகப்பெரிய உத்தியோகத்தராய் இலங்கை முழுவதற்கும் பெரியவராய் இருந்தார். அவர் பழைய சட்டசபையில் உத்தியோக அங்கத்தவராயிருந்து, தேசாதிபதி முதலானோருடன் நேரடியாக நிலைமையைப் பேசிக்கொள்ளும் சாதகமும் நிலவியது. எல்லா ஆசிரியர்களுக்கும் கொடுக்க முடியாவிட்டால் சிங்கள தமிழ் ஆசிரியர்களுக்காதல் கொடுங்கள் என்பது இராசரத்தினம் அவர்களின் வேண்டுகோள். அன்று வேலை குறைப்பு முதலியன நிலவிய காலமாதலால் கல்விப் பணிப்பாளர் இராசரின் வேண்டுகோளைக் கவனியாதிருந்தபோது, சில முகாமையாளர் நேரடிச் சம்பள முறை நடைமுறையில் வந்தால் தங்களுக்கு ஆசிரியர்கள் மீது பிடி இருக்க மாட்டாது என்று கருதி அத்திட்டத்தை இரகசியமாக எதிர்த்தும் வந்தனர்.

ஆனல் இராசர் 1931ஆம் ஆண்டில் வெளியிட்டவேண்டுகோளில் ஆண்டுதோறும் 60,00,000 ரூபா நன்கொடை வழங்கப் பெறுவதாயும்,இதை முகாமையாளர் பெறும்வரை ஆசிரியர்கள் காத்திருத்தல் சிரமமான தியாகமாகும் என்றும் பரிந்துரை பேசினர். இதனல் முகாமையாளர் வெட்டுகொத்து பெறுகிருர் என்ற அபகீர்த்தியும் இருக்க மாட்டாது என்ருர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வரலாறே இராசரத்தினம் அவர்களின் வரலாறு எனுமளவில் இவரின் சேவை புகழ் பெறுவதாயிற்று. அன்று 1940 ஆம் ஆண்டில் சங்கத்துக்குப் பதிருறு ஆண்டுகள் நிறைந்துவிட்டன. இடையில் இராசர் பழி சுமந்ததும், தூற்றப்பட்டதும் உண்டு. இவருக்கு உட்பகை, புறப்பகை எனக் கருத்து வேற்றுமை கொண்டவர்கள் இருந்தார்கள். இவரும் சில அலுவல்களைத் தீர ஆலோசியாமல் செய்ததும் உண்டு. அவை தாமும் நன்மை பயக்குமென இவர் செய்தனவாதலால் இவரை விரோதி எனக் கூறியவர்கள் துரோகி எனக் கூறவில்லை. அன்று நிகழ்ந்த சில அசம்பாவிதங்கள் ஆராயப்பட்டன. இரு பக்கத்தார் கூற்றையும் காய்தல், உவத்தல் இன்றிக் கருத்தூன்றிப் பார்க்கும் போது, இருபக்கத்தாரிடையேயும் குற்றம் இல்லையாம் என்று தலைசாய்க்க வேண்டும்.

அன்று சங்கத்தின் பரிபாலனத்தில் நூறு பாடசாலைகளில் ஐந்நூறு ஆசிரியர்கள் பதினருயிரம் பிள்ளைகளைப் பயிற்றி வந்தார்கள் முன்னர் சேர் இராமநாதன் அவர்கள் காலத்தில் 20,000 ரூபா நன்கொடையாகப் பெற்ற சங்கம் இப்போது 3,00,000 ரூபா பெற்றது என்பது பெருமகிழ்ச்சிக்கும், பூரிப்புக்கும் உரிய செய்தியாகும். சைவப் பேரன்பர்கள் தங்கள் மனங் கொண்டமட்டும் சங்கத்துக்கு வரையாது வழங்கி வந்தமை, அவர்கள் சங்கத்தின் மீதும், சைவத்தமிழ் மீதும் கொண்ட பேரபிமானத்தைக் காட்டிற்று.

இவ்வாருக இராசர் முகாமையாளராயிருப்பதற்குத் தகுதியில்லாதவர் என்றும். இவர் பாடசாலைகளை உரியமுறையில் நெறிப்படுத்தி நடத்தச் சக்தியில்லாதவர் என்றும் சிலர் குறிப்பிட்டதோடு மேலதிகாரிகளுக்கு விண்ணப்பித்ததும் உண்டு. மேலதிகாரிகள் செய்த விசாரணையின் பெறுபேருக இராசர் தம் முகாமையாளர் பதவியை இழந்ததும் உண்டு அக்காலத்தில் இவர் சங்கத்தின் செயலாளர் என்னும் போர்வையில் சம்பிரதாய பூர்வமாகப் பொது முகாமையாளர் ஒருவரை நியமித்து விட்டுத் தாமே முழுப்பளுவையும் சுமந்து பரிபாலனஞ் செய்ததும் உண்டு.

இவர் தமது அப்புக்காத்தர் வேலையை விடுத்ததோடு தமது மோட்டார் வண்டியைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்குக் கொடுத்ததும் உண்டு இவர் சங்கத்தின் வளர்ச்சிக்காகவே பாடுபட்டார் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். இவருடைய போக்குத் தனியொரு மனிதனின் நடிப்பு என்பதை ,"One man's show" எனக் கண்டித்தவர்களும் இருந்தார்கள்.

இவர் எட்டாண்டுக் காலம் சங்கத்துக்கு அடித்துக் கொடுத்த பின்னரே, பிற்காலத்தில் கைச் செலவுக்காக மாதாந்தம் ஒரு தொகையை "எலவன்ஸ்" எனப் பெற்ருர். இத்தொகை தானும் அன்பர்கள் ஆதரவாளர்களின் உபகரிப்பிலிருந்தே கிடைத்ததாகும். அன்று பிரச்சனைக்குரிய ஆசிரியரின் உபகரிப்புப் பணத்திலிருந்து இவர் எதுவும் பெறவில்லை.

ஆசிரியர்கள் பாடசாலைகளின் வளர்ச்சியின் பொருட்டுத் தாமாகவே விரும்பி நான்கு வீத உபகரிப்புக் கொடுத்தமை ஊரறிந்த செய்தி, சிலர் சொடுக்கத் தவறியதும் உண்டு சிலர் பெருந்தன்மையாக ஆறு வீதம் கொடுத்ததும் உண்டு. பட்டதாரிகள் சிலர் தமக்குரிய நூற்றிருபத்தைந்துரூபாவில்ஐம்பது ரூபா வரையில் கொடுத்ததும் உண்டு.

ஆசிரியர்கள் யாவரும் தவருமல் அன்றுவரை நான்கு வீதம் கொடுத்திருந்தால் அன்று 2,40,000 ரூபா வரை சேர்ந்திருக்கலாம். ஆனல் அன்று சேர்ந்திருந்த தொகை 60,000 ரூபாவாக இருந்தமை ஒரு விபரத் திரட்டில் காணக்கூடியதாக இருந்தது. சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலை ஆசிரியர்கள் அன்று உபகரித்த முகாமைகாரர் உபகரிப்பு மிகவும் குறைந்த தொகையேயாகும். இந்தச் சிறிய உபகரிப்போடு அவர்கள் கள் சங்கத்தின் அங்கத்தவர்களாயிருக்கும் பெருவாய்ப்பினையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் முகாமையாளர் தேர்வில் பங்கு பற்றி வாக்களித்தலாகாது என்று சொன்னவர்கள் வாய் பொத்தும் வகையில் இராசர் தர்க்கரீதியாகக் கூறிய வாசகம் நினைவிற் கொள்ளற் பாலது; 'ஆசிரியர் ஒருவர் ஆசிரியர் பலரின் வாக்குப் பலத்தால் அரசாங்கசபை அங்கத்தவராகலாம் கல்வி நிர்வாக சபையில் இருக்கலாம், ஏன் முகாமையாளருக்கு வாக்களிக்க முடியாது, ஏன் முகாமையாளராயிருத்தலாகாது" என்பனவாகும்.

சைவவித்தியா விருத்திச் சங்கம் பதினேழாம் ஆண்டு மாநாட்டை அன்றைய யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் அப்புக்காத்தர் அரியாலையூர் சி. பொன்னம்பலம் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்டு நடத்தியது. அன்று சங்கத்தின் பொறுப்பிலிருந்த 99 பாடசாலைகளுள் 12 பாடசாலைகள் உருப்படியாக வேறு தனியார் முகாமையாளர்களால் உபகரிக்கப் பெற்றவையாகும்.

அன்று சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் பாடசாலைகள் குடாநாட்டிலே யன்றி, வடமாநிலத்துக்கும் அப்பால் நாடெங்கும் செறிந்து அமைந்திருந்தன. அங்கொன்று இங்கொன்ருக இருந்த போதிலும் பெருமைக்குரியனவாக விளங்கின. அவை அமைந்திருந்த இடங்களும் எண்ணிக்கையும வருமாறு காணலாம்.

1. நெடுந்தீவு — 6
2 புங்குடுதீவு — 7
3. நயினுதீவு — 2
4. எழுவைதீவு — 1
5. காரைநகர் — 3
6. வலிமேற்கு — 13
7. வலி வடக்கு — 7
8 வலி கிழக்கு — 4
9. யாழ்ப்பாணம் — 15
10. வடமராட்சி — 6
11. தென்மராட்சி — 17
12 பச்சிலைப்பள்ளி — 2
13. பூநகரி — 2
14. முல்லைத்தீவு — 3
15. வவுனியா — 1
16 நாவலப்பிட்டி — 2
17. வதுளை — 1

அன்று சங்கம் செய்த சாதனைகளுள் பெரும் பணிகளுள் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு உதவி நன்கொடை பெருத நிலையில் ஏழு பாடசாலைகளை எவ்விதகுறையுமின்றிப் பரிபாலித்து வந்தமையாகும். இன்னும் ஒன்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் முயற்சியால் நடைபெற்ற காவிய பாடசாலையைப் பெரும் கலாநிலையமாகப் பல் கலைக்கழகந்தானே எனக் கருதும் வகையில் நடத்திவந்தமையாகும். இலங்கையில் பல்வேறு மொழிகள் பயிலவும் காவியம் ஓவியம் சிற்பம் சிறுகைத் தொழில்பயிலவும் பெருவாய்ப் பளித்த அந்தக்கலைக்கூடத்தை யார்தான் போற்றவில்லை.

சங்கம் நடத்திய 99 பாடசாலைகளில் 16000 பிள்ளைகள் பயில 500 ஆசிரியர்கள் அரும் பணி புரிந்தார்கள் சைவவித்தியா விருத்திச் சங்கப்பாடசாலை ஆசிரியர்கள் தங்களுக்குரிய எவ்வித முத்திரையோ சீருடையோ குத்திக்கொள்ளாமல் கிராமாபி விருத்திச்சேவைகளில் உளமாரப் பணிபுரிந்தமை சைவமெய்யடியார்கள் வழிவந்த தொண்டின் சிறப்பேயாம் சைவாசிரியர்கள் ஊரவர்களால் பெரிதும் அபிமானிக்கப் பெற்று வந்தார்கள் அன்று சங்கப் பாடசாலைகளுக்குச் சமூகத்தார் உபகரித்த செல்வம் பெரிதாகும். அன்று அரசினர் கொடுத்த உதவி நன்கொடை 3,09,352 ரூபாவாகும்.

அன்று வளர்ந்துவந்த சைவப்பாடசாலைகளில் பயில வந்த பிள்ளைகளின் பெருக்கத்துக்குப்போதியளவு சைவாசிரியர்களைப் பயிற்ற முடியாமை இராசரத்தினம் அவர்களுக்குப் பெருங் கவலையாயிருந்தது கல்விப் பணிப்பாளர் முதலாய மேலிடத்தவர்களின் கட்டுப்பாடு தளர்த்த முடியாததாயிருந்தது நூற்றுக் கணக்கானேரைப் பயிற்றுவதற்கான சைவாசிரிய கலாசாலையும் தகுதிவாய்ந்த தக்க பேராசிரியர்களும் இருந்தும் பயிற்சிக்குக் கட்டுப்பாடு நிலவியது அன்று 51 ஆசிரியர்களே பயிற்சி பெற்று வந்தனர். இந்தக் கட்டுப்பாடு காரணமாக இளைஞர்கள் சிலர் வேறுவழியின்றிப் புற மதத் தாபனங்கள் நடத்தி வந்த பயிற்சிக் கலாசாலைகளில் சேர்வதற்கு மதம் மாறவோ, பெயரளவில் வேறு பெயர் புனையவோ ஆயத்த மாஞர்கள் எனவே சைவாசாரம் மந்தகதியிலே தான் போனதெனக் கருதவேண்டும். அது ஒரு கிரகண காலமாகும் அது மறைப்புக்காலம் எனவும்படும்.

இவ்வாருகச் சங்கத்தின் இருபத்திரண்டாம் ஆண்டின் பெறுபேறுகளை ஆராயும் போது அது பெருங்குடும்பமாயிற்று என்றும் அறியக் கிடக்கிறது. ஒன்ருய் இரண்டாய் வளர்ந்த பாடசாலைகள் நூறுக்கும் அதிகமான நிலையில் விடுதிச்சாலைகள் கைத்தொழில் விருத்தி நிலையங்களும் உருவாயிருந்தன.

1 தமிழ் வித்தியாலயங்கள் — 105
2. துவிபாஷாவித்தியாலங்கள் — 4
3. ஆங்கில வித்தியாலங்கள் — 3
4. ஆசிரிய கலாசாலை — 1
5. ஆண்பிள்ளைகள் விடுதி — 1
6 பெண் பிள்ளைகள் விடுதி — 1
7. கைத்தொழில் விருத்தி நிலையங்கள் — 4

அன்று வட இலங்கையில் அரசினர் பாடசாலைகளில் உண்டான செலவிலும் பார்க்கக் குறைந்த செலவில் இந்துபோர்ட்பாடசாலைகள் பிள்ளைகளின் கல்வித்தரத்தை வெகுவாக உயர்த்தி வந்தன என்பதைப் பெரியவர்கள் கணித்து உளம்பூரித்தனர்

சைவவித்தியா விருத்திச் சங்கம் சைவம் கமழத்தமிழ் வளரப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்திய வேளைகளில், ஆங்காங்கே உருவாய பாடசாலைக்கு வழங்கிய பெயர்கள் சைவப் பெயர்களாகவே இருந்தமையோடு, சுற்றுப்புறச் சூழலில் எழுத்கருளிய தெய்வ மூர்த்தங்களின் திருநாமங்களாகவோ. ஆங்காங்கே வாழ்ந்து நிலையான சமூகப் பணிபுரிந்த புகழ்படைத்தவர்களின் பெயர்களாகவோ அமைந்தன.

இவ்வாருகச் சைவத் தமிழுணர்ச்சி பொங்கிய வேளையில் புறமததாபனங்களால் நடத்த முடியாது போனசில பாடசாலைகளை ஊர் மக்கள் விலை கொடுத்து வாங்கிச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் கொடுத்ததும் உண்டு உதாரணமாக வசாவிளான் ஊரையும். நுணுவில் ஊரையும் கூறலாம்.

இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்கள் சிக்கனவாழ்வில் சிறப்புப்பெற்றவர். அவர் நீராகாரமான மோர் பருகுவதில் பெரும் திருப்தி கண்டவர். பிறர்பிள்ளை தலைதடவத் தன் பிள்ளை தானே வளரும் எனக் கண்டவர்.பண் பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று சங்க நூலில் கண்டாங்கு ஊரோடு ஒத்தோடியவர். ஊரிபிற்பிள்ளைகப் போலவே தம் பிள்ளைகளையும் படிக்க வைத்தவர்.

சைவாசிரிய காலசாலையிற் பயிற்சி பெற்றஆசிரியர்கள் பகல் முழுவதும் ஒட்டு வெப்

(14-ம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**மேடம்:** பெரியோர் பகை, வாகன நஷ்டம், பண முடை, தடையான தொழில் விருத்தி, பெண்களால் உதவி, கல்வியால் புகழ், மாமன்வழி கவலை.

**இடபம்:** திருடர்பயம், வாகன நஷ்டம், நெடுநாள் உறவுசகுப்பகை, இளையசகோதரர் வழி உதவி, தெய்வ கடாட்சம், இயந்திரத் தொழில் வணிகம் செய்வோருக்கு சிறப்பான வாரம்.

**மிதுனம்:** இலட்சமிகடாட்சம், வாகன இலாபம், புகழ் தேடிவரும், புண்ணிய வழிபாடு, வெளியூர் பிரயாண வசதி, கடற்தொழில், இயந்திரத்தொழில செய்வோர்க்கு நன்மையான வாரம்.

**கடகம்:** பொன் பொருள் சேர்க்கை, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், புதுவாகன சேர்க்கை.

**சிங்கம்:** பிதாவழி உதவி, வாகன லாபம், மங்கள காரிய நிவர்த்தி, பெரியோரால் உதவி, விருந்தினர் வருகை, எண்ணிய எண்ணம் நிறைவு, பணவரவு, எதிர்பார்த்தவர் வருகை.

**கன்னி:** வாகன நஷ்டம், மனோநிலையில் மாற்றம, இருதொழில் லாபம், அன்னிய வழி உதவி, எண்ணிய எண்ணம் தடை.

**துலாம்:** விவாக நிச்சயம், விருந்துபசாரம், வாகன லாபம், புத்திர சுகம் மாமன் வழி பொருள்வரவு, எதிர் பார்த்த பிரயாண வசதி

**விருட்சிகம்:** சத்துருபயம் பெரியோரால் நன்மை.வாகன நஷ்டம், உதவி செய்துகெட்ட பெயர், இளைய சகோதரவழி பகை, மங்கள காரியத்தடை, இடமாற்றம் வணிகர்கள்கடற் தொழிலாளர்கள் லாபமடைவர்.

**தனுசு:** புத்திர சுகம், புகழ் தேடிவரும், வாகனலாபம், உத்தியோக உயர்வு, கல்வியால் சித்தி, கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**மகரம்:** மாதாவழி கவலை வாகன லாபம், பெரியோர் ஆசி, புதுத்தொழில், மனை பூமி சேர்க்கை, புண்ணிய வழிபாடு, எண்ணிய கருமம் நடைபெறும்.

**கும்பம்:** மனையில் மங்கள காரிய விருத்தி, வாகன சுகம், பணவரவு, புத்திர மகிழ்ச்சி, தடைப்பட்ட காதல் நிறைவு வெளியூர் போனவர் வருகை, மகப்பேறு.

**மீனம்:** வாக்கு வசீகரம், வாகன சுகம், இலட்சுமிகடாட்சம், மனையில் மங்கள காரியம், பணவரவு. மூத்தசகோதரர் வழியில்நன்மை.


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

※ உங்கள் பாடத்திட்டம் இலகுவில் விளங்கி கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது

செல்வி பவளமலர்
சிவன் கோவில் வீதி, உருத்திரபுரம்

※ நான் படித்தவற்றில் இம்முறையே என் போன்றோருக்கு உகந்தது

என் நந்தகுமார்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

※ மூன்று மாத கால பயிற்சியை முடித்ததும் எனக்குள்ளே பெருமகிழ்ச்சி ஏற்படவைத்தது உங்களின் ஆங்கில கல்வி முறையே.

அலி – சப்றி
நீரோட்டமுனை, சீனன்குடா

※ இப்போது தாராளமாக ஆங்கிலம் பேசக்கூடியதாக உள்ளது. இதற்கான பாராட்டு ''பிறைட் றெயினிங் சென்டரை''ச் சாரும்

ந நகுலேஸ்வரன்
வைரவ புளியங்குளம், வவுனியா

※ உங்கள் தபால் பாடவகுப்பில் சேர்ந்த எனக்கு உங்கள் பாடங்கள் நல்ல பலாபலனை அளித்துள்ளது.

செல்வி சத்தியதேவி
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்

எமது கல்வித்திட்டம்பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க

**BRIGHT TRAINING CENTRE**
P O. Box 162, COLOMBO

02033


# ஹைட்ரஜனின் சகோதரர்கள்

1932 ஆம் ஆண்டில் மர்பி (Murphy) யூரே (Urey), பிரிக்வெட்டே (Brickwedde) என்ற மூன்று விஞ்ஞானிகளுக்கு நோபெல் பரிசு கொடுக்கப்பட்டது உலகத்தில் லட்சக்கணக்கான விஞ்ஞானிகள் இருக்கிறார்கள், ஆனால் கிட்டத்தட்ட நூறு பேருக்குத்தான் இதுவரை நோபெல் பரிசு கிடைத்திருக்கிறது. மனித இனத்துக்குப் பெரும் நன்மை விளைவிக்கிற ஒரு கண்டுபிடிப்பைச் சாதிக்கிறவருக்குத்தான் நோபெல் பரிசு கிடைக்கும். மர்பி, யூரே, பிரிக்வெட்டே அத்தகைய சாதனை படைத்தவர்கள். அவர்கள் ஹைட்ரஜனுக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு என்று கண்டுபிடித்தார்கள்.

ஒரு புரோட்டானும் ஒரு எலக்டரானும் கொண்ட அமைப்பு நமக்குத் தெரிந்த சாதாரண ஹைட்ரஜன் ஆகும். அதனுடைய அணு எண் ஒன்று. அதன் மின்னளவும் ஒன்று. அதன் அணுநிறை 1,00797. மர்பியும் அவருடைய சகாக்களும் அதைப் போல இரண்டு மடங்கு அணு நிறையுள்ள ஒரு ஹைட்ரஜனைக் கண்டுபிடித்தார்கள்

ஆனால் அதன் அணு எண் ஒன்றுதான். அதிலும் ஒரு எலக்ட்ரான்தான் இருக்கிறது. எனவே சாதாரண ஹைட்ரஜனுக்கும் இந்தப் புதிய ஹைட்ரஜனுக்கும் ரசாயனப் பண்புகள் ஒரே மாதிரியாக இருக்கும். தனிம வரிசை அட்டவணையில் (Periodic Table) தனிமங்களின் அணு எண்ணின்படி அவற்றை வரிசைப்படுத்தி இடம் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புதிய ஹைட்ரஜனுக்கும் அணு எண் ஒன்றுகவே இருக்கிறபடியால் அது சாதாரண ஹைட்ரஜனின் இடத்திலேயேதான் அமர்த்தப்பட வேண்டும்.

இதன் காரணமாகவே அது ஹைட்ரஜனின் ஐசோடோப் என்று பெயரிடப்பட்டிருக்கிறது ஐசோடோப்புகள் என்பவை ஒரு தனிமத்தின் சகோதரர்கள் மாதிரி. அவற்றுக்குச் சமமான எண்ணிக்கையில் புரோட்டன்கள் இருக்கும் அனால் நியூட்ரான்களின் எண்ணிக்கை வேறுபட்டிருக்கும்

இதுவரை தெரிந்திருக்கிற எலலாத் தனிமங்களுக்கும் ஐசோடோப்புக்கள் உண்டு அவற்றில் சில இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. மற்றவை செயற்கையாகவே உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

வெறும் புரோட்டானை மட்டும் அணுக் கருவாகக் கொண்டஹைட்ரஜன் ஐசோடோப், புரோட்டியம் (Protium) எனப்படுகிறது அதை $H_1$ எனக் குறிப்பார்கள். நியூட்ரான் இல்லாத ஒரே அணுக் கரு புரோட்டியம் மட்டுமே இதோடு ஒரு நியூட்ரானைச் சேர்த்தால் டியூட்ரியம் (Deuterium) என்ற இரு மடங்கு நிறை கொண்ட ஹைட்ரஜன் ஐசோடோப் கிடைக்கிறது. அது $H^2$ ஆகும்

### டிரிட்டியம்

பிரபஞ்சத்தில் இருக்கிற ஹைட்ரஜனில் புரோட்டியம் 99 சதத்துக்கு மேல் இருக்கிறது. எனவே டியூட்ரியம் காண அரிதான ஒரு பொருள். புரோட்டானுடன் இரண்டு நியூட்ரான்களைச் சேர்த்தால் புரோட்டியத்தைப்போல மும்மடங்கு நிறையுள்ள மூன்றுவது ஹைட்ரஜன் ஐசோடோப் உண்டாகிறது அதற்கு டிரிட்டியம் (Tritium) என்று பெயர். அதை H3 அல்லது T3 என்று குறிப்பிடுகிறார்கள் வாயு மண்டலத்தைக் காஸ்மிக் கதிர்கள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அப்போது டிரிட்டியம் தொடர்ந்து உருவாகிக் கொண்டேயிருக்கிறது ஆனால் அது அல்பாயுசு. தோன்றியவுடனே சிதைந்து ஹீலிய ஐசோடோப்பாக மாறிவிடுகிறது. அது கதிரியக்கமுள்ளது. டிரிட்டியம், டியூட்ரியத்தை விடவும் அரிதானது

பூமியின் வளி மண்டலம் முழுவதிலும் சுமார் 6 கிராம் அளவுக்குத்தான் டிரிட்டியம் பரவியுள்ளது 10 கனசென்டிமீட்டர் காற்றில் தேடினால் ஒரே ஒரு டிரிட்டிய அணுதான் அகப்படும். சமீப காலத்தில் H4, H5 என்ற ஹைட்ரஜன் ஐசோடோப்புகள் செயற்கையாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை தோன்றிய கணமே சிதைந்துவிடும்.

### தனித்தன்மை

ஐசோடோப்புகளைப் பொறுத்தவரை மற்ற தனிமங்களுக்கும், ஹைட்ரஜனுக்கும் ஒரு வித்தியாசமுண்டு மற்ற தனிமங்களின் ஐசோடோப்புகள் இயற்பியல் பண்புகளிலும் ஒரே மாதிரியானவை. அணு நிறை மட்டுமே வேறுபட்டவை. ஆனல் ஹைட்ரஜன் ஐசோடோப்புகளின் இயற்பியல பண்புகள் குறிப்பாக வேறுபட்டவை. ஒவ்வொரு ஹைட்ரஜன் ஐசோடோப்புக்கும் ஒரு தனித்தன்மையுண்டு. அவை வெவ்வேறு வகைகளில் ரசாயன வினை செய்கின்றன புரோட்டியம் டியூட்ரியத்தை விடத் தீவிரமாக ரசாயன வினை செய்யும். ஹைட்ரஜன் ஐசோடோப்புகளின் நடத்தைகளைப் பரிசீலித்த விஞ்ஞானிகள் அவற்றுக்கென்று ஐசோடோப் ரசாயனம் என்கிற தனிப்பிரிவையே உண்டாக்கிவிட்டார்கள். அதன் மூலம் பலவிதமான ரசாயன வினைகளின் நுண்ணிய விவரங்களைக் கூட ஆய்வு செய்கிறார்கள்.

தகவல்-குறிப்பு-செய்தி-விபரம்

## விஞ்ஞானம்

ஹைட்ரஜன், இருக்கிறவற்றிலேயே லேசான, எளிய கட்டமைப்புள்ள தனிமம். அதன் அணுவில் ஒரு புரோட்டானும் ஒரு எலக்ட்ரானும் இருக்கின்றன. பலவிதமாக யோசித்துப்பார்த்து, புரோட்டான் நடுவில் கருவாக அமைந்திருக்கும் எனவும், எலக்ட்ரான் அதைச் சுற்றிவருகிறது எனவும் விஞ்ஞானிகள் முடிவுசெய்தார்கள்.

ஹைட்ரஜன் அணுக்கருவில் இரண்டு நியூட்ரான்களைச் சேர்த்தால் அத்துடன் எப்படியோ ஒரு புரோட்டான் வந்து சேர்ந்து ஹீலியமாக மாறிவிடுகிறது. இவ்வாறு ஹைட்ரஜன் அணுவிலிருந்து மற்றெல்லாத் தனிமங்களும் வளர்ச்சியடைந்திருக்க

(14-ம் பக்கம் பார்க்க)

# முதுகுவலியைப் போக்க புதிய சிகிச்சைமுறை

முதுகு வலிக்கு மிகவும் பாதுகாப்பான, எளிதான சிகிச்சை முறையொன்றைக் கலிபோர்னியா மருத்துவ நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்

முதுகுத் தண்டிலுள்ள வளையங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் ஏற்படும் அழற்சி காரணமாகவும், இந்த வளையங்கள் தங்களது இயற்கையான கட்டமைப்பிலிருந்து நழுவி வந்து விடுவதன் (Slipped disk) காரமாகவும் ஏற்படும் கடுமையான முதுகு வலிக்கு, இப்புதிய முறை சுலபமாக நிவாரணமளிக்கிறது.

மனித உடலில், முதுகுத் தண்டின் வளையங்கள் ஒன்றுடன் ஒன்று உராயாதவாறு பாதுகாப்பதற்கு, மென்மையான குழம்பு போன்ற பொருள் இயற்கையாகவே அமைந்துள்ளது.

முதுகுக்கு அதிக வேலை கொடுப்பதன் காரணமாகச் சில சமயங்களில் இக் குழம்பு கசிந்து முதுகுத் தண்டை விட்டு வெளியேறிவிடக் கூடும். இதனால் முதுகு வளையங்களிடையே, உராய்வு ஏற்பட்டு அவை அழற்சியுறுகின்றன. அருகிலுள்ள நரம்புகளும் இதனால பாதிக்கப்பட்டுத் தாங்க முடியாத வலி ஏற்படுகிறது.

## மருத்துவம்

இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய உத்தியின் கீழ், நோயாளியின் முதுகில் சிறு துளையிடப்பட்டு, அதன் வழியே 'ஊசி' போன்ற ஒரு சாதனம் புகுத்தப்படுகிறது. உடலின் உள்புறத்தைப் படம் பிடித்துக் காட்டவல்ல 'ஃப்ளூரோஸ்கோப்' (Fluoroscope) என்னும் கருவியைப் பயன்படுத்தி முதுகுத் தண்டில் பாதிக்கப்பட்ட பகுதி எது என்பது துல்லியமாகக் கண்டறியப்படுகிறது உடலில் புகுத்தப்பட்ட ஊசியானது அப்பகுதியை நோக்கி நகர்த்தப்படுகிறது. பின்பு பாதிக்கப்பட்ட அப்பகுதியானது துண்டிக்கப்பட்டு அகற்றப்படுகிறது

முதுகில் குறிப்பிட்ட பகுதியை மட்டும் உணர்வற்றுப் போகுமாறு செய்து, இந்த அறுவை சிகிச்சையை எளிதாக நிகழ்த்தலாம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நோயாளி அதன் பின் மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியமில்லை; துணை விளைவுகள் எதுவுமில்லாத இம்முறையானது வலியை நீக்குவதில் மிகச் சிறந்தது என கடந்த 2-ஆண்டுகளில் அனுபவபூர்வமாக அறியப்பட்டுள்ளது.

சிக்கலான அறுவைச் சிகிச்சை, அபத்தான மருந்துகள் ஆகியவை எவையுமின்றி இந்தப் புதியமுறையின் மூலம், முதுகு வலிக்கு எளிய சிகிச்சை அளிக்க முடியும் என்று, கலிபோர்னியாவில் சான் லியாண்ட்ரோ நகரைச் சேர்ந்த 'சர்ஜிகல் டைனமிக்ஸ் இன்கார்பரேட்'' நிறுவனத்தின் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# குழந்தைகளை வளர்ப்பதுபற்றி ஒரு ரஷ்யரின் முரட்டு யோசனை




சிறு குழந்தைகளை பொத்திப் பொத்திப் வளர்ப்பதால் தான் குழந்தைகள் பலவீனமடைகின்றன என்கிறார் 'போரிஸ் நிக்கிடின்' என்ற ரஷ்யர். அவர் தன் குழந்தைகளை எப்படி வளர்த்தார் என்பதை 'குழந்தை வளர்ப்பு முறை' என்ற பெயரில் புத்தகமாகக்கூட வெளியிட்டிருக்கின்றார் இங்கு அந்நூலில் அவர் குறிப்பிட்ட குழந்தை வளர்ப்பு முறையை பாருங்கள்:

''கிருமிகள் அண்டமுடியாத சூழ்நிலையில் குழந்தைகளை வைத்திருக்கவேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் இத்தகைய சூழ்நிலையில் குழந்தைகள் நோய் எதிர்ப்புசக்தியை பெற முடியாது. உதாரணமாக கிருமிகளோ இல்லாத சூழலில் சில எலிகளை விஞ்ஞானிகள் வளர்த்தனர். பின் அவற்றை சாதாரண சூழலில் கொண்டு வந்தபோது நுண்கிருமிகளை எதிர்க்க முடியாது சில நிமிடங்களில் மாணித்து விட்டன'' என்கிறார், இந்த ரஷ்யத்தந்தை.

அவர் மேலும் கூறுவதாவது:– ''சுத்தம் சுகாதாரத்தை நான் எதிர்க்கவில்லை ஆனால் குழந்தையின் துணிகள், பால் புகட்டும் போத்தல்கள் ஆகியனவற்றை நாங்கள் கொதிநீரில் இட்டு சுத்தம் செய்யவில்லை. சாதாரண முறையில் தான் சுத்தம் செய்தோம் குழந்தைகளுக்கு குடிக்கக்கூட சாதாரண நீரையே கொடுத்தோம். தவளும் பருவத்திலேயே கடினமான பொருட்களை அவர்கள் கடித்துப்பார்க்க விடுவோம். எங்கள் குழந்தைகளுக்கு வயிற்றுக் கோளாறு எதுவும் ஏற்பட்டதில்லை. எந்தநோயும் உண்டாகவில்லை. இயற்கையோடு நாங்கள் அவர்களை உறவாடவிட்டதால் அவர்கள் உடல் கிருமிகளை எதிர்க்கும் தன்மை கொண்டதாகி விட்டது.

நோய்களை அலட்சியம் செய்ய வேண்டும் என நான் கூறவில்லை. குழந்தையின் உடல்நிலையை அனுசரித்து சிகிச்சை செய்ய வேண்டும் என்றே கூறுகிறேன். வெறும் புத்தகப் படிப்பை வைத்து சிகிச்சை அளிப்பதை விட இது சிறந்தது.

சாதாரணமாக குழந்தை பிறந்து 24 மணி நேரத்தின் பின் தான் தாய்ப்பால் கொடுப்பது வழக்கம் ஆனால் எங்கள் பெண் குழந்தை பிறந்து 90 நிமிடங்களில் டொக்டரின் ஆலோசனையின் பேரில் தாய்ப்பால் ஊட்டப்பட்டது. இதன் காரணமாக நோய்க்குக் குழந்தைகள் இலகுவில் இலக்காகக்கூடிய பலவீன நிலை குழந்தைக்கு ஏற்படவில்லை. தாயின் முதல்சுரப்பில் எல்லா ஊட்டச் சத்துக்களுடன் நோய்த் தடுப்புசத்துக்களும் அடங்கியிருக்கின்றன இவ்வாறு பால் கொடுப்பதால் தாயின் பால் சுரப்பும் அதிகரிக்கின்றது. மார்புகளில் வீக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகளவில் குறைகின்றது குழந்தையின் ஜீரண உறுப்புக்களும் ஆரம்ப முதலே நன்றாக இயங்குகின்றன,

குழந்தையை வெப்பநீரில் குளிப்பாட்டி கதகதப்பான சூழ்நிலையில் துணிகளைச் சுற்றி வைத்திருப்பதால் குளிரை எதிர்ப்பதற்கான குழந்தையின் இயற்கை ஆற்றல் வெளிவர முடியாமல அமுங்கிப் போய்விடுகின்றது. (ரஷ்யா ஒரு குளிர் தேசம்) அதனால் நாங்கள் குழந்தை பிறந்தது முதலே எப்போதும் துணியால் போர்த்தி வைக்காமல் தினசரி சாப்பாட்டு வேளைகளில் மூன்று நான்கு மணித்தியாலங்கள் நிர்வாணமாகவே திரிய விட்டோம் தூக்கத்தின் போதும் வெளியில் செல்லும் நேரங்களில் மட்டும் காற்சட்டை அணிவித்தோம் கோடை வெய்யிலில் கூட நடக்க வைத்தோம். வெய்யிலில் பாதணி அணிவிப்பதில்லை ஏனெனில் உடம்பின் மற்றப் பாகங்களை விட பாதங்களில் தான் தட்ப வெப்ப நிலையை உணரும் சக்தி அதிகமாக உள்ளது. குளிரோ, சூடோ அதிகரிப்பின் அவை உடனே உடலின் ஏனைய பாகங்களுக்கு தகவலனுப்பி எதிர்ப்புச்சக்தியை தூண்டிவிடுகின்றன

இக்குழந்தைதள் வளர்ந்து பனிக்கட்டியில் விளையாடினால் உடல் நலம் பாதிக்கப்படமாட்டாது. பாதிக்கப்படவும் இல்லை.

நம்முடைய விரல்களை பச்சைக்குழந்தைகள் இறுகப் பிடித்துக்கொள்வது வழக்கம். இவ்வாறு நம் விரல்களின் ஆதாரத்தோடு உட்காரவும் நிற்கவும் தொங்கவும் அனுமதித்தால் அவர்களுடையதசைகள் வலுப்பெறுகின்றன அது போல் நம் உள்ளங்கையால் தாங்கி நிற்கவும் செய்யலாம்.

என்வீட்டில் எண்பது சென்ரிமீற்றர் உயரத்தில் இரு குழாய்களைச் சமதூரத்தில் பொருத்தி அதில சில வளையங்களைத் தொங்கவிட்டோம் எங்கள் குழந்தைகள் ஐந்து மாதத்தில் அந்த வளையங்களில் ஆதரவில் நின்றன குழந்தைகள் ஏறி இறங்க ஒரு சிறிய ஏணியை வாங்கினோம் 80—90 சென்ரி மீற்றர் உயரத்தில் உள்ள மேசையிலிருந்து குதித்து விளையாடினர் 1 கிலோ முதல் 20 கிலோ நிறையுள்ள மணல் நிரப்பிய பைகளை வைத்து குழந்தைகளைக் கொண்டு தூக்கச்செய்தோம். இரண்டரை வயதிலேயே நன்றாக ஓடினார்கள். அந்த வயது முதல் தேகப்பயிற்சிகளையும் அவர்கள் களைப்பில்லாமல் செய்தார்கள். இப்போது பள்ளிக்கூட விளையாட்டில எல்லாப்பிள்ளைகள் முன்னணியில் நிற்கிறார்கள்'' என்கிறார் நிக்கிட்டின்

ஆரம்பத்தில் பல பெற்றோர்கள் இவரது குழந்தைவளர்ப்பு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பின்னர் படிப்படியாக தாங்களே இம்முறையில் குழந்தைகளை வளர்த்தனர்.

நீங்களும் குழந்தைகளை இம்முறையில் வளர்ப்பீர்களா? அதற்குமனம் வருமா-என்ன?

# மனிதாயவாதி; பண்பாளர் அஞ்சாநெஞ்சினர்; அறிவுமலை

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தினர் 4 - 2 - 89 சனிக்கிழமை மாலை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் முன்னை நாள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலை இலக்கியக் காப்பாளர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன். அவர்களுக்கு நிகழ்த்திய அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் :

தொகுப்பு - விழிசைக்குயில்



கலாநிதி நா. சுப்பிரமணியன்:– பேராசிரியர் அவர்கள் எமது பண்பாட்டை ஆராய்ந்தார். நாட்டுக்கூத்துக் கலைகளுக்குப் புத்துயிர் கொடுத்தார். சமய சமரசம் பேணுவதில் அக்கறை கொண்டிருந்தார். தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை மிகத் துணிவுடன் நடத்தி முடித்தார். நீண்ட காலம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்து சிறந்த முறையில் நிர்வாகம் செய்தார் இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல மனித்துவப் பண்புகளுடன் சிறந்து விளங்கினார்.

புலவர் நா. சிவபாதசுந்தரனார்;– தமிழ் படித்தவர்களை உயர்த்தும் நிறுவன மனிதனாக அவர் திகழ்ந்தார். பண்புஎல்லோருக்கும் உண்டு. ஆனால் அந்தப் பண்பையே உடைமையாக்கும் மனிதர்கள் அரிதாகவே இருப்பர். அத்தகைய ஒரு பண்பாளராக அவர் திகழ்ந்தார்.

இலக்கண வித்தகர் இ நமசிவாய தேசிகர்: -பேராசிரியர் அவர்கள் நல்ல பண்பட்ட உடையார் பரம்பரையில் உதித்தவர் இளமையிலேயே மற்றவரைக் கவரும் தன்மை உடையவராக இருந்தார். காட்சிசகு எப்போதும் எளியராயும், கடுஞ்சொல்லர் அல்லராகவும் இருந்தார். தான் இருக்குமிடத்தில் இருந்த படியே அதிகாரம் செய்யும் நல்ல நிர்வாகி தன்னைச் சிறியவராக நினைத்துக் கொண்ட பெரியவர் அவரது முறுவல் இனிது

அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகள்:–எளிமையை அவர் ஒரு போதும் கைவிடவில்லை. எல்லோரையும் அணைத்துச் செல்லும் மனப்பாங்கு கொண்டவராக இருந்தார். 1968 இல் புனித ஹென்றி அரசர் கல்லூரியில் நாடக ஆக்கத்திற்கு உற்சாகம் கொடுத்தார்.

சிவதொண்டன் ஆர் என். சிவப்பிரகாசம் :– ''அவருடைய புன்னகை செந்தமிழ்ச் சிரிப்பு''

திருமதி நேசபூபதி நாகராஜன் அஞ்சலிப்பா இயற்றி இசையமைத்துப் பாடினார்.

திரு சி. சிவமகாராஜா:– மிகப் பழைய காலத்தில் அகத்திய முனிவர் தமிழை வளர்த்தார் இந்த அறிஞரைப் பார்க்கிறபோதெல்லாம் எனக்கு அவர் நினைவே வரும். அவரது எளிமையான வாழ்வு எம் மனதில் இனிமையான நினைவுகளை விட்டுச் சென்று விட்டது 'கலை' என்ற விடயத்தின் ஊடாக அவர் அடிமட்ட மக்களில் தொடங்கி ஒற்றுமை வளர உழைத்தார். அது ஒரு தீர்க்க தரிசன நடவடிக்கையாகும்.

திருமதி கா. பொன்னம்பலம்:– மாணவர்களின் குற்றங்களை மன்னித்து, அவர்களைத் தமது விருந்தாளிகளாக ஏற்றுப் பலரை உயர்த்திய மனிதப் பண்பு அவரிடம் நிறைந்து கிடந்தது.

திரு ச விநாயகரத்தினம்:– அவர் சொல்லில்வல்லன்' ஆக இருந்தார். சோர்விலன் ஆக இருந்தார். அஞ்சாமை உடையவராக இருந்தார். யாழ்ப்பாணத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் நாங்கள் அவரது அஞ்சாமையைக் கண்டோம். தாம் செய்யும் உதவியை வெளியே சொல்லாத பண்பும் அவரிடம் இருந்தது

குறமகள்:– அவருக்குத் தனது பொருள் பண்டங்களில் அக்கறை இல்லை. ஆனால் யாருக்கும் சொந்தவாழ்வு முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்குவார். ''தமிழர் பண்பாடுகளை அநுசரித்துத் தான் போகவேண்டும்'' ''சொற் செட்டாக இருப்பது நல்லது'' போன்ற ஆலோசனைகளை எனக்கும் அவ்வப்போது வழங்கினார்.

திரு வை பொன்னையா:– 1970-1975-ம் ஆண்டுக காலப் பகுதியில் போதனையில் சகல இன மாணவருக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டார்.

இ ராவணேசன், கர்ணன் போர் – போன்ற நாட்டுக் கூத்து மரபுகளை மீட்டெடுத்த நாடகங்களைத் தயாரித்தார்.

'போகம்பரை'ச் சிறைச்சாலைக் கைதிகளுக்கு உணவுப் பார்சல்கள் வழங்கவும் நற் சிந்தனைகள் கூறவும் வழி செய்தார்.

கோகிலா மகேந்திரன்: மற்றவர் விடயங்களில் மனப்பூர்வமாக அக்கறை கொள்ளுதல், எப்போதும் சிரித்தல், எந்த ஒரு மொழியிலும் ஒரு மனிதனுக்கு அவனுடைய பெயர் மிக இனிமையான முக்கியமான ஒலி என்பதை நினைவில் கொண்டு செயற்படுதல் மற்றவர்கள் தங்களைப் பற்றி அதிகம் கதைக்க இடம் விட்டுத்தான் அதிகம் கேட்பவராதல் மற்றவர்களின் ஆர்வங்களை அறிந்து அது குறித்து உரையாடுதல் மற்றவர் தானும் ஏதோ ஒரு வகையில் முக்கியமானவர் என்பதை உணரும் வகையில் உளப்பூர்வமாகச் செயற்படுதல் போன்ற உளவியல் சார்ந்த வழிகளை வாழ்வில் கடைப் பிடித்து அவர் தாராளமான மனிதர்களைத் தன் வழி ஈர்த்துக் கொண்டார்.

அநு வை. நாகராசன்: அவரை ஒரு மனிதாயவாதியாக அரசு கௌரவிக்கவும், அவருக்கு முத்திரை வெளியிடவும் நாங்கள் முயற்சிக்க வேண்டும்.

நாவண்ணன்:– காலன் எமக்குள் களை எடுத்திருந்தால் நாங்கள் கவலைப்பட்டிருக்க மாட்டோம் அவன் நாற்று மேடையை அல்லவா நாசம் செய்து விட்டான்? எங்களுடைய தாய்த் கொப்பினை அல்லவா நாங்கள் தீக்குள்ளே வைத்து விட்டோம்?

கலாகேசரி அ தம்பித்துரை: கலைஞர்களை எப்போதும் ஊக்குவித்து வளர்ப்பவராக அவர் இருந்தார்.

க நாகேஸ்வரன்:- அவர் அறிவு மலை, மனிதமலை அவரது உள்ளம் குழந்தை உள்ளம். அவர் பேசாத கூட்டங்கள் பொலிவிழந்த கூட்டங்கள்.

[14-ம் பக்கம் பார்க்க]



## விலங்குகள் விதம் விதம் 18:

# முதலைகள்

நீர்வாழ் வன வற்றுள் நன்னீரில் வாழும் ஒரே ஊர்வன இன விலங்கு முதலை ஆகும்.

முதலைகள் உலகில் அதிகமாக உள்ள இடம் உகண்டாவின் விக்டோரியா நதியிலுள்ள மோர்சன் நீர் வீழ்ச்சியிலாகும்.

முதலை மிகவும் பலம் வாய்ந்த விலங்கு தரையில் அல்ல, தண்ணீரில்தான் முதலையைத் தரையில் இட்டால் பயந்து நீருக்குள்ளேயே செல்லும்.

ஆசியாவில் 'மத்சர், உப்பு நீர் முதலை' என இருவகை முதலைகள் வாழ்கின்றன பொதுவாகமுதலைகளுக்குள் ஆண், பெண் வித்தியாசம் பார்க்க முடியாது. ஆனால் ஐரோப்பாவில் வாழும் 'காரியல்' இனமுதலைகளில் மட்டும் ஆணிற்கு 'காரி' என்ற உறுப்பு காணப்படுகின்றது. முதலைகள் வெப்பத்தையே அதிகம் விரும்பும் குளிர் தேசங்களில் முதலைகள் வாழ்வதில்லை.

எகிப்தின் நைல் நதியில் முதலைகள் அதிகளவில் வாழ்ந்தன ஆனால் முதலை வேட்டையாளர்களால் அங்கு முதலைகளின் எண்ணிக்கை குறைவடைந்தது. ஆம்.முதலையின் தோல்களை உலகின் பெரும் செல்வர்கள் கைப்பையாகவும். சப்பாத்தாகவும் ஆக்குகின்றார்கள்.

முதலைகள் கண்ணீர் விடுவதில்லை. வெயிலில் முதலைகள்படுத்திருக்கையில் அவற்றின் உடலிலுள்ள உப்புக்களே கண்வழியாக வெளியேறுகின்றன.

முதலைகளின் உணவு நீரில் வாழும் மீன்களே சில வேளைகளில் நீரருந்தும் மான். முயல் போன்றவற்றையும் முதலைகள் உண்ணும் முதலைகள் உணவை சப்பிச் சாப்பிடுவதில்லை. எப்போதும் உணவை சவ்வி உடனே விழுங்கி விடும்.

முதலைகள் மணலில் குழி தோண்டி முட்டையிட்டு மணலால் மூடிவிடும். மணலால் மூடிவிட்டு நீரினுள் சென்று முட்டையையே கண்காணிக்கும் யாரையும் அணுகவிடாது இரண்டு மாதங்களின் பின் சூரிய வெப்பத்தால் பொரித்த குஞ்சுகள் மணலிலிருந்து வெளிப்பட்டு நீரினை அடையும்.

குஞ்சுகளைப் பொறுத்தவரையில் முட்டை இடுவது மட்டுமே முதலையின் வேலை பிறப்பது. வளர்வது எல்லாம் குஞ்சுகளின் பொறுப்பே

முதலை ஒரே தடவையில் ஐம்பது முட்டைகளை இடும்.

இருதாடைகளிலும் அறுபத்தெட்டுபற்களை உடைய முதலைகள் முப்பது வருடம் வரை உயிர்வாழும்.

★ தி. தவபாலன்




## வீட்டுத் தோட்டத்தில்...

வாழை மரமே! வாழை மரமே! —"எங்கள்
வீட்டுத் தோட்டத்து வாழை மரமே!
வேளை தப்பாமல் நீர் இறைப் பேன் — நீ
வீசி வளர்ந்தோர் குலைதரு வாயே.

கத்தரிச் செடியே கத்தரிச் செடியே — எங்கள்
குடித் தோட்டத்துக் கத்தரிச் செடியே
நித்தம் நித்தம் குளிர்நீர் ஊற்றுவேன் — நீ
நிறையப் பூத்துக் காய்தரு வாயே

வெண்டைச் செடியே வெண்டைச் செடியே
- எங்கள்
வீட்டுத் தோட்டத்து வெண்டைச் செடியே
வண்டல்இட்டு மடுநீர் பாய்ச்சுவேன்—நீ
வட்டி நிரம்பநீள் காய்தரு வாயே.

மிளகாய்ச் செடியே! மிளகாய்ச் செடியே —
எங்கள்
மனைத் தோட்டத்து மிளகாய்ச் செடியே
கிளறிக் கிண்டி உரமிட்டு வளர்ப்பேன் — நீ
கூடை நிறையக் காய்தரு வாயே.

தக்காளிச் செடியே தக்காளிச் செடியே— எங்கள்
தலத் தோட்டத்துத் தக்காளிச் செடியே
முக் காலமும் வந்து நன்கு கவனிப்பேன் — நீ
மனங்குளிரக் காய் கனிதரு வாயே

— மணிமன்றன்

| இப்படி எழுதாதீர்கள் | | இப்படி எழுதுங்கள் |
|---|---|---|
| இயக்குனர் | — | இயக்குநர் |
| பொருட்கள் | — | பொருளகள் |
| முன்னூறு | — | முந்நூறு (300) |
| சொல்வதெழுதல் | — | சொல்வதெழுதுதல் |
| உடமை | — | உடைமை |
| தகமை | — | தகைமை |
| வெண்ணை | — | வெண்ணெய் |
| மாதானை | — | மாதுளை |
| சிரோன்மணி | — | சிரோமணி |
| வெண்காயம் | — | வெங்காயம் |

## பூந்தோட்டர் அங்கத்தவர்கள்

இலக்கம் 201 ஸ்ரீஹரன் கணேசன்
வயது 12, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,

இலக்கம் 202 மணிவண்ணன் சியாமளன்
வயது 08, சின்மய பாரதி வித்தியாசாலை, சுதுமலை

இலக்கம் 203 குணசிங்கம் சத்தியன்
வயது 09, முகமாலை றோ. க. த. க. பாடசாலை, எழுதுமட்டுவாள்

இலக்கம் 204 சரவணபவ சர்மா இராசசேகரன்
வயது 12. கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்

இலக்கம் 205 பொன்னுச்சாமி சாந்தகுமார்
வயது 12, சேர் வைத்தியலிங்கம் ம.ம. வித்தியாலயம், வேலணை

இலக்கம் 206 நாகேஸ்வரன் சுதர்சனன்
வயது 13, ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

இலக்கம் 207 கமலறஞ்சன் கதிரவேலு
வயது 11, விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை

இலக்கம் 208 மதுரநாயகம் பெ நிரேஷன்
வயது 09, சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 209 வைரவன் ரமேஸ்குமார்
வயது 11, ட்ரீபேர்க் கல்லூரி, சாவகச்சேரி

இலக்கம் 210 மரீன்ருஜ லக்ஷி இக்கினேசியஸ்
வயது 13 திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை, யாழ்ப்பாணம்

அன்புக்கினிய
தம்பி தங்கைகளே!

பூ அண்ணாவின் அன்பான வணக்கங்கள். நீண்ட காலத்துக்குப் பின்னர் உங்களுடன் தொடர்பு கொள்கிறேன். இல்லையா?

நீங்கள் அன்புடன் எழுதும் கடிதங்கள் ஆக்கங்கள் கிடைக்கின்றன. பூந்தோட்டத்தில் அங்கத்தவராகியுள்ள உங்களில் சிலர் புதிய முகவரியில் கடிதம் எழுதியுள்ளதை இக்கடிதங்கள் மூலம் அறிய முடிந்தது இவ்வாண்டின் ஆரம்பத்தில் உங்களில் சிலர் புதிய பாடசாலைகளுக்கு மாறியுள்ளது தெரிய வந்துள்ளது.

ஏற்கனவே அங்கத்தவர் இலக்கத்தைப் பெற்றுள்ள பூந்தோட்ட உறுப்பினர்கள், இப்போது புதிய பாடசாலைக்குச் சென்றிருந்தால் தங்கள் புதிய பாடசாலை முகவரியை எமக்கு அறியத்தருவது நல்லது. இவ்வாறு அறிவிக்கும் போது அங்கத்தவர் இலக்கத்தையும் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு அங்கத்தவருக்கும், விரைவில் "அங்கத்தவர் அடையாள அட்டை" வழங்கப்படவிருப்பதால் இது எமக்கு உதவியாக அமையும்.

அன்பான,
பூ அண்ணா

## பல்வகைச் செய்திகள்

● அமெரிக்காவில் ஜோன் டில்லிங்கர் என்ற கொள்ளைக்காரனின் பொருள்களை வைத்து அவனுக்கென ஒரு தனி அருங்காட்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

● ஜேர்மன் தேசத்தில் ட்ரெயினிலிருந்து இறங்கும் பயணிகளுக்கு ரெயில்வே நிர்வாகம் சைகிள்களை வாடகைக்கு விடுகின்றது.

● 3000 ஆண்டுகளுக்கு முன் பாரசீக நாட்டில் ஆட்டு மந்தையைக் காக்கும் நாயைக் கொன்றால் தண்டனை என்ன தெரியுமா?
500 கசையடிகள்

● படிப்பில் கெட்டித்தனமாக இருப்பவர்கள் பெண் பிள்ளைகள்தான் என பாடசாலைப் பிள்ளைகளை வைத்து ஆய்வு செய்த இங்கிலாந்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

● அமெரிக்காவில் பழுதடைந்த கார்களை குப்பையில் வீசி விடுவர் அப்படி குப்பையில் வீசப்படும் கார்கள் ஆண்டிற்கு 7,000,000 ஆகும்.

● தற்போது அமெரிக்காவின் வெளியில் 'காமா'க் கதிர்களை ஆய்வு செய்ய விண்கலம் ஒன்றைச்செய்து வருகின்றது இது 1990 ஆம் ஆண்டு ஏவப்படும்.

தமிழாளன்
நல்லூர்

## ஆமையின் வேகம்

கடல் ஆமை நிலத்தில் மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லும் இயல்புடையது ஆனாலும் அது தண்ணீரில் மிகவும் வேகமாக நீந்திச் செல்லும் ஆற்றல் பெற்றது தண்ணீரில் வேகமாக நீந்திச் செல்லும் நாற்கால் விலங்கு ஆமையே.

பசிபிக்லெதர்பேக் டர்ட்டில் என்னும் ஆமையின் வேகம் ஒரு மணிக்கு 35 கிலோ மீட்டருக்கு மேல் என்று கணக்கிடப்பட்டுள்ளது. நீருக்குள் ஆமைக்கும் முயலுக்கும் ஓட்டப் பந்தயம் வைத்தால் ஆமையே நிச்சயமாக வெற்றி பெறும்.

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.......................
திகதி

.......................
பெற்றோர் / ஆசிரியர் கையொப்பம்

(பதினைந்து வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)




## மாதம் ஒரு பிறமொழிக்கதை

ஈராக்கியக் கதை

**மொகமட் குதீர்**

ஆங்கிலம் வழி தமிழில்:

**சாந்தன்**

அழகிய கொடி வேலைப் பாடுகளும் கருங்காலி விளிம்புகளும் இழைக்கப்பட்டிருந்த அக்கதவு அசையாதிருந்தது. அதிற்செதுக்கியிருந்த எழுத்துக்களைப் பார்த்தபடி, அலி கொஞ்சநேரம் நின்றான். காலத்தால் அவை மங்கியிருந்தன. என்றாலும் அந்தக் தெளிவற்ற எழுத்துகளிடையே, ஹிஜ்ரா திகதியையும் சீர் மிகுந்த இவ்வீட்டைக் கட்டியதற்கான பிரார்த்தனையையும் 'இங்கே வருகையில் இறைவனை நினைக்கவும்' என்ற வசனத்தையும் அவனால் வாசிக்க முடிந்தது.

அலி உள்ளே நுழைந்தான். வர்ணம் பூசி மினுக்கப்பட்ட செங்கற்கள் பாரிய நடைகூடத்தைக் கடந்து ஒரு முற்றத்தை அடைந்தான். முற்றத்தின் நடுவில் ஒரு முசுக்கட்டை மரம் நின்றது. சுற்றியிருந்த சுவரில் நிலக்கரியால் உருவங்கள் தீட்டப்பட்டிருந்தன. சூரிய ஒளியில் சுவர் பளிச்சிட்டது. அந்தக் கரிய வடிவங்களிடையே அலி ஆவலுடன் தன் மாமியைத் தேடினான். ஆனால், அவள் அங்கே ஓரிடமும் இல்லை.

பல காற்குதிரைகளும், நீண்ட கூந்தற் பெண்களும் கைப்பிடி உடைந்த சாடிகளுமாய் அக்கரிய வடிவங்கள் தோற்றமளித்தன. முற்றத்துச் செங்கற்களை மிதித்தபடி அக்குதிரைகள் நிற்பதாயும், அவற்றின் கண்களிற் படாமல் அந்த உடைந்த சாடிகளொன்றினுள் தன் மாமி ஒளித்திருப்பதாயும் அலி கற்பனை செய்து கொண்டான். மரத்திலிருந்த குருவிகளையும் குதிரைகளின் கனைப்பொலிதான் கலைத்திருக்கும். தரையிலும் சுற்றிவர சிதறியிருந்த சருகுகளிலுந் தெரிந்த குருவி எச்சங்களைக் கண்டு அலி இப்படி நினைத்தான்.

முன்னர் இங்கு மனிதர்கள் வாழ்ந்ததற் கடையாளமாய் மரத்திலிருந்து ஒரு கூண்டு தொங்கியது. முற்றத்தில் திரிந்த குதிரைகளுக்குப் பயந்து அவர்கள் பின்னர் போயிருக்கலாம்.

அலி கூறினான்: ''மாமி... நான்தான் அலி...'' மாடி உப்பரிகையைத் தாங்கும் மரத்தூண்கள். மின்னும் வெய்யிலில் வெள்ளைத் தேள்கள் போலக் காட்சி தந்தன. அலி, நடை கூடத்திற்குத் திரும்பிவந்து மாடியேறினான். பக்கச் சுவரில் அழகுறத் தீட்டப்பட்டிருந்த ஒரு விலங்குலகம் காட்சியளித்தது. செட்டை இல்லா மீன்கள், தீயுமிழும் பாம்புகள், பெரிய சிறகுகளும், நீண்ட அலகுகளுங்கொண்ட பறவைகள். இந்த அதிசய வடிவங்களைத் தாண்டி, மாடி அறைகளுக்கு முன்னால் வந்து சேர்ந்தான். இந்த இடத்துயன்னல் பலகையெல்லாம் வண்ணந் தீட்டப்பட்டிருந்தன.

அலி, மீண்டும் கூப்பிட்டான்:

''மாமி, எங்கே இருக்கிறீங்கள்?...''

மாடியில் ஒரேயொரு கதவை விட மற்றெல்லாம் சாத்தியிருந்தன. அலி உள்ளே பார்த்தான். வர்ணந் தீட்டிய வளைவிலிருந்து உள் நுழைந்த சூரிய ஒளி, அந்த அறையில் விநோதமான ஒரு சூழலை உருவாக்கியிருந்தது. சித்திர வேலைப்பாடுகள் பளபளக்கும் பித்தளைக் கால்களுடனான ஒரு கட்டிலின் நடுப்பகுதி அவன் கண்களிற் பட்டது. அந்த வெளிச்சத்தில் குளித்தபடி ஒரு மஞ்சட் போர்வையாற் போர்த்துக்கொண்டு, நரைத் தலைப் பெண்ணொருத்தி அதிற் படுத்திருந்தாள். அவள் தலையைச் சுற்றித் தோற்றமளித்த ஒளி வட்டத்திலிருந்து, மயிர் பொசுங்குவது போன்றதொரு வாசனை கிளம்பி அந்த அறையில் பரவுவது போலிருந்தது அலிக்கு.

''மாமி, நித்திரையா?'' அவள் காதருகில் மெல்லக் கேட்டான். அந்தப் பெரிய கட்டிலைத் தவிர, அவ்வறை வெறுமையாயிருந்தது. யன்னல்கள் சாத்தியிருந்தன. சுவர்கள் பழைய செய்தித் தாள்களால் மறைக்கப் பட்டிருந்தன. கிழவியின் தலை அசையவில்லை. கட்டிலின் பித்தளைக் கால்கள் மட்டும் பளபளத்துக் கொண்டிருந்தன.

''பள்ளிக்குப் போக முதல் இங்க வந்தநான், மாமி...'' என்றான் அலி.

''ஏன் வந்தநீ, கள்ளப் பயலே?... இந்த வீட்டிலிருந்து எதையாவது தூக்கிக் கொண்டு போகவோ?'' –புண்ணாய்ப்போன வாயிலிருந்து வருவது போல குரல் கரகரத்து ஒலித்தது.

''அப்பாவுடையதுகளைப் பாக்க வந்தநான், மாமி...''

''ஆர் உன்ரை மாமி?...ஒவ்வொரு நாளும் இங்கை வந்து குழப்படி பண்ணி சுவரெல்லாம் கிறுக்குகிற வம்பன்களிலை ஒருவன் தானே, நீ...?''

கட்டிலிற் படுத்திருந்த தன் மாமிக்குக் கிட்டப் போய், அலி சொன்னான்.

''நீங்கள் உண்மையா என்னுடைய மாமிதான். நான் உங்கட தம்பியின் மகன்...''

''ம்ஹூம்.. என்ரை தம்பியைப்பற்றிக் கதையாதை அவன் செத்துப் போனான் அவன்ரை சீவன் ஆறுதலாயிருக்கட்டும். அவன்ர பேரைக் கெடுக்க வேண்டாம்..''

ஒரு விஷேஷமான வாசனை அலியின் மூக்கிற் பட்டது. அது அவனுடைய அப்பாவின் பொருட்களிருக்கும் பெட்டியிருந்து வந்ததாக இருக்கலாம்.

''எண்டாலும், அவர் என்னுடைய அப்பா...நான் அவருடைய இரண்டாந் தாரத்து மகன்'' அலி தயவாகச் சொன்னான்.

''ஆ! அந்த நாய்...அவனின்ர பேரை எனக்குச் சொல்லாதை பசாசே... இந்த யமன் என்ர உயிரைக் கொண்டு போகாதோ ..என்னை நிம்மதியாய்க் கிடக்கவிடு...''

''நான் பசாசில்லை, மாமி.. நான் வளருமட்டும் அப்பா உயிரோட இருந்தது எனக்குத் தெரியாது. பிறகொரு நாள், அம்மாதான் சொன்ன, அவர் பின்னடிக்கு தன்னை விட்டிட்டு வந்து இங்க உங்களோட இருந்தவர் எண்டு ''

''அந்தச் செய்வினைக்காரி.. நல்லகாலமா, அவன் அவளோட கொஞ்ச நாள் தானிருந்தவன்... அவன் செத்ததெண்டு தெரிஞ்சும் ஒரு நாளைக்காவது வந்து பாத்தவளோ?...''

''அதெல்லாம் பழங்கதை. மாமி அப்பா எனக்கு என்ன வைச்சிட்டுப் போயிருக்கிறரெண்டு பாக்கத்தான் நானிப்ப வந்தநான் ... தயவு செய்து அதுகளைப் பாக்க விடுங்கோ...''

[15-ம் பக்கம் பார்க்க]

---

## இந்துபோர்ட் . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தில் புழுகியவர்கள் என்று கண்டு இரங்கி. அவர்களின் விடுதிச்சாலையை ஒலைக்கிடுகினால் வேய்ந்து உறங்கவைத்தவர். காற்றோட்ட வசதியின் பொருட்டு எந்தவிதமான அடைப்புக்களோ இல்லாமல் அந்த மண்டபம் விசாலமாயிருந்தது. மகாயுத்தகாலமாயிருந்தும் தானியங்கள் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடாயிருந்தும் அவர் பயிற்சியாளரிடம் 1942 ஆம் ஆண்டில் 250 ரூபா மாத்திரமே பெற்று மூன்று வேளை உணவும் இடையில் தேனீரும், முழுக்குக்கு எண்ணெய் சிகைக்காயும் குடிமக்கள் சேவையும் பிறவசதிகளும் கொடுத்தவர் கலாசாலைவளவு நிறைய முருங்கை மரம் காய்த்து நின்ற வேளையில் முருங்கைக் காயும் தரமான துவரம்பருப்பும் நாள்தோறும் கிடைத்தமை கண்ட பயிற்சியாளர் அவற்றைத் தினசரி என நகைச்சுவையுடன் வரவேற்றதும் உண்டு. இன்று ஒரு கரண்டி சுண்டற் கடலை ஐந்து ரூபாவுக்கும் எமக்குக் கிடைப்பதில்லை. ஆனால் அன்று 1942 விடுதியில் அகப்பைக் கணக்கில் கிடைத்தன. கடலை, பருப்பு, கிழங்கு வகைகள் யாவும் திருநெல்வேலித் தண்ணீரில் நன்றாக அவிந்தன. அக்காலத்துப் படுக்கை மண்டபம் நாவலர் பெயரால் வழங்கியது. பல்கலைக்கழக விடுதிகள் பெருமக்கள் பெயரால் வழங்குதல் ஒரு பாரம்பாரியத்தில் வந்த வழக்கமாகும்.

சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கு மனம் கோணாது தேவையறிந்து அள்ளிக் கொடுத்த செல்வச் சீமான்கள் வரிசையில் குரும்பசிட்டியூர் நா. பொன்னையா அவர்கள் தனியிடம் வகித்தவர். ஒருநாள் இராசரும் பொன்னையரும் உரையாடிக் கொண்டு உலாவியபோது, இராசர் பொன்னையரிடம் ''ஐயா! ஒரு ஐயாயிரம் ரூபா கடன் தேவையாயிருக்கிறது'' என்றார். ''என்ன தேவைக்காக்கும்?'' என்று பொன்னையர் விசாரித்ததும், ''ஐயா! ஒடு வாங்க வேண்டும், நீரிறைக்கும் யந்திரம் ஒன்று அவசியம் வாங்க வேண்டும்'' என்றார். ''சரி பார்க்கலாம்'' என்று கூறிப் போன பொன் ஐயா அவர்கள் மறு நாள் பெரிய லொறியில் 3000 ரூபா பெறுமதியான ஒடுகளும், பாரிய நீரிறைக்கும் யந்திரமும் அனுப்பியிருந்தார். குறிப்பறிந்து கொடுத்தவன் குரும்பசிட்டியான் என்று பாட்டுப் பாட உள்ளம் துள்ளுகிறது. இன்னும் இரண்டாம் மகாயுத்த காலத்தில் பலாலியில் பட்டாளத்தார் பாசறை அமைந்திருந்த பாரிய கட்டடங்களை இராசர் விலைக்கு வாங்கிப் பெரிய கல்லூரி அமைக்கத் துடித்தபோது வள்ளல் பொன்னையா அள்ளிக் கொடுத்த தொகை பெரிது.

இராசரின் அயரா உழைப்பினால் 1945 ஆம் ஆண்டில் அங்கத்தவர் சார்பில் சங்கம் சேர்த்த தொகை 42, 771 ஆகும். அதற்கு முந்திய 1944 ஆண்டில் திரட்டிய தொகை 26, 562 ரூபாவாகும். இத்தகைய புள்ளி விபரங்களைக் கணிக்கும் போது எங்கள் பிரதேசத்திலே சென்ற நூற்றுண்டிலே அமெரிக்க போதகர்கள் நடத்திய பாடசாலையொன்றில் ஆசிரியருக்கு ஆண்டொன்றுக்குக் கொடுத்த சம்பளம் 18 டொலர் என்றும், அதே காலத்தில் அவர்கள் எங்கள் பெண்பிள்ளை ஒருத்தியைத் தங்கள் சூழலில் அரவணைத்துப் படிப்பித்தற்குச் செலவிட்ட தொகை 20 டொலர் என்றும் அவர் தம் அறிக்கையிலேயே காணக் கிடக்கிறது. இதனால் எங்கள் மன வளர்ச்சியும், அவர்கள் மத வளர்ச்சியும் இருந்தவாறு உயத்துணர்ந்தறிந்து கொள்ளலாம். [தொடரும்]

## பறவைகள் பலவிதம் . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கு ஏற்றதாக இருக்கிறது.

கட்டடங்களின் சுவரிலோ, இறவாரத்திலோ தகைவிலான் குருவி கூடுகட்டி முட்டையிட்டு அடைகாக்கிறது. அது ஈரமண் அல்லது வண்டல் உருண்டைகளைத் தன் உமிழ் நீரால் ஒட்டிக் கூட்டைத் திறமையுடன் கட்டுகிறது. கூடு, மேல்புறம் திறந்த அரையுருண்டை வடிவான கிண்ணம் போன்று இருக்கும்.

இலையுதிர் காலத் தொடக்கத்திலேயே, பூச்சிகளின் எண்ணிக்கை குறையும்போது, தகைவிலான் குருவிகள் வடநாடுகளிலிருந்து ஆபிரிக்கா, தெற்கு ஆசியா ஆகியவற்றிலுள்ள வெப்ப நாடுகளுக்கு வலசை போய்விடுகின்றன. மறு ஆண்டின் நிலையான கதகதப்புள்ள இளவேனிலுக்குக் கட்டியம் கூறுபவை போல அவை வட நாடுகளுக்குத் திரும்பிவிடுகின்றன.

பூச்சிகளை உணவாகக் கொள்வதன் வாயிலாகத் தகைவிலான்குருவிகள் நமக்கு பெருத்த நன்மை செய்கின்றன. தகைவிலான் குருவிகளின் ஒரு குடும்பம் மட்டும், கோடை காலத்தில் கேடு விளைவிக்கிற பத்துலட்சத்துக்கு மேற்பட்ட பல்வகைப் பூச்சிகளைத் தின்று ஒழிக்கின்றது.

## மனிதாயவாதி . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர் க. சச்சிதானந்தன்: அவரைப் பற்றிப் பேசுவதாயின் பல மணித்தியாலங்கள் பேசலாம் ஆனால் பேச வேண்டிய நேரத்தில் பேச முடியாதிருந்த நாங்கள் இப்போது பேசி என்ன பயன்?

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை: கலைக்கழக நாடகப் போட்டிகளை அவர் நடத்திய காலத்தில், நேர்மையான முறையில் பரிசுகளை வழங்கினார் அவருடன் கருத்து வேறுபாடு கொணடிருந்தவர்களுக்கும் பரிசு கிடைத்தது அதன் மூலம் அவர் எதிரிகளையும் வெற்றி கொண்டார் அவருக்கு வருடா வருடம் நினைவு நாள் களத்தினால் நிகழ்த்தப்பட வேண்டும்.

## ஹைட்ரஜனின் . . .

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும். எல்லா அணுக்களிலும் கருக்களிலுள்ள புரோட்டான்களுக்குச் சமமான எண்ணிக்கையில் எலக்ட்ரான்கள் இருக்கின்றன

ஹைட்ரஜனில் ஒரு எலக்ட்ரான் உள்ளது. ஹீலியத்தில் இரண்டு எலக்ட்ரான்கள், யுரேனியத்தில் 96. இவை எப்படி அணுக்கருவைச் சுற்றி வரும்? விளக்கைச் சுற்றி விட்டில் பூச்சிகள் பறக்கிறதைப் போலக் கண்டபடி எலக்ட்ரான்கள் அணுக்கருவைச் சுற்றி ஒடுகின்றனவா அல்லது அதில் ஏதாவது ஒரு ஒழுங்கு இருக்கிறதாஎன்று விஞ்ஞானிகள் யோசனை செய்துகொண்டேயிருந்தார்கள்.

நீல்ஸ் போர் (Neils Bohr) என்னும் விஞ்ஞானி கோள்கள் சூரியனைச் சுற்றிவருகிறதைப்போல எலக்ட்ரான்களும் குறிப்பிட்ட பாதைகளில் அணுக்கருவைச் சுற்றி வருகின்றன என்று ஒரு கருத்தை வெளியிட்டார். அவர் சொன்ன கருத்துகளின் அடிப்படையில் போடப்பட்ட கணக்குகளின் விடைகள் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவற்றுடன் ஒத்துவருகின்றன. எனவே அவர் சொன்னது சரியாகத்தானிருக்கும் போலிருக்கிறது என்று எல்லா விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

## தவத்திரு . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

யப்பானில் புனித சவேரியார் இந்த 500 வருடவிழா கொண்டாடப்பட்ட போது அடிகளாரை மேற்றிராணியார் அனுப்பி வைத்தார்.

''என்னை இறைவன் நன்கு படைத்தனன் தன்னை அறிந்து தமிழ் செய்யுமாறே''

என்பதை குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த இத்துறவிக்கு இலங்கையில் இறுதி ஏழு ஆண்டுகளை இறைவன் கொடுத்து இருந்தார். ''தான் விட்ட தவறுகளுக்கு இறைவனிடம் மன்னிப்புக்கோரி இறைவன் தன்னுடன் மிக நெருக்கமாகத் தன்னை இணைத்தகாலம்'' இது என அடிக்கடி சொல்வார். குருமகர் வீண்கதைகட்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது இவரது கொள்கையாக இருந்தது'' தான்செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்துவிட்டதாகவும், படுக்கையில் நோய்வாய்ப்பட்டு நடக்கமுடியாது இருக்காது இறைவனடி சேரவேண்டும்'' என விரும்பிய அடிகளாரை இறைவன் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். குருவாக வருமுன்இவர் பட்ட இன்னல்கள் யாவும் குருத்துவத்தை இறுதிவரை கடைப்பிடிக்க இறைவன் அளித்த கொடைகள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் புகழும், செல்வச்செழிப்பும் இவரை அணுகிய போதும், தான் ஓர்துறவி என்பதை மறக்கவில்லை.

## கறுப்பு ராஜ்யம்....

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

கிழவியின்குரலில் இப்போது மென்மை வந்தது. "கட்டிலுக்குக் கீழ கிடக்கு... பார்" என்ருள்.

"கள்ளர், கனக்க மிச்சம் விடேல்லே.."

அலி கீழே குனிந்து ஒரு பெட்டியை இழுத்தான். வெள்ளி ஆணிகள் பதித்த பெட்டி.

"திறந்து பத்து வருஷமாச்சு..."

அலி, மூடியை இழுத்ததும் அது கிறீச்சிட்டுத் திறந்தது. நன்கு உடுத்து, மார்பில் வைத்த தொப்பியின் மேல் மடித்த கைகளும், கால்களில் இந்த உலகைச்சுற்ற உதவிய இற்றுப்போன சப்பாத்துக்களுமாய் பெட்டியினடியில் தன் தந்தை படுத்திருப்பதாக அலி கற்பனை செய்து பார்த்தான். அவன் அதை மூடப் போனபோது ஏதோ ஒரு வாசனை மூக்கிலடித்து. தலை சுற்ற வைத்தது. நாடியைப் பெட்டி விழிம்பில் வைத்து அதன்மேற் சாய்ந்தான். மாமி சொல்லுவது கேட்டது.

"இதுகள்தான் அவன்ரை பொக்கிஷங்கள்..."

அலி, மீண்டும் உள்ளே பார்த்தான். வெவ்வேறு தட்டுக்களில் ஏதேதோ கிடப்பது தெரிந்தது. ஒன்றில், சுருட்டப்பட்ட ஒரு கருமணிக் கோர்வையும் தடிப்பாக மடிக்கப்பட்ட கடுதாசியுமாய், காப்புக்கயிறுபோல ஏதோ தென்பட்டது இன்னொன்றில் அலங்காரப் பிடிபோட்ட கண்மைப்போத்தல் ஒன்றிருந்தது அதைக்கண்டதும். அலி கத்தினுன்."

"கண் மைப் போத்தில்..."

"அதுஅவன்ர மூத்த தாரத்தின்ரை..." –கிழவி சொன்னுள்"... அவளின்ர மிஞ்சினது உதுகும் ஒரு சோடி தோடும்தான். அதையும் அவன் ஆருக்கோ வித்துப் போட்டான்".

பெட்டியினுள் எல்லாம் ஒழுங்காக அடுக்கி இருந்தன. ஒரு உடைந்த கண்ணுடியின் இரண்டு துண்டுகளிலும் தன் முகம் பிரதிபலிப்பதை அலி கண்டான். தன் வாழ்வின் இந்த முக்கியமான வேளையில் தந்தையின் பெருமைமிகு தேட்டங்களிடை அவனிருக்கிருன்... தகப்பனைப் பற்றிய தெளிவின்மைகளிலிருந்து விடுபட்ட இவ்வேளை... மஞ்சள் நூலிற் கோர்த்த முத்துமாலை –இதுவும் அப்பாவுடைய முதல் மனைவியினுடைய தாயிருக்லாம். இவற்றை விட, காற்சட்டை இல்லாமல் ஒருகோட், வெள்ளியுறையுடன் ஒரு குத்துவாள் முடிமயிர்ச் சுருளுடன் கறுப்பு நூலால் சுற்றுப்பட்டிருந்த ஒரு தீப்பெட்டி, ஏதோ கணக்குகள்கிறுக்கப்பட்டிருந்த சிறிய டயறியொன்று... அதன் பக்கங்களைப் புரட்டியபோது கசங்கிய புகைப்படமொன்று கிடைத்தது அடர்ந்த மீசையும் பளபளக்கும் சிறிய விழிகளுங்கொண்ட ஒரு மனிதன்.

"இது அப்பாவின் படமா, மாமி?" என்றுகேட்டான்.

"ஓ..."

அலி, படத்தைத் தன் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டு பெட்டியை மூடினுன். அதைக் கட்டிலடியிற் தள்ளி விட்டு எழுந்தான். படத்திலிருக்கிற அந்த உறுதியான மனிதனின் இரத்தந்தான் தன் நாளங்களில் ஓடுகிறது என்ற எண்ணம் அவனுக்குப் பெருமிதத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியிருந்தது இழந்திருந்த தன் அடையாளத்தை மீண்டும் கொண்டதாய் உணர்ந்தான். வடிவிழந்து சுருங்கிய தன் மாமியின் முகத்தை நீண்ட நேரம் உற்றுப் பார்த்தான். அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். அறையெங்கும் பரவி, அவள் தலையைச் சுற்றி ஒளி வட்டம் போட்டிருந்த வெளிச்சத்தில் அமைதியாகப் படுத்திருந்தாள்.

உப்பரிகையிலிருந்து அலி கீழே பார்த்தான். கறுப்புக் குதிரைகளும் குருவிக்கூண்டும் இன்னமும் வெய்யிலிற் குளித்தபடி அங்கே இருந்தன. குதிரைகளும் வேவு காட்டிய, படி, தாங்கும் விலங்குலகையும் தாண்டி, மெல்லப்படியிறங்கி அலி அந்தப் பழைய வீட்டிலிருந்து வெளியே தெருவுக்கு வந்தான்.

தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது, அந்தக்கறுப்பு ராஜ்யத்தின் விலங்குகள் குழப்பிவிட்ட அப்பாவின் நிறத்தையும் வெண்கலச் சம்மட்டிகளின் ஓசையில் அமிழ்ந்துபோன மாமியின் குரலையும், அப் புராதன வீட்டின் கதவில் காலம் மறைக்க முயன்றிருந்த திகதியையும் நினைத்துப் பார்க்க முயன்ருன்.


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

* உங்கள் பாடத்திட்டம் இலகுவில் விளங்கி கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.
செல்வி பவளமலர்
சிவன் கோவில் வீதி, உருத்திரபுரம்
* நான் படித்தவற்றில் இம்முறையே என் போன்ரேருக்கு உகந்தது.
என். நந்தகுமார்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி
* மூன்று மாத கால பயிற்சியை முடித்ததும் எனக்குள்ளே பெருமகிழ்ச்சி ஏற்படவைத்தது உங்களின் ஆங்கில கல்வி முறையே.
அலி – சப்றி
நீரோட்டமுனை, சீனன்குடா
* இப்போது தாராளமாக ஆங்கிலம் பேசக்கூடியதாக உள்ளது. இதற்கான பாராட்டு "பிறைட் ரெயினிங் சென்டரை"ச் சாரும்.
ந. நகுலேஸ்வரன்
வைரவ புளியங்குளம், வவுனியா
* உங்கள் தபால் பாடவகுப்பில் சேர்ந்த எனக்கு உங்கள் பாடங்கள் நல்ல பலாபலனை அளித்துள்ளது.
செல்வி சத்தியதேவி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

எமது கல்வித்திட்டம்பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O. Box 162, COLOMBO
02034



# உடனடி வேலைவாய்ப்பு

★ சவூதி அரேபியா
1. லிகிதர் (CLERK)
2. மணிக்கூடு திருத்துபவர்
3. விற்பனையாளர்
4. டீசல், பெற்ரேல் மெக்கானிக் (OPEN VISA)
5. சாரதிகள் (OPEN VISA)
6. கனரகச் சாரதிகள் 150 பேர்
7. அரம்கோ கிளினேர்ஸ் 425 S.R

சாப்பாடு தங்குமிடவசதி

★ TAIWAN தாய்வான்
150 தொழிற்சாலை ஊழியர்கள்
வயதெல்லை 18—32 வருடம்
ஆங்கில அறிவு அவசியம்
பிரயாணம் இரண்டு வாரங்களில் ஒழுங்குசெய்து தரப்படும்.
2 வருட ஒப்பந்தம்
சம்பளம் 350 U.S.D
With Work Permit

கடவுச்சீட்டு, 3 கடவுச்சீட்டு அளவிலான போட்டோக்கள், BOND செய்த கடவுச்சீட்டு.
மேலதிக விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்:

**T. V. TRAVELS & TOURIST**
Brown Road, Kokuvil.
(Railway Station Front)

1-வது கிளை:
திரு. K. நவரத்தினம்
**T. V. ரவல்ஸ் & ரூரிஸ்ட்**
19, சிவன்பண்ணை வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

2-வது கிளை:
திரு. எஸ். காராளசிங்கம் (யப்பான்)
**T. V. ரவல்ஸ் & ரூரிஸ்ட்**
25, காரக்காட்டு லேன், வண்ணுர்பண்ணை,
யாழ்ப்பாணம்.
02372



**A/L MATHS**
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]



# சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு
## வீட்டுப் பணிப் பெண்கள்
100 பேர் தேவை

சம்பளம் மாதம் ரூபா 2500/=
ஆங்கிலம் பேசத் தெரிந்தால் மாதம் ரூபா 3000/=

உடனடியாக தொடர்பு கொள்ளவும்

**க. பரமநாதன்**
13, ஆஸ்பத்திரி வீதி
கொட்டடி — யாழ்ப்பாணம்
02409



**2 மணி நேரத்தில் Blocks**

அதி நவீன இயந்திர சாதனங்கள் கடுகதி வேகத்தில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன தெளிவாக அச்சிடக்கூடிய புளொக் (Block) தயாரிப்பில் முன்னேடிகள்.

**கலர் படங்கள்**

★ கலர் பிலிம் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்
★ நவீன கொம்பியூட்டர் மூலம் பிரதிகள்
★ 4 அல்லது 5 நாட்களில் விநியோகம்

**FAN இலவசம்**

2-2 89 முதல் எமது ஸ்ருடியோவுக்கு ஓடர் தரவரும் 2000 அன்பர்களுக்கு ஒரு விசிறி இலவசமாக வழங்கப்படும்.

**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம்
02382

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# நடுவானில் விமானம் பிளந்தது!

## பசுபிக் சமுத்திரத்துக்குள் பயணிகள் வீசப்பட்டனர்

(ஹவாய்)

ஹவாய் தீவுகளுக்கருகில் நடுவானில் பறந்து கொண்டிருந்த 747 போயிங் விமானத்தில் ஒரு பகுதி பிளவுபட்டதால் விமானத்தில் பயணம் செய்தவர்களில் பதினுறு பேர் பசுபிக் சமுத்திரத்தில் வீசப்பட்டனர். கடலில் வீழ்ந்தவர்கள் எவரும் மீட்கப்படவில்லை.

350 பயணிகள் வரை பயணம் செய்த அந்த விமானத்தை விமானி சாதுரியமாக ஹெனலுலு விமான நிலையத்தில் தரையிறக்கினுர். ஹெனலுலுவிலிருந்து நியூஸிலாந்து நோக்கி சென்று கொண்டிருக்கையிலேயே விமானத்தில் பிளவு ஏற்பட்டது.

விபத்துக்கான காரணம் விமானத்தின் கட்டுமானத்தில் ஏற்பட்ட தவறே என விபத்து பற்றி விசாரணை நடாத்திய எவ்.பி.ஐ நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ்விமானம் 1977-ம் ஆண்டு சேவையிலீடுபடுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஜனதிபதி தேர்தல் ஆட்சேபமனு ஐந்து நீதியரசர் குழு நியமனம்

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஜனதிபதி தேர்தல் தெரிவு குறித்த ஆட்சேப மனு மீதான ஆரம்ப சட்ட எதிர்ப்பாணையை விசாரிப்பதற்கென ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழுவை பிரதம நீதியரசர் பரிந்த ரணசிங்க நியமித்துள்ளார்.

இந்த நீதியரசர் குழுவில் பிரதம நீதியரசர் பரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச்.டி. தம்பையா, ஜி. பி. எஸ். டி. சில்வா எம். ஜமீல், ஏ. ஆர் பி. அமரசிங்க ஆகியோர் பணிபுரிவர், தேர்தல் ஆட்சேபமனு மீதான விசாரணை அடுத்த மாதம் 13-ம் திகதி ஆரம்பமாகும்.

### வாசகர்கள் கவனத்துக்கு

இன்றைய வார முரசொலியின் உள்பக்கங்களில் சிலவற்றில் 12 02 1989 என அச்சிடப்பட்டுள்ளது சிலவற்றில் திகதி குறிப்பிடப்படவில்லை. கடந்த இரு வாரங்களாக வாரமுரசொலி வெளிவராததால் இவ்வாறு அச்சிடப்பட்டது தவிர்க்க முடியாததாகி விட்டது

● நிர்வாகம்

## புதிய பஸ் நடத்துனர்களாக 125 பேர் நியமனமாவர்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் புதிதாக நூற்று இருபத்து ஐந்து பேர் பஸ் நடத்துனர்களாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இப் பதவிக்கு ஏற்கனவே சுமார் ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தார்கள். இவர்களில் இருந்து தகுதியானவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்பொழுது நடைபெற்று வருகின்றது. நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்கள் குறுகிய கால சேவை முன் பயிற்சியின் பின்னர் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் டிப்போக்களில் தற்காலிக நடத்துனர்களாக நியமிக்கப்படுவர்.

இது தவிர வடபிராந்திய போக்கு வரத்துச் சபையில் முன்னர் கடமை புரிந்த ஊழியர்களின் குடும்பத்தினர்களில் இருபத்து ஐந்து பேர் விசேட சலுகைத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே தற்காலிக பஸ் நடத்துனர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### தமிழ் இளைஞர்...

வருக்கும் எனவும், தீவிரவாதக் குழுக்களுக்கிடையே நடைபெற்று வரும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவருமாறும் அவர் சகல தீவிரவாத குழுக்களையும் கேட்டுக்கொண்டார்.

திரு. பாலகுமாரின் இந்த வேண்டுகோளை இந்திய வானெலி நேற்று அறிவித்தது

### பாடசாலை ...

மூடப்படும் பாடசாலைகள் ஆகஸ்ட் மாதம் இருபத்திரண்டாம் திகதி மீண்டும் திறக்கப்படும். பின்னர் நவம்பர் மாதம் முப்பதாம் திகதி மூன்றும் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் அனைத்தும் மூடப்படும்.

முஸ்லிம் பாடசாலைகள் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்படும். மேமாதம் ஒன்பதாம் திகதி முதல் ஜூலை மாதம் இருபத்தியொராம் திகதி வரையும் பின்னர் ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் திகதி முதல் டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரையும் முறையே இரண்டாம், மூன்றும் தவணைகளுக்காகத் திறந்திருக்கும்.

### ஜே. வி. பியின் ...

சென்று கொண்டிருந்த இவர்கள் மீது ஜே. வி. பியினர் திடீரென நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் இம்மூவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இம்மூன்று பொலிஸாரிடமும் இருந்த சீன தயாரிப்பு ஏ. கே-47 ரக துப்பாக்கிகளையும் தாக்குதல் நடாத்தியவர்கள் எடுத்து சென்று விட்டதாக வெரித்தாஸ் வானெலி தெரிவித்தது.

இதேவேளை மேலும் இரு இனந்தெரியாதவர்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

### தேடுதல் சோதனை...

அமைப்புக்களும் தமது முகாம்களை பலப்படுத்தியுள்ளன. தமது பாதுகாப்பு நிலைமைகளைச் சமாளிக்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

### சட்டமாணி ...

இந்த சட்டமாணி பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றியோரில் பதினேழு பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பதினேழு பேரினதும் விபரம் வருமாறு:-

வி. மகேந்திரன்- அரியாலை, கே. ரி. எம். விஜயகுமார்- கந்தர்மடம், வி. நாகமுத்து- நல்லூர் வடக்கு, என். சிவகுமாரன் – நல்லூர், ரி. சிவானந்த செல்வம் - சாவகச்சேரி, எஸ். செல்வராஜன் – யாழ்ப்பாணம், பி. சபாரட்ணம்– யாழ்ப்பாணம், ஜி. தில்லைநாதன் – சுதுமலை தெற்கு. பி. சிவலோகநாதன் – அராலி தெற்கு, எம். றொனி – மன்னர், ஜே. ஆர். எஸ். யோசப்– யாழ்ப்பாணம், பி. உமாராணி- யாழ்ப்பாணம், கே. சதாசிவம் - நல்லூர், கே. மனேகரன் - புலோலி மேற்கு. ஏ. எஸ். சந்திரகுமார் - கிளிநொச்சி, எஸ். எட்வேர்ட்- மன்னர், கே. செல்வராஜா- பொத்துவில்.

### ஸ்ரீமாவோ ...

பெற்றது போன்று ஆரோக்கியமான விவாதங்களை மீண்டும் பாராளுமன்றத்தில் காணக்கூடியதாக இருக்கும்'' என்றும் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீமாவோவின் வருகை ஜனநாயகத்தை பலப்படுத்தும் என்றும், வடகிழக்கு மாகாண சபைக்கு அவர் தமது வழிகாட்டலையும், அனுபவத்தையும் வழங்குவார் எனவும் தாம் நம்புவதாக வடகிழக்கு மாகாணசபை முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

### கப்பல்மூலம் ...

தற்கான நடவடிக்கைகளை புதிய வர்த்தக கப்பலதுறை அமைச்சர் ஜனப் ஏ. ஆர். மன்சூர் மேற்கொண்டுள்ளார். ஹஜ் கடமையை நிறைவேற்ற விரும்பும் குறைந்த வருமானம் உள்ளவர்களின் நன்மைகருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்

### கைஸ் ..

மக்களின் புனர்வாழ்வுப் பணியை மாணவர் இளைஞர் பொது மன்றம் (கைஸ்) துரிதமாக மேற்கொள்ளவுள்ளது. இன்று முதல் இதற்கான உதவிகோரி இந்த மன்றம் ஈடுபடவுள்ளதால், அனைவரையும் ஆதரவு தருமாறு 'கைஸ்' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

### வறுமை . .

பிரேமதாஸ கூறினர். தொடர்ந்து பேசிய ஜனதிபதி பின்தங்கிய நிலையில் உள்ள வறிய மக்கள் அனைவரும் இந்த நாட்டின் விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாக இருந்த போதும் எவருமே இதனைப் பற்றிக் கவலைப்படவில்லை. நாட்டை முன்னேற்ற அவர்களை முன்னேற்றவேண்டும்'

பாவனையாளர் பொருட்களை வாங்குவதற்கு அளிக்கப்படும் நிதியுதவி மூலம் அடிப்படை உணவுப்பொருட்களைஇவர்கள் பெற்றுக்கொள்ள விருப்பதால் உணவுப் பொருள் உற்பத்தியும் அதிகரிக்கப்படவுள்ளது.

வறுமை ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்த சகலரும் கட்சி வேறுபாடின்றி பாடுபடவேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னுர்.

## காலமானர்

### இலகுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த இலகுப்பிள்ளை கணபதிப் பிள்ளை 23-2-89-ல் காலமானுர். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், தேவராஜா (தூதுவராலயம் ஜெனிவா), பரமானந்தம் (ஜேர்மனி), தயாபரன், நிசாகரன் (கொக்குவில், இந்துக் கல்லூரி), சிவபாக்கியம், தவமணி, சோதிமலர், மங்கையற்கரசி, பத்மராணி, தேவநாயகி, மனேகரி, ஆகியோரின் அன்புத் தந்தையும், வல்லிபுரம் (இருபாலை) காலம்சென்ற சிதம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், எஸ். குணரத்தினம் (K.K.S.சிமெந்து ஆலை), கே. தணிகாசலம் (யாழ்பாணம் அச்சகம்), த. குமாரசாமி J. P. (விஜ்யாஸ் மன்னர்), சாந்தினி (ஜெனிவா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரபாகரன், கிருபாகரன், சசிகரன், பாலினி, குமுதன், குமுதினி, அனித்தா குமாரசாமி, ஆகியோரின் அன்பு பேரனுமாவார் அன்னரது இறுதிச் சடங்குகள் திங்கள் காலை 10 மணிக்கு (27-2-89) அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கொக்குவில் கணக்கமரத்தடி மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இத் தகவலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஆடியபாதம் வீதி,
(மருத்துவபீடம் முன்பாக)
கொக்குவில் கிழக்கு.

த குமாரசாமி J. P.

02437

## காலமானர்

### திருமதி வள்ளியம்மை கதிரவேலு

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி வள்ளியம்மை கதிரவேலு 24-02-1989 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னர் வைத்திலிங்கம் கதிரவேலு (இரசாயனக் கூட்டுத்தாபனம் பரந்தன்), அவர்களின் அன்பு மனைவியும், பவானி, கிருபாநிதி ஆகியோரின் அன்புத்தாயாரும், பிரேமராணி, தங்கேஸ்வரன், சத்தியேஸ்வரன் ஆகியோரின் சிறிய தாயும், காலம்சென்ற சதாசிவம் (பூபாலபிள்ளை), காலம்சென்ற யோகம்மா, செல்லம்மா, ஆறுமுகம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல 283, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்: வை. கதிரவேலு

02432

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 26-02-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது